தமிழ்நாடு அரசு

நான்காம் வகுப்பு

தமிழ்

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2019*
திருத்திய பதிப்பு - *2020*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விலை : ரூ

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் - பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!



தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

தமிழ்

நான்காம் வகுப்பு

முன்னுரை

குழந்தைகள் சிறு பூ போன்றவர்கள்! அற்புதமானவர்கள்!

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தனித்திறன் என்னும் முத்தைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள். அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறன்களாகிய முத்துகளைக் கண்டு வெளிக் கொணர்வதே உண்மையான கல்வி.

தமிழையும் தமிழர்களையும் போற்றும் வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி, சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில் கொண்டு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது, இதில் குழந்தைகளின் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணப் படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மேலும், குழந்தைகள் தயக்கமின்றி தனது எண்ணங்களை வெளிப்படுத்த உதவி புரியும் வாங்க பேசலாம்.

குழந்தை வகுப்பறை சூழலைத் தாண்டி சிந்திப்பதுடன் அதனை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ள உதவும் சிந்திக்கலாமா?

குழந்தைகள் விளையாடிக் கொண்டே தங்களது மொழித் திறனை வளப்படுத்திக் கொள்ள உதவும் மொழியோடு விளையாடு.

ஒவ்வொரு குழந்தையின் படைப்புத் திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் **கலையும் கைவண்ணமும்.**

திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் **செயல்திட்டம்.**



மாணவர்கள் புதிய செய்திகளை அறிந்து கொள்ள உதவும் **அறிந்து கொள்வோம்**

ஒற்றுமையுடன் சேர்ந்து செயல்பட உதவும் **இணைந்து செய்வோம்**



புதிய பாடநூலில் இவைபோன்ற செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்க வேண்டிய திறன்கள், அந்தந்தப் பாடப் பகுதியிலும் பெற வேண்டிய கற்றல் விளைவுகள், பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப் பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன் பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்திப் பாடநூலில் உள்ள விரைவுக் குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்.
- திரையில் தோன்றும் கேமராவைப் பாடநூலின் QR Code அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம், அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாடப் பகுதிகளைப் பயன்படுத்தலாம்.

QR GUIDE

குறிப்பு: இணையச்செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஓர் QR code Scanner பயன்படுத்தவும்.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும் இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும் ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த சமூகம் அமையட்டும்

வாழ்த்துகள்..!

ஆக்கியோர்.

பொருளடக்கம்

வ. எண்	பாடத்தலைப்பு	ப. எண்
1.	அன்னைத் தமிழே!	01
2.	பனைமரச் சிறப்பு	06
3.	ஏழு இறக்கைக் குருவியும் தெனாலிராமனும்	17
4.	முளைப்பாரி – பாடல்	24
5.	பண்படுத்தும் பழமொழிகள்	29
6.	முயல் அரசன்	36
7.	வெற்றி வேற்கை	44
8.	விடியும் வேளை	52
9.	கரிகாலன் கட்டிய கல்லணை	59
10	காவல்காரர்	67
11	எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்!	73
12.	யானைக்கும் பானைக்கும் சரி	83
13.	நன்னெறி	87
14.	பனிமலைப் பயணம்	90
15.	ஆராய்ந்திட வேண்டும்	96
16.	திருக்குறள் கதைகள்	104
17.	பசுவுக்குக் கிடைத்த நீதி	112
18.	வேலைக்கேற்ற கூலி	119
19.	உலா வரும் செயற்கைக்கோள்	126
20.	மாசில்லாத உலகம் படைப்போம்	130
21.	காட்டுக்குள்ளே பாட்டுப்போட்டி	136
22.	ஆனந்தம் விளையும் பூமியடி	143
23.	கணினி உலகம்	147
24.	மலையும் எதிரொலியும்	154
25.	நீதிநெறி விளக்கம்	162
26.	உறவுமுறைக் கடிதம்	166
27.	அறிவுநிலா	171
	அகரமுதலி	178

AFHRS2

மின்னூல்

VU2DYI

மதிப்பீடு

B321_4_TAMIL_LANG

இணைய வளங்கள்

1 அன்னைத் தமிழே!

அன்னைத் தமிழே – என்
ஆவி கலந்தவளே!
என்னை வளர்ப்பவளே!
என்னில் வளர்பவளே!
உன்னைப் புகழ்வதற்கே
உலகில் பிறப்பெடுத்தேன்
சொல்லில் விளையாடச்
சொல்லித் தந்தவளே!
சொல்லில் உனது புகழ்
சொல்ல முடியலையே!

– நா. காமராசன்

KMA3DA

பொருள் அறிவோம்

என் அன்னையாகிய தமிழே! என் உயிரில் கலந்தவளே! என்னை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், என் உடன் சேர்ந்து வளர்பவளே! உன்னைப் புகழ்வதற்காகவே இவ்வுலகில் பிறந்துள்ளேன். சொல்லைக் கொண்டு விளையாடுவதற்குச் சொல்லிக் கொடுத்தவளே! அதே சொல்லினால் உனது புகழை என்னால் கூற முடியவில்லையே!

ஓசை நயமும் கருத்தும் மிக்க பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.

வாங்க பேசலாம்

- பாடலை ஓசை நயத்துடன் பாடுக.
- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்து மகிழ்க.
- மொழியின் சிறப்பினைக் கூறும் வேறு பாடலை அறிந்து வந்து பாடுக.

நாம் வளரும் போதே நம்முடன் சேர்ந்து வளர்வது தமிழ் மொழி எவ்வாறு? கலந்துரையாடுக.

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 அன்னை + தமிழே – என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) அன்னந்தமிழே ஆ) அன்னைத்தமிழே

இ) அன்னத்தமிழே ஈ) அன்னைதமிழே

02 பிறப்பெடுத்தேன் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பிறப் + பெடுத்தேன் ஆ) பிறப்பு + எடுத்தேன்

இ) பிறப் + எடுத்தேன் ஈ) பிறப்ப + எடுத்தேன்

03 மறந்துன்னை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) மறந்து + துன்னை ஆ) மறந் + துன்னை

இ) மறந்து + உன்னை ஈ) மறந் + உன்னை

04 சிறப்படைந்தேன் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) சிறப்பு + அடைந்தேன் ஆ) சிறப் + அடைந்தேன்

இ) சிற + படைந்தேன் ஈ) சிறப்ப + அடைந்தேன்

05 என்னில் என்ற சொல்லின் பொருள் ....

அ) உனக்குள் ஆ) நமக்குள்

இ) உலகுக்குள் ஈ) எனக்குள்

வினாக்களுக்கு விடையளி

01 சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?

02 எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

03 இப்பாடலின் ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார்?

1. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்களை எடுத்து எழுதுக.

என்னை	–	என்னில்
	–	
	–	
	–	

2. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

கலந்தவளே

செயல் திட்டம்

- மொழியின் சிறப்பினைக் கூறும் இரண்டு பாடல்களை எழுதி வந்து படித்து / பாடிக் காட்டுக.

பாடலை நிறைவு செய்வோம்

பட்டாம் பூச்சி பறந்து வா

பறக்கும் பூவாய் ....

பட்டுமேனி ஓவியம்

பார்க்க ....

தொட்டு .... பார்க்கவா

தோழனாக ....

சொல் உருவாக்கலாமா?



1. .... 3. ....

2. .... 4. ....

வண்ணம் தீட்டி மகிழ்வோம்



அறிந்து கொள்வோம்



தமிழ்ச்செல்வி,
தமிழரசன்... என்பன
போலத் தமிழ்மொழியை
மட்டுமே பெயராகப்
பயன்படுத்த முடியும்.

2 பனைமரச் சிறப்பு

மாலையில் பள்ளி முடிந்து, அழகனும், வண்ணமயிலும் மகிழ்வுடன் பேசிக் கொண்டே வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வழியில் சாலையோரத்தில் பந்து போல கருப்பு நிறத்தில் ஒரு பழம் விழுந்து கிடந்தது. அதை எடுத்துப் பார்த்தனர். அது என்னவென்று தெரியவில்லை. அவர்கள் அவ்வழியே வந்த தாத்தாவிடம் இது என்னவென்று கேட்டனர்.

அழகன்	:	தாத்தா, தாத்தா இது என்ன பழம்?
தாத்தா	:	இதுவா! இதுதான் பனம்பழம்
வண்ணமயில்	:	இந்தப் பழத்தைத் தின்னலாமா? தாத்தா
தாத்தா	:	ம்... தின்னலாம் வண்ணமயில். மிகச் சுவையாக இருக்கும். சத்து மிக்கது.
அழகன்	:	இந்தப் பனம்பழத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளது தாத்தா..

தேசிய மாநில அளவிலான சமூக, உணர்வுபூர்வமான செய்திகளை இனங்கண்டு அவற்றின் மீது கருத்தாடல் செய்தல்

தாத்தா : சொல்கிறேன் தம்பி! பனம்பழம் பனைமரத்தில் காய்த்துப் பழுக்கும். பனைமரம் நீண்டு வளரக்கூடியது. இது வேர், தூர்ப்பகுதி, நடுமரம், பத்தைமட்டை, உச்சிப்பகுதி, ஓலை, சில்லாட்டை, பாளைப்பீலி, பனங்காய், பச்சைமட்டை, சாரைஓலை, குருத்தோலை என்ற பன்னிரண்டு உறுப்புகளை உடைய மரம். இந்த உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைத் தரக்கூடியது. அதனால் தான் பனைக்குக் "கற்பகத்தரு" என்ற பெயரும் உண்டு.

வண்ணமயில் : ஆகா! பனைமரம் இவ்வளவு சிறப்பானதா? தாத்தா, நான் நுங்கு மட்டுமே உண்டுள்ளேன், இந்தப் பனை மரத்தால் நமக்கு வேறு என்ன பயன்?

தாத்தா : நுங்கும், பனங்கிழங்கும் உணவாகப் பயன்படுகின்றன. பனை ஓலைகள் கூடைகள் முடையவும், கைவினைப் பொருட்கள் செய்யவும், கூரை வேயவும் பயன்படுகின்றன. பனஞ்சாறு பதநீராகவும், கற்கண்டாகவும், கருப்பட்டியாகவும் பயன்தருகிறது. மேலும், பனைமரம் புயலைத் தாங்கும் வலிமை பெற்றது.

அழகன் : இத்தனை பயன்மிக்கதா பனை?

தாத்தா : ஆமாம், அழகா! அது மட்டுமல்ல நமது முன்னோர்கள் பற்றியும் பண்டைய இலக்கியங்கள் பற்றியும் தெரிந்து கொள்ள நமக்குப் பெரிதும் உதவியது பனை ஓலைச்சுவடிகள்தாம்.

வண்ணமயில் : அப்படியா!

தாத்தா : பனைமரத்தின் வேர் நீரைத் தக்க வைத்துக் கொள்ளும் இயல்பு கொண்டது. இது நிலத்தடி நீர்மட்டம் உயரக் காரணமாக அமைகிறது.

அழகன் : அடேங்கப்பா........! இம்மரத்திற்கு இவ்வளவு சிறப்பா?

தாத்தா : பனங்காய் வண்டி, பனை ஓலைக் காற்றாடி, பனை ஓலை விசிறி, பொம்மைகள், ஆகியவற்றைச் செய்து நீங்கள் பல்வேறு விளையாட்டுகளை விளையாடலாம்.

வண்ணமயில் : இத்தகு பயன்மிகு பனைமரத்தை இப்போதெல்லாம் அதிகம் பார்க்க முடிவதில்லையே தாத்தா!

தாத்தா : நன்றாகக் கேட்டாயம்மா, சொல்கிறேன் கேளுங்கள். தமிழக இயற்கை வளத்தின் சான்றாக விளங்கும் பனைமரங்கள் எரிபொருளுக்காக வெட்டப்படுகின்றன. அதனால் அந்த மரத்தைச் சார்ந்து இருக்கும் பனங்காடை, பனை உழவரான் போன்ற பறவைகள் தம் வாழிடங்களை இழந்து வருகின்றன. "மரங்கள் இன்றி மனிதர்கள் இல்லை", இதனை உணர்ந்து நாம் அனைவரும் பனைமரம் வெட்டப்படுவதைத் தடுக்க வேண்டும்.



அழகன் : பனைமரத்தினைப் பற்றிய பல அரிய செய்திகளை உங்கள் மூலம் அறிந்து கொண்டோம் தாத்தா.

தாத்தா : அறிந்து கொண்டதோடு மட்டும் விட்டு விடாதீர்கள். பனையின் சிறப்பினை உங்களது நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டும்.

இருவரும் : கட்டாயமாகக் கூறுவோம் தாத்தா,

தாத்தா : மிக்க மகிழ்ச்சி குழந்தைகளே! தமிழரின் பண்பாட்டை உணர்த்தும் பயன்மிகு பனைமரம் நமது தமிழ்நாட்டின் மாநில மரமாகும். இதன் சிறப்புணர்ந்து நாம் பனங்கொட்டைகளைச் சேகரித்து குளம், ஆறு, குட்டை போன்றவற்றின் கரையோரங்களில் ஊன்றிப் பாதுகாக்கலாம்.

இருவரும் : அப்படியே செய்வோம்! பனைமரம் காப்போம் பயன்பல பெறுவோம். மிக்க நன்றி தாத்தா!

தாத்தா : மகிழ்ச்சி குழந்தைகளே! சென்று வாருங்கள்.

தமிழக அரசு சின்னங்கள்

அறிந்து கொள்வோம்

சின்னம்

திருவில்லிபுத்தூர் கோவில் கோபுரம்

பறவை

மரகதப்புறா

பாடல்

நீராரும்
கடலுடுத்த

தமிழ்த்தாய் வாழ்த்து

மலர்

செங்காந்தள்

நடனம்

பரத நாட்டியம்

மரம்

பனை

விலங்கு

வரையாடு

விளையாட்டு

கபடி

வாங்க பேசலாம்

மரம் வளர்ப்பதனால் நாம் பெறும் பயன்கள் குறித்துக் கலந்துரையாடுக.

சிந்திக்கலாமா!

கிளி வளர்த்தேன், பறந்து போனது,
அணில் வளர்த்தேன், ஓடிப்போனது,
மரம் வளர்த்தேன்...
இரண்டும் திரும்பி வந்தது...

டாக்டர் அப்துல்கலாம்

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 **வல்லமை** என்ற சொல்லின் பொருள் ....

அ) வலிமை ஆ) எளிமை
இ) இனிமை ஈ) புதுமை

02 **உயர** என்ற சொல்லின் எதிர்ச் சொல் ....

அ) மேலே ஆ) நிறைய
இ) தாழ ஈ) அதிகம்

Z8QG6T

03 **விழுந்து** என்ற சொல்லின் எதிர்ச் சொல் ....

அ) நடந்து ஆ) பறந்து
இ) எழுந்து ஈ) நின்று

04 **கரையோரம்** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) கரை +ஓரம் ஆ) கரை + யோரம்
இ) கரைய + ஓரம் ஈ) கர + ஓரம்

05 அங்கெல்லாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) அங் + கெல்லாம் ஆ) அங்கு + எல்லாம்

இ) அங்கு + கெல்லாம் ஈ) அங்கெ + ல்லாம்

06 கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக

அ) சாலையோரம் = ... + ...

இ) குருத்தோலை = ... + ...

வினாக்களுக்கு விடையளி

01 பனைமரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

02 சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் எவ்வாறு உதவுகிறது?

03 பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?

04 பனைமரத்தின் பயன்களாக நீ கருதுவனவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.

உங்கள் வீட்டில் பயன்படுத்தப்படும் மரத்தாலான பொருள்களைப் பட்டியலிடுக

இணைந்து செய்வோம்

சொற்களுக்கு உரிய படங்களைப் பொருத்துக

01 ஆ

02 கை

03 பூ

04 நா

05 ஈ

06 கா







மொழியோடு விளையாடு

ஒரே பொருள் தரும் சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக

01 நிலவு – மதி ஆதவன் திங்கள் கதிரவன் சந்திரன் பரிதி.

02 அம்மா – சேய் அன்னை குழந்தை தாய் மழலை மாதா.

03 மகுடம் – அரசன் மணிமுடி தலை கிரீடம் அணிகலன் அரசி.

04 திரள் – கூட்டம் கடைவீதி நெருக்கம் மக்கள் கும்பல் நெரிசல்.

மாதிரி செயல்திட்டம்

நோக்கம்

நமது மாவட்டத்தில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்களும், ஆசிரியர்களும், உள்ளூர் இளைஞர்களுடன் இணைந்து பள்ளி வளாகத்தினையும், கிராமப் பகுதியையும் பசுமையாக மாற்ற மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பது என முடிவு செய்தனர்.

திட்டமிடுதல்

மழை பெய்த அடுத்த நாளில் மரக்கன்றுகள் நடுவது என முடிவு செய்யப்பட்டது. அதற்குள் தேவையான மரக்கன்றுகளைத் தன்னார்வலர்களிடம் இருந்தும், அரசு வனத்துறையிலிருந்தும் பெறுவது என்றும், பராமரிக்கத் தேவையான கூண்டுகளைத் தயார் செய்து வைத்துக் கொள்வது எனவும் கூட்டத்தில் பேசித் திட்டமிடப்பட்டது.

செயல்படுத்துதல்

மழைபெய்த மறுநாள் பள்ளி வளாகத்தில் போதுமான குழிகள் தோண்டப்பட்டு எருவிட்டு பலன்தரும் வேம்பு, வாகை, புங்கை போன்ற மரக்கன்றுகள் நடப்பட்டு கூண்டுகள் வைக்கப்பட்டன. சாலை ஓரங்களிலும், குளம், குட்டைகளின் கரையோரங்களிலும் பனைவிதைகள் ஊன்றப்பட்டன. மேலும் தன்னார்வலர் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அவற்றை நட்டு வளர்ப்பவர்களுக்குப் பரிசுகளும் அறிவிக்கப்பட்டன.

மதிப்பீடு:

திட்டமிட்டபடி செயல் நிறைவு பெற்றது மனத்திற்கு மகிழ்ச்சியை அளித்தது. இச்செயல்பாடுகளினால் விரைவில் பசுமைச்சூழல் ஏற்படும். மேலும் அடுத்த ஆண்டு முன்கூட்டியே திட்டமிட்டு இன்னும் அதிக மரக்கன்றுகளை நட்டு வளர்க்க முடிவு செய்யப்பட்டது.

இது போன்று மரக்கன்றுகளை நீங்களும் நட்டு வளர்க்கலாமே!

கலையும் கை வண்ணமும்

செய்முறை

தேவையான பொருட்கள்:

பனை ஓலைகள்; தேவையான எண்ணிக்கையில்

பனை ஓலைகளில் நடுவில் உள்ள தண்டை நீக்கி விட்டுப் பட்டைகளாக ஓலைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். பத்து ஓலைகளை அருகருகே வரிசையாக வைக்க வேண்டும். வேறு ஓர் ஓலையை எடுத்து வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள ஓலைகளின் மேலும் கீழுமாகச் செருக வேண்டும். இப்படியே அடுத்தடுத்த ஓலைகளை இணைத்துப் பின்ன வேண்டும். ஓரங்களை மடித்துச் செருகிவிட வேண்டும். இப்பொழுது அழகிய பனை ஓலைப்பாய் தயார்.



செயல் திட்டம்

பனை ஓலைகளைக் கொண்டு காற்றாடி, விசிறி, பொம்மைகள், பெட்டிகள் போன்ற பொருள்களைச் செய்து வருக.

இலக்கணம் – பால்

திணையின் உட்பிரிவே பால் ஆகும், பால் என்ற சொல்லிற்குப் பகுப்பு என்பது பொருள்.

பால் ஐந்து வகைப்படும்

3MEIE4

உயர்திணை



01

ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.
* அவன் என்ற பெயரில் சுட்டப்படும்.

02

ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால் எனப்படும்.
* அவள் என்ற பெயரில் சுட்டப்படும்.

03

ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் மனிதர்களைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.
* அவர்கள் என்ற பெயரில் சுட்டப்படும்.



அஃறிணை

04

அஃறிணையில் ஏதேனும் ஒன்றை மட்டும் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.
* அது என்ற பெயரில் சுட்டப்படும்.

05

அஃறிணையில் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் எவை இருந்தாலும் அவை பலவின்பால் ஆகும்.
* அவை என்ற பெயரில் சுட்டப்படும்.

கீழ்க்காணும் சொற்களை வகைப்படுத்துக

அவள், சென்றனர், படித்தான், வந்தது, பறந்தன, ஓடினர், எழுதினான், விளையாடினர், குயவன், நாட்டிய மங்கை, மேய்ந்தன, வகுப்பறை, கற்கள், ஆசிரியர், மாணவர்கள், வீடு, பெற்றோர், தங்கை, அண்ணன், மரங்கள், செடி, மலர், பூக்கள்.

ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒன்றன்பால்	பலவின்பால்

பொருத்துக

அவன்   அவள்   அவர்கள்   அது   அவை

ஆடினாள்   ஓடியது   வரைந்தான்   பாடினார்கள்   பறந்தன

01 ....

02 ....

03 ....

04 ....

05 ....

3 ஏழு இறக்கைக் குருவியும் தெனாலிராமனும்

விஜயநகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. விழாவிற்கு அண்டை நாட்டு மன்னர் விஜயவர்த்தனர் வருகை தந்திருந்தார். விழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. அன்று மாலை அரசர் கிருஷ்ணதேவராயரும் அண்டை நாட்டு மன்னர் விஜயவர்த்தனரும் அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தனர். அப்போது விஜயவர்த்தனர், கிருஷ்ணதேவராயரிடம் தங்கள் அவைப்புலவர் தெனாலிராமன் மிகவும் அறிவுக் கூர்மை உடையவராமே! எனக்கேட்டார். அதற்கு கிருஷ்ணதேவராயர் அதிலென்ன ஐயம் என்றார். விஜயவர்த்தனர், அப்படியானால் நான் தெனாலிராமனைச் சோதிக்கலாமா? எனக் கேட்டார். ஓ...! என்றார் கிருஷ்ணதேவராயர்.

மறுநாள் அரசவை கூடியது. கிருஷ்ணதேவராயர் தெனாலிராமனை அழைத்தார். தெனாலிராமன் அரசர்கள் இருவரையும் வணங்கி நின்றார். மன்னர் விஜயவர்த்தனர் தெனாலிராமனிடம், 'எனக்குக் காலையில் தங்க மஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலும் உருமாறும் அற்புதக் குருவி ஒன்றைக் கொண்டுவந்து தரவேண்டும்' என்றார். 'மேலும் அது சிலசமயம் மூன்று கால்களாலும், சில சமயம் இரண்டு கால்களாலும் நடக்க வேண்டும், பிறகு ஏழு இறக்கைகளைக் கொண்டு வானில் பறக்கவும் வேண்டும்' என்றார்.

கிருஷ்ணதேவராயர் உடனே தெனாலிராமனிடம் 'விஜயவர்த்தனர் கூறியவாறு குருவியை விரைவில் கொண்டு வா' என்று உத்தரவிட்டார். அதைக் கேட்ட தெனாலிராமனுக்குத் தலை சுற்றியது. ஆனால் சிரித்தவாறே 'சரி........ அரசே! நாளைக்கு நான் அத்தகைய பறவையோடு வருகிறேன்' என்றார்.

மறுநாள் தெனாலிராமன் அரசவைக்குத் தாமதமாக வந்தார். அவர் நிலைமை மோசமாக இருந்தது. உடை கிழிந்து இருந்ததுடன், அதில் முட்களும், மண்ணும் ஒட்டியிருந்தன. அவரது கையில் காலியான பறவைக் கூண்டு ஒன்று இருந்தது.

கதைகளைத் தங்கள் சொந்த நடையில், தாம் விரும்பும் வகையில் தம் கருத்துகளையும் இணைத்துச் சொல்லுதல்

தெனாலிராமன் அரசரிடம், 'அரசே! அதிசயமான கதை நடந்துவிட்டது, விஜயவர்த்தன மன்னர் கூறியது போன்ற குருவி கையில் கிடைத்தது, நானும் அதைக் கூண்டில் அடைத்தேன். அதை இங்கு எடுத்து வரும்போது, அப்பறவை தனது மாயமான ஏழு இறக்கைகளை விரித்துப் பறந்து சென்றுவிட்டது, காட்டில் அதைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் சென்றேன்.' பறந்து சென்றவாறே அப்பறவை என்னிடம், "அரசரிடம் போய்ச் சொல், காலைப்பொழுதாகவும் இருக்கக்கூடாது, நடுப்பகல் பொழுதாகவும் இருக்கக்கூடாது, மாலைப்பொழுதாகவும் இருக்கக்கூடாது, வெளிச்சமாகவும் இருக்கக்கூடாது, இருளாகவும் இருக்கக்கூடாது அந்த நேரத்தில் நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து திரும்ப வந்துவிடுவேன் என்றது" என்றார்.

அதைக் கேட்டதும் அரசர் கிருஷ்ணதேவராயருக்கும் மன்னர் விஜயவர்த்தனருக்கும் தலை சுற்றியது. 'அப்படிப்பட்ட நேரம் எப்போது உண்டாகும்?' என்று அனைவரும் வியப்படைந்தனர், அரசருக்கோ சிரிப்பு வந்தது.

விஜயவர்த்தனர் சொன்னார் ....'தெனாலியின் அறிவுக் கூர்மை பற்றி இதுவரை கேள்விப்பட்டுள்ளேன் இப்போதுதான் நேரில் பார்த்தேன்' என்று கூறிப் பாராட்டி பரிசுகள் அளித்தார்.

வாங்க பேசலாம்

- கதையை உம் சொந்த நடையில் கூறுக.
- இதேபோன்று தெனாலிராமனின் வேறு கதைகளை அறிந்து வந்து கூறுக .
- நீ அறிவுக் கூர்மையுடன் நடந்து கொண்ட நிகழ்வுகளைக் கூறுக.

நீ தெனாலிராமனாக இருந்திருந்தால் விஜயவர்த்தன அரசரின் எதிர்பார்ப்பை எவ்வாறு நிறைவேற்றிருப்பாய்?

உன் கற்பனையில் எழுதுக.

வினாக்களுக்கு விடையளி

01 விஜயநகர அரசின் அவைப்புலவர் யார்?

02 விஜயவர்த்தன அரசர் எப்படிப்பட்ட குருவியைக் கொண்டு வரும்படி கேட்டார்?

03 குருவி கூறியதாக, தெனாலிராமன் அரசவையில் சொன்னது என்ன?

குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடி! மணிமகுடம் சூட்டிக்கொள்!

01 மணக்கும் எழுத்து.

02 அரசரும், அமைச்சர்களும் கூடும் இடம்.

03 நிலவும், விண்மீன்களும் வானில் தெரியும் நேரம்.

04 பாகற்காயின் சுவை.

05 சிக்கலைத் தீர்க்க உதவும் குணம்.

சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல்லை உருவாக்குக.

01 கதை – (எ. கா) கவிதை

02 படு – ....

03 குவி – ....

04 பகு – ....

05 வசை – ....

06 பாவை – ....

07 எது – ....

08 அவை – ....

09 ஆம் – ....

10 கவி – ....

மீண்டும் மீண்டும் சொல்வோம்

- ✶ மேல் ஏழு ஓலை, கீழ் ஏழு ஓலை.
- ✶ பலாப்பழம் பழுத்துப் பள்ளத்தில் விழுந்தது.
- ✶ குழந்தை வாழைப் பழத்திற்காக விழுந்து விழுந்து அழுதது.
- ✶ ஆடுற கிளையில ஒரு கிளை தனிக்கிளை
  தனிக்கிளை தனில் வந்த கனிகளும் இனிக்கல.
- ✶ மெய்த்தும் பொய்க்கும்
  பொய்த்தும் மெய்க்கும்
  பொய்யா மெய்யா மழை.

கலையும் கைவண்ணமும்

இக்கதையில் வருகின்ற ஏழு இறக்கைக் குருவியை உம் கற்பனைக்கேற்ப வண்ணம் தீட்டி மகிழ்க.



அறிந்து கொள்வோம்



தெனாலிராமன் அரசர் கிருஷ்ணதேவராயரின் அவையை அலங்கரித்த விகடகவி ஆவார். விகடகவி என்றால் நகைச்சுவையாகப் பேசுபவரைக் குறிக்கும். தெனாலிராமன் சிரிக்க வைத்துச் சிந்தனையைத் தூண்டும் வகையில் பேசுவார்.

செயல் திட்டம்

01 உங்கள் பள்ளியிலுள்ள நூலகத்தில் இருந்து தெனாலிராமன் கதைகள், மரியாதை ராமன் கதைகள், பீர்பால் கதைகள், அப்பாஜி கதைகள் முதலிய புத்தகங்களைத் தேடிப் படித்து ஒவ்வொரு நூலிலும் உனக்குப் பிடித்த ஒரு கதையை எழுதி வருக.

02 நூலகத்தைப் பயன்படுத்தி எவையேனும் ஐந்து கதைகளின் பெயர்களையும், அந்தக் கதைகளின் ஆசிரியர் பெயர்களையும் பட்டியலிடுக.

வ. எண்	கதையின் பெயர்	ஆசிரியர் பெயர்	குறிப்பு

4 முளைப்பாரி – பாடல்

H8UW7M

தன்னா னன்னே னானே தன
தானே னன்னே னானே
ஒண்ணாந்தான் நாளையிலே
ஒசந்த செவ்வா கிழமையிலே
ஓலைக்கொட்டான் இரண்டெடுத்து
ஓடும் பிள்ளை தொண்டலிட்டு – தன்னா
வாங்கியாந்த முத்துகளை
வாளியிலே ஊற வச்சி
கம்மந்தட்டை இரண்டெடுத்து
கணுக்கணுவா முறிச்சி வச்சி
சோளத்தட்டை இரண்டெடுத்து
சுளை சுளையா முறிச்சி வச்சி
மாட்டாந்தொழு தெறந்து
மாட்டெருவு அள்ளி வந்து – தன்னா
ஆட்டாந்தொழு தெறந்து
ஆட்டெருவு அள்ளி வந்து
கடுகுலயுஞ் சிறுபயிறு
காராமணிப் பயிறு
மிளகுளயுஞ் சிறுபயிறு
முத்தான மணிப்பயிறு
மொள போட்ட ஒண்ணா நாளு
ஓரெலையாம் முளைப்பாரி
ஓரெலைக்குங் காப்புக்கட்டி
ஒரு பானை பொங்கலிட்டு
முளைப்பாரி போடுங்கம்மா-------(2)
தன்னா னன்னே போடுங்கம்மா----(2)
தையலரே ஒரு குலவை – தன்னா

– நாட்டுப்புறப் பாடல்

பாடல்களைச் சொந்த நடையில் தாம் விரும்பும் வகையில் கருத்துகளை இணைத்துப்பாடுதல்

வாங்க பேசலாம்

- பாடலை ஓசை நயத்துடன் பாடிக்காட்டுக.
- முளைப்பாரி பற்றி அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக
- இது போன்று வேறு பாடல்களைக் கேட்டறிந்து வந்து வகுப்பறையில் பாடி மகிழ்க.

சிந்திக்கலாமா?

மாட்டு எருவையும், ஆட்டு எருவையும் வயலுக்கு இடவேண்டும் என்று தாத்தா கூறுகிறார் ஆனால் அப்பாவோ, உடனே பலன் தருவது செயற்கை உரம் தான் என்கிறார்.

யார் கூறுவது சரி?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

பொருள் தருக

01 முளைப்பாரி = ...

02 தையலர் = ...

03 ஓலைக்கொட்டான் = ...

04 மாட்டாந்தொழு = ...

05 ஆட்டாந்தொழு = ...

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 **இரண்டெடுத்து** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) இரண் + டெடுத்து ஆ) இரண்டு + எடுத்து

இ) இரண்டெ + டுத்து ஈ) இரண்டெ + எடுத்து

02 **பொங்கலிட்டு** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பொங்கல் + இட்டு ஆ) பொங்கல் + லிட்டு

இ) பொங்க + இட்டு ஈ) பொங் + கலிட்டு

03 **ஆடு + எரு** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) ஆடுஎரு ஆ) ஆடெரு

இ) ஆட்டெரு ஈ) ஆடொரு

04 **செவ்வாய் + கிழமை** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) செவ்வாய்கிழமை ஆ) செவ்வாய்க்கிழமை

இ) செவ்வாகிழமை ஈ) செவ்வாக்கிழமை

05 கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக

அ) சோளத்தட்டை = ... + ...

இ) மாட்டெரு = ... + ...

இப்பாடலில் ஒரேசொல் இரண்டு முறை அடுத்தடுத்து வருவதைக் கண்டறிந்து எழுதுக –அடுக்குத்தொடர்.

எ.கா **கணுக்கணுவா**

____

இப்பாடலில் இடம்பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

எ.கா: நாளையிலே, கிழமையிலே

_____________ _____________

_____________ _____________

இப்பாடலில் இடம்பெற்றுள்ள முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

எ.கா: ஓலைக்கொட்டான் ஓடும் பிள்ளை

______________ ______________

______________ ______________

மேகத்திலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைக் குடையிலுள்ள எழுத்து வழக்குச் சொற்களுடன் இணைத்துக் காட்டுக.



1. ....
2. ....
3. ....
4. ....
5. ....
6. ....

கலையும் கைவண்ணமும்

முளைப்பாரியை வண்ணமிட்டு மகிழ்க!...

அறிந்து கொள்வோம்



நவதானியங்கள் எவை என அறிந்து கொள்வோமா...

- நெல்
- கோதுமை
- பாசிப்பயறு
- துவரை
- மொச்சை
- எள்
- கொள்ளு
- உளுந்து
- கடலை

செயல் திட்டம்

- மாணவர்கள் ஐந்து பேர் கொண்ட குழுவாகப் பிரிந்து கொள்க. ஒவ்வொரு குழுவும் தமக்குக் கிடைக்கும் சிறு தானியங்களைக் கொண்டு முளைப்பாரியிட்டுக் கொண்டு வருக.

- பேச்சுவழக்குச் சொற்களுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களை எழுதுக

பேச்சுவழக்கு	எழுத்துவழக்கு
1. படிச்சான்	படித்தான்
2.	
3.	
4.	
5.	
6.	
7.	
8.	
9.	
10.	

5 பண்படுத்தும் பழமொழிகள்

அமுதவாணன் தன் தாத்தாவுடன் வாரச் சந்தைக்குச் சென்றான். செல்லும் வழியில் நாய்கள் குரைத்துச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அதைப் பார்த்த அமுதவாணன் நாய்களை விரட்ட கல்லைத் தேடினான்.

தாத்தா : அமுதவாணா, என்ன தேடுகிறாய்?

அமுதவாணன் : "நாயைக் கண்டால் கல்லைக் காணோம்" என்பதற்கேற்ப இந்த நாய்களை விரட்ட கல் கிடைக்கவில்லை தாத்தா.

தாத்தா : அந்தப் பழமொழிக்குப் பொருள் வேறு அமுதவாணா! கல்லால் செதுக்கிய சிலை தானே கோவில்களில் இருக்கிறது ! அந்தச் சிலைகளைக் கல்லாகப் பார்த்தால், இறைவன் என்ற நாயகன் தெரியமாட்டார். சிலையை நாயகனாகப் பார்த்தால், கல் தெரியாது. இதுதான் இந்தப் பழமொழியின் பொருள்.

அமுதவாணன் : தாத்தா, "குரைக்கின்ற நாய் கடிக்காது" என்று என் நண்பன் இன்பவாணன் நேற்று கூறினான். குரைக்கின்ற நாய் கடிக்காதா தாத்தா?

தாத்தா : அப்படி இல்லை அமுதவாணா குரைக்கின்ற நாய் என்பது தவறு. குழைகின்ற நாய் கடிக்காது என்பதே சரியானது. குழைகின்ற என்றால் நம்மோடு பழகிய நாய் நம்மைப் பார்த்து வாலை ஆட்டிக் குழைந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துமே அதுதான்.

இருவரும் சந்தைக்குள் நுழைந்தனர். நுழைவாயிலில் யானை ஒன்று ஆசி வழங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அமுதவாணனுக்கும் ஆசை வந்தது.

அமுதவாணன் : தாத்தா, நானும் இந்த யானையிடம் ஆசி பெற்றுக் கொள்கிறேன் .

தாத்தா : பெற்றுக்கொள், இதோ பத்து ரூபாய். யானையிடம் கொடு

அமுதவாணன் : தாத்தா, அன்றொரு நாள் அம்மா, அப்பாவிடம் கூறினார்களே, "யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்" என்று, அதற்குப் பொருள் என்ன தாத்தா?

தாத்தா : யானை கிடையாது அது ஆனை அதைப் பிரித்து எழுதினால் ஆ + நெய் அதாவது பசுவின் நெய். பூனை கிடையாது. அது பூநெய் அதைப் பிரித்து எழுதினால் பூ + நெய் அதாவது பூவில் ஊறும் தேன். நாம் இளமையில் பசுநெய்யை விரும்பி உண்போம் வயதான முதுமையில் தேனோடு மருந்து கலந்து உண்போம்.

இளமையில் ஆநெய், முதுமையில் பூநெய். இதைத்தான் "ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்" என்பர். ஆனால் இன்று இதன் பொருள் மாறுபட்டு வழங்கப்படுகிறது.

இருவரும் பேசிக் கொண்டே வீட்டிற்குத் தேவையான காய்கறிகள் வாங்கினர்.

அமுதவாணன் :தாத்தா, எனக்கு விளையாட பந்தும், மட்டையும் வாங்கித் தாருங்கள், அப்படியே பாப்பாவுக்குப் பலூன்கள் வாங்கிக் கொள்ளலாம்.

தாத்தா : வாங்கலாம் அமுதவாணா!

அமுதவாணன் : எனக்கும் சேர்த்து பலூன்கள் நிறைய வாங்கலாம் தாத்தா.

தாத்தா : போதும், "ஆத்துல போட்டாலும் அளந்து போடணும்"

அமுதவாணன் : ஆத்துல போட்டாலும் அளந்து போடணுமா?

தாத்தா : சொல்கிறேன்! சொல்கிறேன்! ஆத்துல போட்டாலும் அளந்து போடணும் என்று இப்பொழுது பயன்படுத்துகிறோம் ஆனால் இது தவறு. அகத்தில் போட்டாலும் அறிந்து போடணும் என்பது தான் சரி. அதாவது புரியாமல் எதையும் மனனம் செய்து நினைவில் கொள்ளக்கூடாது. கற்கும்போதே தெளிவாகப் புரிந்த பிறகுதான் நினைவில் கொள்ள வேண்டும்.

(பேசிக்கொண்டே இருவரும் வீட்டை அடைந்தனர்)

படிக்கும் பகுதியில் இடம்பெறும் பழமொழிகளை அறிதல்

அமுதவாணன் : உங்களுடன் சென்று வந்தது மிகவும் மகிழ்ச்சி தாத்தா.

வாங்க பேசலாம்

- பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பழமொழிகளைக் கூறி அவற்றின் பொருளை உம் சொந்த நடையில் கூறுக .
- பாடப்பகுதியை உரிய உச்சரிப்புடன் படித்துப் பழகுக.
- உமக்குத் தெரிந்த பழமொழிகளையும் அவை உணர்த்தும் பொருளையும் வகுப்பில் மாணவர்களுடன் பகிர்ந்து கொள்க

சிந்திக்கலாமா?

பழமொழிகளின் பொருள் மாறுபட்டு வழங்கப் படுவதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

P1Y5KK

01 அமுதவாணன், தன் தாத்தாவுடன் சென்ற இடம் ....

அ) கடைத்தெரு ஆ) பக்கத்து ஊர்

இ) வாரச்சந்தை ஈ) திருவிழா

02 யானைக்கொரு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) யானை + கொரு ஆ) யானை + ஒரு

இ) யானைக்கு + ஒரு ஈ) யானைக் + கொரு

03 பழச்சாறு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பழம் + சாறு ஆ) பழச் + சாறு

இ) பழ + ச்சாறு ஈ) பழ + சாறு

04 நாய் ....

அ) குரைக்கும் ஆ) குறைக்கும்

இ) குலைக்கும் ஈ) கொலைக்கும்

05 ஆசி இச்சொல்லின் பொருள் ....

அ) புகழ்ந்து ஆ) மகிழ்ந்து

இ) இகழ்ந்து ஈ) வாழ்த்து

06 கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக

அ) வாரம் + சந்தை = ...

இ) பழைமை + மொழி = ...

வினாக்களுக்கு விடையளிக்க.

01 அமுதவாணன் யாரிடம் ஆசி வாங்கினான்?

02 'ஆநெய்' 'பூ நெய்' ஆகியன எவற்றைக் குறிக்கின்றன?

03 "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" – இப்பழமொழியின் பொருளைச் சொந்த நடையில் கூறுக.

பழமொழியை நிறைவு செய்க

01	யானைக்கொரு காலம் வந்தால்	....
02	....	கடிக்காது
03	நாயைக் கண்டால்	....
04	கல்லைக் கண்டால்	....
05	....	அளந்து போடணும்

படித்தும், பாடியும் மகிழ்க!

அச்சம் இல்லாதவன் தானே!
அம்பலம் ஏறுவான் தேனே!
ஆவும் தென்னையும் தானே!
ஐந்தே வருடம் பலன் தரும் மானே!
எஃகு போல தானே!
உறுதியாய் இரு தேனே!
மூத்தோர் சொல் தானே!
பழமொழிகள் ஆகும் மானே!

படத்திற்கேற்ற பழமொழியைத் தேர்ந்தெடுக்க.

01 சிறுதுளி பெருவெள்ளம். ☐

02 யானைக்கும் அடி சறுக்கும். ☐

03 காற்றுள்ள போதே தூற்றிக்கொள். ☐

முதலெழுத்து மாற்றினால் வேறுசொல்

01 படிக்க நீயும் ....விரும்பு.......

பாறையை உடைப்பது ....

சுவைத்தால் இனிக்கும் ....

பூ மலரும் முன்பு ....

02 கையின் மறுபெயர் ....கரம்.......

வயலுக்கு இடுவது ....

பூக்களைத் தொடுத்தால் ....

புன்னை என்பது ....

03 நீர் இறைத்திடுவது ....ஏற்றம்.......

புயலோ இயற்கை ....

தவறு இழைப்பது ....

வீட்டின் உள்ளே ....





அறிந்து கொள்வோம்

முன்னோர்கள் தங்கள் அனுபவத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கக் கூறிய மொழிகளே முதுமொழிகள் அல்லது பழமொழிகள் ஆகும்.

செயல் திட்டம்

ஐந்து பழமொழிகளை எழுதி, அவை இன்று உணர்த்தும் பொருளையும் அதன் உண்மையான பொருளையும் எழுதி வருக.

இணைத்து மகிழ்வோம்

01	Talk less work more		நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது
02	No pain no gain		மின்னுவதெல்லாம் பொன்னல்ல
03	Good council has no price		குறைவாகப் பேசு அதிகம் வேலை செய்
04	Haste makes waste		உழைப்பின்றி ஊதியமில்லை
05	All that glitters is not gold		பதறாத காரியம் சிதறாது

6 முயல் அரசன்

7GCJL3

ஒரு விவசாயியின் தோட்டத்தில் விளைந்திருந்த காய்களையும் கனிகளையும், கிழங்குகளையும் வயிறாரத் தின்று வாழ்ந்து கொண்டிருந்தது ஒரு முயல். ஆனாலும், அதன் மனத்தில் ஒரு கவலை, அதற்குக் காரணம் அது வாழும் அந்தக் காட்டைப் பல்லாண்டு காலமாக ஆட்சி செய்து வரும் ஒரு புலி ஆகும். புலிக்குக் கிடைக்கும் மதிப்பு தனக்கும் கிடைக்கவேண்டும் என்று முயல் விரும்பியது. புலியைவிடத் தானே சிறந்தவன் என்று புலிக்கும் காட்டில் உள்ள பிற விலங்குகளுக்கும் மெய்ப்பிக்க வேண்டுமென முயலுக்கு ஆசை தோன்றியது. உடனே, முயல் சிந்தித்துச் செயல்படத் தொடங்கியது. இனி, கதையைப் படிப்போம்...

ஓடினேனா! நானா! உன்னைக் கண்டா...? உனக்குச் செய்தியே தெரியாதா? உனக்கு எங்கே தெரியப்போகிறது... இங்கு கூட்டம் நடந்த போது நீ தான் அப்பாவி விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருந்தாயே...
எல்லா விலங்குகளும் கூட்டத்திற்கு வந்திருந்தனவா?
சில விலங்குகளைத் தவிர எல்லா விலங்குகளும் வந்திருந்தன.
கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டது?
நீ இந்தக் காட்டின் அரசனாக இனிமேலும் நீடிக்கக் கூடாது என்று எல்லா விலங்குகளும் ஒரே மனதாகத் தீர்மானம் நிறைவேற்றின
நான் அரசனாக நீடிக்கக் கூடாதா? அப்படியானால் வேறு யார் அரசனாக இருப்பது?
இந்தக் காட்டிலேயே பயங்கரமான மூர்க்கமான விலங்காகிய என்னைத் தான் எல்லா விலங்குகளும் புதிய அரசனாகத் தேர்ந்தெடுத்தன.
வேடிக்கைப் பேச்சு பேசுகிறாய்.. பலமற்ற சிறிய மென்மையான நீ இந்தக் காட்டுக்கு அரசனா? உன்னை இப்போதே ...??
உன் முதுகில் என்னை ஏற்றிக்கொண்டு போ. இக்காட்டு விலங்குகள் என்னைப் பார்த்து அஞ்சுவதை உனக்கு மெய்ப்பித்துக் காட்டுகிறேன்

ம்.. ம்.. ம்... நட.....
இந்த முயல் எப்படிப் புலியின் மேல் அமர்ந்து வருகிறது!
எல்லா விலங்குகளும் பயப்படுகின்றனவே...! முயல் கொடிய விலங்காகத்தான் இருக்குமோ!
முயல் அரசே! நான் உங்களைத் தவறாகப் பேசியிருந்தால் மன்னித்து விட்டு விடுங்கள்.
இப்பொழுது இந்தக் காட்டுக்கு அரசன் யார்?
நீங்கள் தாம்!
உரக்கச் சொல்
தாங்கள் தாம் இந்தக் காட்டுக்கு அரசன்
உன்னை மன்னித்து விடுகிறேன். நீ இந்தக் காட்டிலேயே இருக்கக்கூடாது. எங்காவது ஓடிப்போய்விடு!
ஐயோ! என்னை விட்டுவிடுங்கள் நான் போய் விடுகிறேன்..!
இப்போதெல்லாம் முயல் வயிறு நிரம்பச் சாப்பிட்டு, நிம்மதியாக, சுகமாகப் பகல் வேளைகளில் ஒரு குட்டித் தூக்கம் போட்டுக் கொண்டிருக்கிறது.

வாங்க பேசலாம்

- இக்கதையை உனது சொந்த நடையில் கூறுக.
- காட்டின் அரசனாக நீ எந்த விலங்கை அமர்த்துவாய்? காரணம் என்ன?
- புலி எதையும் ஆராயாமல் முயலின் பேச்சை உண்மை என ஏற்றுக்கொண்டது சரியானதா? கலந்துரையாடுக.

தவறு செய்பவர்களை என்ன செய்யலாம்?
திருத்தலாமா ?
அப்படியே விட்டுவிடலாமா ?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 பல்லாண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பல் + லாண்டு ஆ) பல் + ஆண்டு

இ) பல + ஆண்டு ஈ) பல + யாண்டு

02 செயலாக்கம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) செய + லாக்கம் ஆ) செயல் + ஆக்கம்

இ) செயலா + ஆக்கம் ஈ) செயல் + லாக்கம்

03 இப்போது+ எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) இப்போதெல்லாம் ஆ) இப்போது எல்லாம்

இ) இப்போல்லாம் ஈ) இப்போ யெல்லாம்

04 பேசி + இருந்தால் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) பேசியிருந்தால் ஆ) பேசியிரு

இ) பேசிஇருந்தால் ஈ) பேசவிருந்தால்

05 வந்து + இருந்தது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) வந்துஇருந்தது ஆ) வந்திஇருந்தது

இ) வந்திருந்தது ஈ) வந்தியிருந்தது

வினாக்களுக்கு விடையளி

01 முயலின் கவலைக்குக் காரணம் என்ன?

02 விலங்குகளின் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டதாக முயல் கூறியது?

03 முயல், தான் அரசன் என்பதை மெய்ப்பிக்க புலியை என்ன செய்யக் கூறியது?

04 புலியை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய கட்டுப்பாடு என்ன?

05 விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின?

எதிர்ச்சொல்லால் சொற்றொடரை நிறைவுசெய்க

- பழைய
- கவலை
- மெதுவாக
- தொடக்கம்
- தாழ்ந்த
- பொய்

01 பருவ மழை பெய்தால் மக்கள் மகிழ்ச்சி அடைவர், பெய்யாவிட்டால் .... அடைவர்.

02 எப்பொழுதும் உண்மை பேச வேண்டும், ... பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

03 தோல்வி என்பது முடிவு அல்ல வெற்றியின் ....

04 கணினி மூலம் கல்வி கற்பது புதிய முறை. கரும்பலகை மூலம் கல்வி கற்றது .... முறை

05 பிறருக்குக் கொடுத்து உதவுவது உயர்ந்த குணம். பிறர் பொருளைத் திருடுவது .... குணம்

06 மருத்துவமனைகளில் சத்தமாகப் பேசாமல் .... பேச வேண்டும்

சரி ☑, தவறு ☒ எனச் சரியான குறியிடுக

01 புலி, முயலின் முன்னோரைக் கொன்று தின்றுவிட்டது. ☐

02 முயல் புலிக்குக் கரும்பு கொடுத்தது. ☐

03 விலங்குகளின் கூட்டம் நடந்த போது புலி தூங்கிக் கொண்டிருந்தது. ☐

04 முயல் புலியிடம் காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் தன்னைக் கண்டு அஞ்சுவதாகக் கூறியது. ☐

05 முயல் புலியைக் காட்டிலிருந்து ஆட்சி செய்ய வேண்டும் எனக் கூறியது. ☐

சக்கரம் காட்டும் ஈரெழுத்துச் சொற்கள் என்ன என்பதை கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடிக்க.

01 உலகம் என்பதன் வேறு சொல் ....

02 திருவிழா என்றாலே இது இருக்கும் ....

03 மக்கள் சேர்ந்து வாழுமிடம் ....

04 இது இல்லாமல் உயிர்கள் இல்லை ....

05 நீர் விட்டுத் தயிரைக் கடைந்தால் ....

06 மரம், செடி கொடி மண்ணில் ஊன்றி நிற்க உதவுவது ....

07 மன்னர்கள் தம் நாட்டின் எல்லையை விரிவுபடுத்த அண்டை நாடுகளோடு தொடுப்பது ....

08 பூத்தொடுக்க உதவுவது ....



எது முன்னே? எது பின்னே? அகர வரிசைப்படுத்துக.





பௌத்தம், பெட்டி, போர்வை, படை, பூமி, பிண்ணாக்கு பீர்க்கு, புத்தகம், பைந்தமிழ், பொத்தான்.

மொழியோடு விளையாடு

காலியிடங்களைக் கூடையில் உள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக



செயல் திட்டம்

நூலகத்திற்குச் சென்று சிறுவர் இதழ்களில் உள்ள படக்கதைகளைப் படித்து வருக. அவற்றுள் மூன்று கதைகளை உமது குறிப்பேட்டில் எழுதிவந்து வகுப்பறையில் கூறுக.

7 வெற்றி வேற்கை

SUW6SJ

உதவியால் பெறும் நன்மை

தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி, ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகும்மே

– அதிவீரராமபாண்டியர்

பொருள் அறிவோம்

ஆலமரத்திலுள்ள சிறு பழத்தின் ஒரு விதையானது தெளிந்த நீருள்ள குளத்தின் சிறிய மீனின் முட்டையைவிடச் சிறியதாகும். அந்தச் சிறிய விதை, பெரிய ஆலமரமாக வளர்ந்து நிற்கும்பொழுது, அம்மரத்தின் நிழலில் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப் படை, காலாட்படை ஆகியவற்றோடு மன்னனும் மற்றவர்களும் தங்க முடியும். அதுபோல, நீங்கள் செய்யும் உதவி சிறியதாக இருப்பினும், அது மற்றவர்களுக்கு மிகப்பெரிய பயனைத் தரும் .

வாங்க பேசலாம்

- பாடலின் பொருளை உமது சொந்த நடையில் கூறுக
- உனக்கு உனது நண்பன் செய்த சிறிய உதவி, அந்த நேரத்தில் பெரியதாக இருந்த அனுபவத்தைப் பற்றிப் பேசு.

சிந்திக்கலாமா!

சிறு சிறு உதவிகளைப் பிறருக்குச் செய்வது பற்றி உனது கருத்து என்ன? வகுப்பில் கலந்துரையாடுக.

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 தெண்ணீர் இச்சொல்லின் பொருள் ....

அ)	கலங்கிய நீர்	ஆ)	இளநீர்
இ)	தெளிந்த நீர்	ஈ)	வெந்நீர்

02 ஆல் இச்சொல்லின் பொருள் ....

அ)	வேலமரம்	ஆ)	ஆலமரம்
இ)	அரசமரம்	ஈ)	வேப்பமரம்

03 கயம் இச்சொல்லின் பொருள் ....

அ)	நீர்நிலை	ஆ)	பயம்
இ)	வானிலை	ஈ)	பருவநிலை

04 புரவி இச்சொல்லின் பொருள் ....

அ) யானை ஆ) பூனை

இ) ஆள் ஈ) குதிரை

05 பெரும்படை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பெருமை + படை ஆ) பெரும் + படை

இ) பெரு + படை ஈ) பெரிய + படை

06 நிழல் + ஆகும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) நிழல்ஆகும் ஆ) நிழலாகும்

இ) நிழல்லாகும் ஈ) நிழலாஆகும்

வினாக்களுக்கு விடையளி

01 ஆலமரத்தின் விதை எவ்வாறு இருக்கும் என்று அதிவீரராமபாண்டியர் குறிப்பிடுகிறார்?

02 ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?

03 இப்பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது?

பொருத்தமான நிறுத்தக்குறி இடுக.

01 ஆகா என்ன சுகம் தெரியுமா

02 என்னைக் கட்டிப் போடுகிறார்கள்

03 ஆகா இது என்ன பிரமாதம்

04 நான் என்ன வேலை செய்ய வேண்டும்

05 காய்கறிக்கடையில் தேவையான தக்காளி கத்தரி புடலை ஆகியவற்றை வாங்கி வந்தேன்

மொழியோடு விளையாடு

சொல் ஒன்று, பொருள் இரண்டு – கண்டுபிடி

எ.கா வயலில் மேய்வது — ஆடு

அழகாய் நடனம் — ஆடு

01 மாதத்தின் மறுபெயர் ____________

நிலவைக் குறிப்பது ____________

02 வகுப்பில் பாடம் ____________

மாடி செல்ல உதவும் ____________

03 வளைந்து ஓடுவது ____________

6 – இந்த எண்ணின் பெயர் ____________

04 பூக்களைத் தொடுத்தால் ____________

அந்தி சாயும் பொழுது ____________

05 சோற்றின் மறுபெயர் ____________

அழகிய பறவை ____________

கலையும், கைவண்ணமும்

கரிக்கோல் சீவிய துகள்களைக் கொண்டு படங்களை உருவாக்குவோம்.

எ.கா:

இணைந்து செய்வோமா

கூடையில் இருக்கும் சொற்களுள்
முதல் எழுத்து ஒன்று போல்
வரும் சொற்களை எடுத்து முதல்
பழத்தில் எழுதுக. இரண்டாம்
எழுத்து ஒன்று போல் வரும்
சொற்களை எடுத்து இரண்டாம்
பழத்தில் எழுதுக.
பூனை தம்பி
சிறு பழம்
தட்டு தண்ணீர்
சிலை யானை
சிறுமீன்
பானை கிண்ணம்
தவளை சிலந்தி வண்ணம்
நுண்ணியதே சிந்தனை
தலை அண்ணம்

சிறுபழம்
சிறுமீன்

கிண்ணம்
வண்ணம்

அறிந்து கொள்வோம்



மீன்களில் 22, 000 வகையான மீன்கள் உள்ளன. இவற்றுள் மிகச் சிறியது கோபி வகையைச் சார்ந்தது. இதன் நீளம் 13 மில்லி மீட்டர், மிகப் பெரிய மீன் திமிங்கலச் சுறா. இதன் நீளம் 18 மீட்டர்.





செயல் திட்டம்

செய்தித்தாளில் பிறருக்கு உதவியதாக வரும் செய்திகளைச் சேகரித்துக் கீழே உள்ள செய்தித் துணுக்கு கட்டத்தில் ஒட்டுக.

செய்தித் துணுக்கு

இணைப்புச் சொற்களை அறிவோமா?

இரண்டு தொடர்களை இணைக்கப் பயன்படும் சொற்கள் இணைப்புச் சொற்கள் ஆகும்.

சில இணைப்புச் சொற்களையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிவோம்.

அதனால், ஆகவே, ஆனால், எனினும், ஆகையால், எனவே போன்றவை.

01 பருவ மழை பெய்தது அதனால் ஏரி, குளங்கள் நிரம்பின.

02 காற்று பலமாக வீசியது ஆகவே மரங்கள் வேரோடு சாய்ந்தன.

03 அப்பா விரைவாக வந்துவிடுகிறேன் என்றார் ஆனால் வரவில்லை.

04 பூக்கள் அழகாகப் பூத்திருந்தன எனினும் பறிக்க மனமில்லை.

05 நான் தாய்நாட்டிலேயே பணிபுரிய விரும்புகிறேன் ஆகையால் வெளிநாடு செல்லமாட்டேன்.

06 தினமும் காலையில் எழுந்து நன்றாகப் படித்தேன் எனவே நான் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றேன்.

பயிற்சி

ஆகவே, எனவே, ஆகையால், ஆனால் ஆகிய இணைப்புச் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.

____________ _____________ _____________ _____________

____________ _____________ _____________ _____________

____________ _____________ _____________ _____________

____________ _____________ _____________ _____________

௮ விடியும் வேளை

மன்னவனூர் ஓர் அழகான மலைக்கிராமம், இனிய காலை வேளை, மழைபெய்து ஓய்ந்திருந்தது, சாலையில் அங்கும் இங்குமாகத் தண்ணீர் தேங்கியிருந்தது. மரங்களின் கிளைகளிலும் இலைகளிலும் நீர்த்திவலைகள் தெரிந்தன. பஞ்சுப்பொதிகள் போன்ற மேகக்கூட்டங்கள், வளைந்து நெளிந்து மிதந்தபடிச் சென்றன. பச்சைப்பசேல் என்ற வயல்வெளிகளில், சிலுசிலுப்பான காற்று கூடவே எழுந்தது.

பனைஓலை வேய்ந்த குடிசையில், நெற்றியில் வட்டநிலா போலச் சிவப்பாக குங்குமப் பொட்டு வைத்த அம்மா அறிவுமதி, விறகு அடுப்பில் சமைத்துக் கொண்டு இருந்தாள். கருத்த மண்சட்டியில் வெள்ளை வெளேரென வரகரிசிச்சோறு கொதித்துக் கொண்டிருந்தது. கொடியடுப்பில் மஞ்சளாகப் பருப்பு,மணம்மிக்க பூண்டுடன் வெந்து கொண்டிருந்தது.

வதக்கிய பசுமையான பிரண்டைத் துவையலை அம்மியில் அரைத்துக் கொண்டே, அடுப்பையும் கவனித்துக் கொண்டிருந்தாள் அறிவுமதி.

மரங்களும் செடிகளும் சூழ்ந்த இடத்தில், பசுங்கன்றென ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர் பிள்ளைகள் இனியனும், இனியாவும்.

HN4V7B

அன்பு பொங்க, தன் பிள்ளைகளை அழைத்தாள் அம்மா. பள்ளிக்குச் செல்ல தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டனர் பிள்ளைகள்.

பசுஞ்சாணம் மெழுகிய தரையில் மனைப்பலகையில் அமர்ந்து துளிரான தலைவாழை இலையை விரித்து, நீர் தெளித்து, அதில் சுடச்சுட வரகரிசிச் சோறிட்டு, ஆவிபறக்கும் பருப்புக் கடையலை ஊற்றினாள் அம்மா. துணையாகத் தொட்டுச்சுவைக்கச் சுள்ளென்ற பிரண்டைத் துவையலும் வைத்தாள்.

நாக்கு சப்புக்கொட்ட பிள்ளைகள் விரும்பி உண்டனர். பின்னர், தாயிடம் விடைபெற்றுப் பள்ளிக்குத் துள்ளிக்குதித்து ஓடினர்.

வாய்க்காலும் வரப்பும் நிறைந்த வயலில், வேலை செய்து கொண்டிருந்த கணவனுக்கு உணவளிக்க, கலயத்தில் சோறுடன் அம்பென விரைந்தாள் அறிவுமதி. இனிமையான காலைப்பொழுது இப்படியாகக் கழிந்தது.

எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்தல், தமக்கான நடையில் எழுதுதல்

வாங்க பேசலாம்

- மன்னவனூர் கிராம வருணனையை உன் சொந்த நடையில் கூறுக .
- உமது ஊரின் மாலை நேரக் காட்சிகளை வருணித்துக் கூறுக.
- பாடப்பகுதியை வாய்விட்டுச் சரியான உச்சரிப்புடன் படித்துக் காட்டுக.

சிந்திக்கலாமா?

படத்திலுள்ள எந்தக் கிராமத்தில் நீ வாழ விரும்புகிறாய்? ஏன்? உனது ஊரைச் சுத்தமாக்க என்ன செய்யலாம்? திட்டமிடுக.

1

2

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான பலூன்களை எடுத்துப் பொருத்துக.

01 வேளை

02 பொதி

03 ஆயத்தப்படுத்துதல்

04 துளிர்

05 கொடியடுப்பு

தாமதப் படுத்துதல்

முதிர்ந்த இலை

இளம் இலை

வேலை

பக்க அடுப்பு

நேரம்

மெதுவாக

தயார் செய்தல்

மூட்டை

AV1LTD

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 சாலையெங்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) சாலை + யெங்கும் ஆ) சாலை + எங்கும்

இ) சால + எங்கும் ஈ) சால + யெங்கும்

02 சுண்டியிழுக்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) சுண்டி + யிழுக்கும் ஆ) சுண் + டியிழுக்கும்

இ) சுண்டு + இழுக்கும் ஈ) சுண்டி + இழுக்கும்

03 ஓடி + ஆடி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) ஓடிஆடி ஆ) ஓடியோடி

இ) ஓடியாடி ஈ) ஒடியாடி

04 காலை + பொழுது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) காலைபொழுது ஆ) கால்பொழுது

இ) காலைப்பொழுது ஈ) காலப்பொழுது

05 வரகு + அரிசி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) வரகரிசி ஆ) வரகுஅரிசி

இ) வரக்கரிசி ஈ) வரகுகரிசி

06 உணவு + அளிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) உணவுஅளிக்க ஆ) உணவளிக்க

இ) உணவுவளிக்க ஈ) உணவ்வளிக்க

வினாக்களுக்கு விடையளி

01 அழகிய மலைக்கிராமத்தின் பெயர் என்ன?

02 கிராமத்தில் உனக்குப் பிடித்த இயற்கைக் காட்சிகளை எழுதுக.

03 பிள்ளைகள் காலை உணவாக என்ன உண்டார்கள்?

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக

எ.கா: பச்சைப்பசேல் என்ற வயல்வெளி ....

உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சிறு தானிய உணவுகளே நம் உடல்நலத்திற்கு ஏற்றவை. குதிரை வாலி அரிசி, தினை, வரகரசி, கேழ்வரகு, கம்பு, சோளம், பனிவரகு அரிசி, மாப்பிள்ளை சம்பா அரிசி போன்றவை சிறு தானியங்கள் ஆகும். இந்தச் சிறு தானியங்களைக் கொண்டு, பல உணவு வகைகளை மண் பானைகளில் சமைத்துப் பயன்படுத்துவது மிகவும் நல்லது. நாம் உண்ட உணவு முழுமையாகச் செரித்த பிறகுதான், அடுத்தவேளை உணவை நாம் உண்ண வேண்டும். இதைத்தான் நம் முன்னோர்கள், "பசித்துப் புசி" என்றனர். இவற்றைத் தவிர்த்துவிட்டுத் துரித உணவுகளை உண்ணத் தொடங்கியதே பல்வேறு நோய்கள் ஏற்படக் காரணமாகிறது.

சிறு தானிய உணவுகளை உண்போம்!

வளமான வாழ்வைப் பெறுவோம்!

01 எவ்வகை உணவு முறை நமக்கு ஏற்புடையது?

02 சிறு தானியங்களுள் எவையேனும் நான்கு எழுதுக.

03 துரித உணவு வகைகளை உண்ணக் கூடாது. ஏன்?

கலையும் கைவண்ணமும்

தேவையான பொருட்கள்:

வெள்ளை வரைபட அட்டை, சிறிதளவு மணல், பசை, கரிக்கோல், வண்ணப் பொடி.

செய்யும் முறை

வெள்ளை வரைபட அட்டையில் உனக்குப் பிடித்த படத்தினை வரைந்து கொள். வரைந்த பகுதிக்குள் மட்டும் பசையினைத் தடவு. தடவிய பசை காய்வதற்குள் மணலைத் தூவு. நன்றாகக் காய்ந்த பின் அட்டையைக் கவிழ்த்துவிட்டு, பிறகு திருப்பினால் அழகிய மணல் ஓவியம் கிடைக்கும். தேவையான இடத்தில் வண்ணப் பொடிகளைத் தூவி மேலும் அழகுப்படுத்து. இதனை வாழ்த்து அட்டையாகவும் பயன்படுத்தலாம்.

அறிந்து கொள்வோம்



- இரண்டு சொற்கள் ஒரே கருத்தினை வலுப்படுத்துவது நேரிணை.
  எ.கா:
  சீரும் சிறப்புமாக,
  ஓங்கி உயர்ந்த.
- இரண்டு எதிர்ச்சொற்கள் எதிரெதிர் கருத்தினை வலுப்படுத்துவது எதிரிணை.
  எ.கா:
  இரவு பகல்,
  மேடு பள்ளம்

செயல் திட்டம்

- சிறுதானியங்கள், நவதானியங்கள் ஆகியவற்றைச் சேகரித்து, ஒட்டி அதன் பெயரை எழுதிப் படத்தொகுப்பு தயார் செய்க.

9 கரிகாலன் கட்டிய கல்லணை

மணிமொழியும் கனிமொழியும் தங்களது முதல் பருவ விடுமுறையில், திருச்சியிலுள்ள தம் மாமா வீட்டிற்குச் சென்றனர். கல்லணையைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தினை மாமாவிடம் கூறினர். மாமாவும் அதற்கு இசைந்து தம் குடும்ப உறுப்பினர்களையும் அழைத்துக் கொண்டு கல்லணைக்குச் செல்கிறார்.

மணிமொழி : எனக்கு இந்தப் பயணம் மகிழ்ச்சியைத் தருகிறது மாமா.

கனிமொழி : எனக்கும் தான். ஏனென்றால் நம்மோடு அத்தையும் கபிலனும் வருவது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

அத்தை : நாம் பார்க்கப் போகும் கல்லணையை நெருங்கிவிட்டோம்.

மாமா : வாருங்கள்! கல்லணையைச் சுற்றிப் பார்ப்போம்.

கனிமொழி : மாமா, கல்லணை எந்த மாவட்டத்தில் உள்ளது?

மாமா : தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து 20 கிமீ தொலைவில் உள்ளது. இந்தக் கல்லணையைக் கரிகாலன் என்ற மன்னன் கட்டினான்.

மணிமொழி : கல்லணை கட்டிய கரிகாலனைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளேன் மாமா, உங்களுக்குத் தெரிந்த செய்திகளைக் கூறுங்கள்.

அத்தை : எனக்குத் தெரியும். நான் கூறுகிறேன் கேளுங்கள். சோழ அரசர்களில் சிறப்புமிக்க அரசன் கரிகாலன் ஆவார். இவரது இயற்பெயர் வளவன் என்பதாகும்.

கனிமொழி : இவரது பெயர் வளவன் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் கரிகாலன் என்ற பெயர் எப்படி வந்தது?

மாமா : கரிகாலன் என்பதற்குக் கருகிய காலை உடையவன் என்பது பொருள். இளம் வயதில் இவருக்கு ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக இப்பெயர் இவருக்கு வழங்கலாயிற்று.

மணிமொழி : ஐ! கல்லணை எவ்வளவு நீளமாகவும், பார்ப்பதற்கு எவ்வளவு அழகாகவும் இருக்கிறது. இந்தக் கல்லணையைக் கட்ட கரிகாலன் எடுத்துக் கொண்ட முயற்சியைக் கூறுங்கள் மாமா.

W9K8ZU

மாமா : சரி கூறுகிறேன். எனது ஆசிரியர் எனக்குச் சொன்ன செய்திகளை நான் உங்களுக்குக் கூறுகிறேன். தற்போது பயன்பாட்டில் உள்ள மிகப் பழைமையான ஒரே அணை கல்லணை. இதுவே உலகின் மிகப் பழைமையான நீர்ப்பாசனத்திட்டம் எனவும் கூறப்படுகிறது. மணலில் அடித்தளம் அமைத்துக் கட்டியுள்ளார்கள். இது பழந்தமிழரின் கட்டுமானத் திறனுக்குச் சான்றாகும். இது இன்று வரை வியத்தகு சாதனையாக உள்ளது.

மணிமொழி : ஓ! அப்படியா மாமா..........

மாமா : ஆம், காவிரியில் அடிக்கடி பெருவெள்ளம் வரும், ஆனால் அந்த நீர் எதற்கும் பயன்படாமல் கடலுக்குச் சென்றுவிடும். மழைக்காலத்தில் வெள்ளப் பெருக்காலும், கோடைக்காலத்தில் நீர் இன்றியும் மக்கள் துயரப்பட்டதைக் கண்டு அதனைத் தடுக்கும் பொருட்டு பெரியதோர் அணையைக் கட்ட முடிவெடுத்தான் கரிகாலன்.

மணிமொழி : அப்போதே இரும்புக் கம்பிகள், பைஞ்சுதை (சிமெண்ட்) இருந்தனவா?

மாமா : இல்லையம்மா, அணை கட்டப்பட்ட முறையைச் சொல்கிறேன் கேள். காவிரி ஆற்றின்மீது பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அந்தப் பாறையின் மேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒரு வித ஒட்டும் களிமண்ணைப் பூசி, இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளும்படி செய்தனர். இது பல நூற்றாண்டுகள் கடந்தும், இன்றளவும் உறுதியோடு நிற்கிறது. கல்லணை தமிழர்களின் கட்டுமானத் திறனைப் பறை சாற்றுவதாக உள்ளது.

கபிலன் : இதோ, இங்கே பாருங்கள். ஒரு கல்வெட்டு உள்ளது. இதில் என்ன எழுதியிருக்கிறது என்று படிப்போம் வாருங்கள்.

மாமா : இவ்வணை இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. காவிரி ஆறானது காவிரி, கொள்ளிடம், வெண்ணாறு, புதுஆறு என நான்காகப் பிரிகிறது. காவிரியாறு பிரியும் இடத்தில்தான் கல்லணை கட்டப்பட்டுள்ளது. இதனால்தான் திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்கள் வளமாகின்றன. இது உழவுப் பாசனத்திற்கான மிகப்பெரிய திட்டமாகும்.

அத்தை : மதிய உணவு கொண்டு வந்துள்ளேன், மரநிழலில் அமர்ந்து அனைவரும் உணவு உண்போம் வாருங்கள்!

கனிமொழி : கல்லணை, பார்ப்பதற்குக் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. எனவே கரிகாலனுக்கு நன்றி கூறுவோம்.

மணிமொழி : கல்லணை உள்ளவரை கரிகாலனின் புகழ் நிலைத்துநிற்கும்.

வாங்க பேசலாம்

- கல்லணை பற்றி உனக்குத் தெரிந்த செய்திகளை உன் சொந்த நடையில் கூறு.
- உமது ஊரில் உள்ள மிகப் பழைமையான இடம் எது? அதுபற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

சிந்திக்கலாமா?

கோடைக்காலங்களில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம் என்ன?

நீர்ப்பற்றாக்குறையைப் போக்க என்ன செய்வாய்?

பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்டல் / வினாக்கள் எழுப்புதல், அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை / எதிர் வினைகளை வெளிப்படுத்துதல்.

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான பழத்தைத் தேர்ந்தெடுக்க

01 துயரம் இச்சொல் குறிக்கும் பொருள் ....

02 வியத்தகு இச்சொல் குறிக்கும் பொருள் ....

03 முறியடித்து இச்சொல் குறிக்கும் பொருள் ....

04 சூழ்ச்சி இச்சொல் குறிக்கும் பொருள் ....

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 பெருவெள்ளம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பெருமை + வெள்ளம் ஆ) பெரு + வெள்ளம்

இ) பெரு + வுள்ளம் ஈ) பெரிய + வெள்ளம்

02 தங்கியிருந்த இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) தங்கி + இருந்த ஆ) தங்கி + யிருந்த

இ) தங்கியி + ருந்த ஈ) தங்கு + இருந்த

03 அமைந்துள்ளது இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) அமைந் + துள்ளது ஆ) அமைந்து + உள்ளது

இ) அமைந்து + ள்ளது ஈ) அமைந் + உள்ளது

04 அரசு + ஆட்சி என்பதைச் சேர்த்து கிடைக்கும் சொல் ....

அ) அரசஆட்சி ஆ) அரசாட்சி

இ) அரசுசாட்சி ஈ) அரசுஆட்சி

05 நீர் + பாசனம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) நீர்பாசனம் ஆ) நீர்ப்பாசனம்

இ) நீரப்பசனம் ஈ) நீரபாசனம்

பந்தை அதன் எதிர்ச்சொல் கூடையில் போடலாமா?



சரியானதை எடுத்து எழுதுக

01 கல்லணை அமைந்துள்ள மாவட்டம் .... (திருச்சி/ தஞ்சாவூர்)

02 தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு .... (வைகை / கொள்ளிடம்)

03 கல்லணையைக் கட்டிய அரசன் .... (கரிகாலன் / இராசராசன்)

04 கல்லணை .... தொழில்நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது (பழந்தமிழர் / இன்றைய)

வினாவிற்கு ஏற்ற விடையளிக்க.

01 கரிகாலனின் இயற்பெயர் என்ன?

02 கரிகாலன் என்று பெயர் வரக் காரணம் என்ன?

03 கரிகாலன் கல்லணையைக் கட்ட காரணம் யாது ?

04 கல்லணையின் சிறப்பாக நீ நினைப்பதை எழுதுக.

மொழியோடு விளையாடு

ஓர் எழுத்தைக் கண்டுபிடி, நான்கு சொல்லைப் பெறலாம்

	ச ம ம்	
ம ரம்	ம	ம ணம்
	ம ருந்து	

	நீ __ ம்	
வ __ ம்		கா__ ம்
	வி __ க்கு	

	__ ளம்	
பழ __		தொ __ தி
	__ டம்	

	மா __ லை	
__ குதி		__ றகு
	கரு __	

அறிந்து கொள்வோம்



தமிழ்நாட்டிலுள்ள முக்கிய அணைகள்

- கல்லணை
- மேட்டூர் அணை
- வைகை அணை
- சாத்தனூர் அணை
- பவானி சாகர் அணை

செயல் திட்டம்

நூலகத்திற்குச் சென்று வரலாற்று நூல்களைப் படித்து யாரேனும் ஐந்து அரசர்களின் பெயர்களையும், அவர்கள் செய்த நற்செயல்களையும் தெரிந்து கொண்டு அட்டவணையை நிரப்பி வருக

வ. எண்	பெயர்	சிறப்பு
1		
2		
3		
4		
5		

10 காவல்காரர்

சட்டை மேலே கோட்டு மாட்டிச்
சரிகை போட்ட வேட்டி கட்டி
நட்ட நடுவே தோட்டம் தன்னில்
ராஜா போலே நின்றி ருந்தார்

இரவும் பகலும் தூங்கி டாமல்
இங்கு மங்கும் நகர்ந்தி டாமல்
பெருமை யோடு காவல் காப்பார்
பெயரில் லாத காவல் காரர்

காக்கை குருவி அங்கே வந்தால்
காவல் காரர் நிற்கக் கண்டு
சீக்கி ரத்தில் வந்த வழியே
திரும்பி ஓடும் பயந்து கொண்டு

காற்று பலமாய் அடித்த தாலே
கனத்த மழையும் பெய்த தாலே
நேர்த்தி யான அவரின் உடைகள்
நித்தம் கிழிந்து வந்த தையோ

இதனைக் கண்ட காகம் ஒன்று
இந்தச் சமயம் இவர்க்கு நாமும்
உதவி செய்தால் பயமில் லாமல்
உலவ லாமே என்று கருதி

அருகில் உள்ள வீட்டிற் குள்ளே
யாரும் இல்லா வேளை சென்று
கறுப்புக் கோட்டு வெள்ளைச் சட்டை
கட்டிக் கொள்ள சரிகை வேட்டி

Tamil 4th-std_Term2.indd 1 8/7/2019 6:03:16 PM

எடுத்து வந்து காவல் காரர்
இருக்கும் இடத்தில் போட்டு விட்டே
உடுத்திக் கொள்வீர் என்று சொல்லி
ஒதுங்கி நின்று பார்த்த தங்கே

காவல் காரர் பழைய உடையைக்
கழற்றிக் கீழே போட வில்லை
ஆவ லோடு புதிய உடையை
அணிய வில்லை அசைய வில்லை

உடனே காகம் அருகில் சென்றே
உற்று நன்றாய்ப் பார்த்த பின்னர்
அடடே இந்தக் காவல் காரர்
யாரோ என்று நினைத்தி ருந்தேன்

வைக்கோல் மேலே துணியைச் சுற்றி
வைத்தி ருக்கும் பொம்மை என்றே
இக் கணத்தே நண்பர் அறிய
எடுத்துச் சொல்வேன் என்று கூறி,

காவல் காக்கும் பொம்மை தலையில்
காலை வைத்து நின்று கொண்டு
கூவி அழைத்துப் பறவை யாவும்
கூடச் செய்து விட்ட தங்கே

– அழ. வள்ளியப்பா

ஓசைநயமும் கருத்தும் மிக்க பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன்

Tamil 4th-std_Term2.indd 2 8/7/2019 6:03:17 PM

பொருள் அறிவோம்

தோட்டத்தின் நடுவில் நின்றிருந்த சோளக்கொல்லைப் பொம்மையைக் காவல்காக்கும் உயிருள்ள மனிதர் என்று காகம் நினைக்கிறது. கனத்த மழையால் ஆடைகள் கிழிந்து நிற்கும் அந்தப் பொம்மையிடம், புதிய ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டுகிறது. ஆனால், அஃது அணிந்து கொள்ளாததால், உயிரற்ற பொருள் என்பதை உணர்ந்து கொள்கிறது. அதனால், அச்சமின்றி மற்ற பறவைகளையும் கூவி அழைக்கிறது.

நூல் குறிப்பு

'மலரும் உள்ளம்' என்னும் நூலின் இரண்டாம் தொகுதியில் இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடியவர் அழ. வள்ளியப்பா. இவர் குழந்தைகளுக்கான கதைகளையும் பாடல்களையும் மிகுதியாகப் பாடியுள்ளமையால், குழந்தைக்கவிஞர் என அழைக்கப்படுகிறார்.

வாங்க பேசலாம்

- கதைப்பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலின் பொருளைப் புரிந்துகொண்டு பாடுக.
- பாடல் பொருளை உமது சொந்த நடையில் கூறுக

சிந்திக்கலாமா!

சூழல் 1

மீனாவின் அம்மா மீனாவுக்கு மட்டுமின்றி மீனாவின் நண்பர்களுக்கும் பிறந்த நாள் வாழ்த்துகள் தெரிவிக்கிறார்.

சூழல் 2

வளவனின் அப்பா யார் எந்த உதவி கேட்டாலும் நீ செய்யக் கூடாது என்று கூறுகிறார்.

இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

Tamil 4th-std_Term2.indd 3 8/7/2019 6:03:18 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'பெயரில்லாத' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பெயர் + இலாத ஆ) பெயர்+ இல்லாத

இ) பெயரில் + இல்லாத ஈ) பெயரே + இல்லாத

02 வைக்கோல் மேலே துணியைச் சுற்றி வைத்திருக்கும் பொம்மை இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் ....

அ) கீழே ஆ) அருகில்

இ) தொலைவில் ஈ) வளைவில்

03 'சோளக்கொல்லைப் பொம்மை' என்பது ....

அ) உயிருள்ள பொருள் ஆ) உயிரற்ற பொருள்

இ) இயற்கையானது ஈ) மனிதன் செய்ய இயலாதது

04 அசைய+ இல்லை– இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....

அ) அசைய இல்லை ஆ) அசைவில்லை

இ) அசையவில்லை ஈ) அசையில்லை

05 நித்தம் – இச்சொல்லுக்குரிய பொருள் ....

அ) நாளும் ஆ) இப்பொழுதும்

இ) நேற்றும் ஈ) எப்பொழுதும்

E9PP1N

வினாக்களுக்கு விடையளிக்க.

01 தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றது எது?

02 காவல்காரருக்குத் தோட்டத்தில் உள்ள பணி யாது?

03 பொம்மைக்குக் கறுப்புக்கோட்டு, வெள்ளைச்சட்டை கொடுத்தது எது?

04 காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் ஏன் அணியவில்லை?

Tamil 4th-std_Term2.indd 4 8/7/2019 6:03:18 PM

முதலெழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக.

சட்டை	சரிகை	________	________
________	________	________	________

மேகங்களுக்குப் பொருத்தமான மழைத்துளிகளை இணைக்க.



இணைத்த சொற்களைக் கீழே எழுதுக.

1. சரிகை வேட்டி
2. ________
3. ________
4. ________
5. ________

பாடலைத் தொடர்ந்து பாடுவோமா?

மக்கள் ஒன்று கூடியே
மகிழ விரும்பும் திருவிழா
குழந்தைச் செல்வம் யாவுமே
கூடிஆடும் திருவிழா

____
____
____
____

Tamil 4th-std_Term2.indd 5 8/7/2019 6:03:18 PM

உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

நமக்குப் பயன்தரும் மரங்களுள் வாழையும் ஒன்று. வாழையின் பூ, காய், கனி, தண்டு ஆகியவற்றை நாம் சமைத்து உண்கிறோம். வாழைநாரைக் கொண்டு பூக்களைத் தொடுக்கிறோம். திருமண விழாக்களிலும் வீட்டில் நடைபெறும் விழாக்களிலும் வாழையிலையில் விருந்து படைக்கின்றனர். வாழையில் செவ்வாழை, பூவன் வாழை, மலை வாழை எனப் பலவகைகள் உள்ளன.

வினாக்கள்

1. வாழையின் எப்பகுதிகள் உணவாகப் பயன்படுகின்றன?
2. வாழைநார் எதற்குப் பயன்படுகிறது?
3. வாழையின் வகைகளுள் இரண்டை எழுதுக.
4. வாழையிலை – இச்சொல்லைப் பிரித்து எழுதுக.
5. பலவகை – இச்சொல்லுக்கு எதிர்ச்சொல் எழுதுக.

செயல் திட்டம்

உங்கள் இருப்பிடத்திற்கு அருகிலிருந்து கீழ்க்காணும் செய்திகளைத்திரட்டுக.

1. தோட்டத்தின் பெயர்
2. உரிமையாளர் பெயர்
3. தோட்டம் அமைந்திருக்கும் ஊர்
4. நீர்வசதி கிணறு/ அடிகுழாய்/ ஆறு/குளம்
5. தோட்டத்தில் விளையும் காய்கறி / பழம் பெயரைக் குறிப்பிடுக.
6. தோட்டம் பற்றிய உனது கருத்து நன்றாக உள்ளது/ ஓரளவு / வளர்ச்சிதேவை

அறிந்து கொள்வோம்

1. தோட்டத்தில் பூச்சித் தாக்குதலைத் தடுக்க முட்டை ஓட்டுத் தூளுடன், சிறிது உப்பைக் கலந்து செடியைச் சுற்றிலும் வளையம் போட வேண்டும்.
2. வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைகொல்லிகள் தாவரங்களின் கனிம வளங்களைக் குறைக்கின்றன.
3. மண் அரிப்பைத் தடுக்க மரங்கள் நட்டு வளர்த்தல் இன்றியமையாதது.

11 எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்!

மாமரத்திலிருந்த கிளிகள் கீச் கீச் எனக் குரலெழுப்பி அங்கும் இங்கும் பறந்துகொண்டிருந்தன. அருகிலிருந்த வைக்கோல்போரின் மீது சேவலொன்று மெதுவாக நடைபயின்று கொண்டிருந்தது. தோட்டத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த கன்றைக் கண்டு, பசு ம்மா. . . எனக் குரலெழுப்பியது. இவற்றையெல்லாம் தன் வீட்டின் மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த இளமாறன், தன் தாத்தாவைத் தேடிக் கீழே இறங்கிவந்தான். தாத்தாவைக் காணாததால், அவர் விடியற்காலையிலேயே வயலுக்குச் சென்றிருப்பார் என எண்ணினான்.

அப்போது, "இளமாறா... இங்கே வாப்பா" என்று அம்மாவின் குரல் சமையலறையிலிருந்து ஒலித்தது. "இதோ வர்றேம்மா" என்றவாறே இளமாறன் வீட்டிற்குள் விரைந்து ஓடினான்.

Tamil 4th-std_Term2.indd 7 8/7/2019 6:03:19 PM

"தாத்தாவிற்குச் சாப்பாடு கொடுத்துவிட்டு வாப்பா..." என்று கூறிய அம்மாவிடம், "சரிம்மா" என்ற இளமாறன், அம்மாவிடமிருந்து உணவைப் பெற்றுக்கொண்டு வயலை நோக்கிச் சென்றான்.

வயலுக்குச் செல்லும் வழியில் பூத்திருந்த அழகிய பூக்கள் அவனைப் பார்த்துச் சிரிப்பதைப் போலிருந்தன. தன் கைகளால் அவற்றை மெல்ல வருடியபடியே சென்றான் இளமாறன். அந்தப் பூந்தோட்டத்தைத் தாண்டியதும், அடக்கத்துடன் தலைசாய்த்துக் கற்றறிந்த சான்றோர் போலக் குனிந்து நிற்கும் நெல்மணிகளைக் கண்டான். வயல்வரப்பைத் தாண்டாமல் தேங்கி நிற்கும் நீரைக் கண்டு மகிழ்ந்தான்.

கால்வாயில் பள்ளம் பார்த்துப் பாய்ந்தோடும் தண்ணீரில் தன் கால்களை நனைத்தும் கைகளால் அலைந்தும் விளையாடினான். அப்போது எழுந்த ஒலியைக் கேட்டு, அருகிலிருந்த வளையிலிருந்து நண்டுகள் எட்டிப் பார்த்தன. அவை தம் கொடுக்குகளை மேலும்கீழுமாக அசைத்து நகர்ந்ததைப் பார்த்து வியப்படைந்தான்.

சற்றுத் தொலைவில், தாத்தா வயலில் தனியாக வேலைபார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். "தாத்தா.... தாத்தா..." என்றழைத்தவாறே அவரருகில் சென்றான். தாத்தாவை அவனுக்கு மிகவும் பிடிக்கும்.

இளமாறனின் குரல் கேட்டதும், தாத்தா திரும்பிப் பார்த்தார். "பார்த்து வாப்பா..." என்று சொல்லிக் கொண்டே அவனருகே சென்றார் தாத்தா. ஓடிவந்து தன்னைக் கட்டிக்கொண்ட பேரனை உச்சிமோந்து தூக்கி மகிழ்ந்தார். அவன் கொண்டு வந்த உணவைப் பெற்றுக் கொண்டார்.

Tamil 4th-std_Term2.indd 8 8/7/2019 6:03:20 PM



அருகிலிருந்த வேப்பமரத்தின் நிழலில் தாத்தாவும் பேரனும் அமர்ந்தனர். தாத்தா, தன் கையாலேயே பேரனுக்கு உணவூட்டி மகிழ்ந்தார். உணவைச் சாப்பிட்டுக் கொண்டே இளமாறன் அவரிடம் பேசத் தொடங்கினான்.

"தாத்தா, நீங்க ஏன் இவ்வளவு வயதாகியும் நிலத்தில வேலை செஞ்சு துன்பப்படறீங்க?"

"செல்லக்குட்டி, எனக்கு அவ்வளவு வயசா ஆயிடுச்சு! இங்க பாருப்பா, இந்த வயல்லே வேலை செஞ்சுதான் என் உடம்பு இன்னும் வலிமையா இருக்கு. நான் இதுவரைக்கும் நோய்நொடின்னு படுத்தது இல்லே. கண்ணு, இந்த வயலுதான் நமக்குச் சொத்து. இந்த மண்ணுல விளையற பயிர்கள்தாம் நம்மை வாழவைக்குது. நாம உண்ணுகின்ற உணவுப் பொருள்களெல்லாம் என்னைப் போல உழவர்களின் உழைப்பின் மூலமாகக் கிடைக்கிறதுதான்.

நெல், கம்பு, கேழ்வரகு, உளுந்து, துவரம்பருப்பு, எண்ணெய் வித்துகள், காய்கள், பழங்கள் இன்னும் நிறைய சொல்லிக்கிட்டே போகலாம். அத்தனையும் விளைவிப்பது நாங்கதான். அதனால, இந்த நிலத்தைத்தான் நாம தெய்வமா வணங்கணும் செல்லக்குட்டி. இந்த நிலத்தை ஒருநாளு பார்க்கலேன்னாலும் எனக்குத் தூக்கமே வராதுப்பா. அதுமட்டுமா? இந்த நிலத்தில விளையற விளைச்சலெல்லாம் நமக்கு மட்டும் பயன்படுதுன்னு நினைக்கிறியா? அதுதான் இல்லே, நம்ம தேவைக்குப் போக விளைந்ததைப் பிறருக்கும் கொடுக்கும்போது கிடைக்கிற மகிழ்ச்சி இருக்கு பாரு, அதுக்கு ஈடுஇணையே இல்லேப்பா.

ஆமா, தாத்தா. சரியாத்தான் சொல்றீங்க. உழவர்கள்தாம் உலகத்துக்கே அச்சாணின்னு எங்க ஆசிரியர்கூடச் சொன்னாரு.

Tamil 4th-std_Term2.indd 9 8/7/2019 6:03:21 PM

தாத்தாவிடம் பேசிக்கொண்டே அருகிலிருந்த வெண்டைச்செடியிலிருந்து ஒரு வெண்டைக்காயைப் பறித்தான் இளமாறன். "இன்னும்கூட இரண்டு, மூணு பறிச்சுச் சாப்பிடுப்பா, பச்சையா சாப்பிட்டா உடம்புக்கு நல்லதுதான்" என்றார் தாத்தா.

தாத்தா, வெண்டைக்காய் சுவையாக இருக்கிறதே என்ற பேரனிடம், ஆமாம்பா. இயற்கை உரம் போட்டுத்தான் இங்க எல்லா உணவுப் பயிர்களையும் விளைவிக்கிறோம். அதனால, உடலுக்கும் கெடுதி இல்லே உணவுப்பொருளும் சுவையா இருக்கும்" என்று கூறினார் தாத்தா அப்போது அவரின் கண்கள் சற்றே கலங்கியதுபோல் உணர்ந்தான் இளமாறன். "தாத்தா... தாத்தா.. என்னாச்சு? ஏன் என்னவோ போல் இருக்கிறீங்க?" "ஒண்ணுமில்லேப்பா" என்ற தாத்தா, உண்மையாகவே தம் கண்களைத் துடைத்துத்தான் கொண்டார்.

தாத்தா, நீங்க எங்கிட்டே எதையோ சொல்ல வேண்டான்னு நினைக்கிறீங்க, அப்படித்தானே, சொல்லுங்க தாத்தா" என்றான் இளமாறன்.

"இம்..ம்.. அப்போதெல்லாம் நிறைய மாடுகள் இருக்கும். அவற்றின் சாணத்தை ஒன்று சேர்த்து, எருவாக்கி, நிலத்தில் போட்டு, இயற்கையா உழவு செய்தோம். தாவரங்களோட தழைகளை மண்ணிலிட்டு மட்கச் செய்து நல்ல விளைச்சல் கண்டோம். இப்படி விளையற உணவுப்பொருளைச் சாப்பிடுட்டவங்க நல்ல உடல்நலத்தோடும் நோய் எதிர்ப்புச்சக்தியோடும் இருந்தாங்க. ஆனால், இப்ப எல்லாம் இயற்கை உரத்தையே பார்க்க முடியலே.

தாத்தா, நம்ம மாமா வீட்டிலே மூட்டை மூட்டையா அடுக்கியிருக்கே. அவையெல்லாம் இயற்கை உரமில்லையா?

இல்லப்பா. அவையெல்லாம் செயற்கை உரம். அவற்றை மண்ணில் போட்டு மண்ணைக் கெடுக்கிறோம் என்ற வருத்தம் எனக்கும் இருக்கு. செயற்கை உரங்களைத் தெளித்து உழவனுக்கு உதவியா இருக்கிற தேனீ, வண்ணத்துப்பூச்சி, மண்புழுன்னு எல்லாத்தையும் அழிச்சி, மண்ணைக் கெடுக்கிறோம்".

தாத்தா, செயற்கை உரங்களால நிலத்துக்கு அவ்வளவு கெடுதலா?

இம்.. செயற்கை உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் உணவுப்பொருளை உண்பதால் நமக்கு நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்து நோய்கள் வருகின்றன. உணவுகள் உயிர்ச்சத்துகள் இல்லாத சக்கைகளாகவும் மாறிப்போகின்றன. உடலை வாட்டும் நோயான சர்க்கரை நோய், வயது வித்தியாசம் இல்லாமல் சிறுபிள்ளைகளுக்கும் வருகிறது.

தாத்தா, அப்ப தண்ணீர் மட்டும்தான் சுத்தமா இருக்குதுன்னு சொல்லுங்க!

அட,போப்பா! செயற்கை உரம், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை மண்ணில் தெளித்துத் தண்ணீர் விடுகிறோம். அந்தத் தண்ணீர், நிலத்தடி நீருடன் கலந்து அதையும் கெடுத்துவிடுகிறதே. இதுபோதாது என்று தொழிற்சாலைக் கழிவுகளையும் அப்படியே நிலத்தில்விட்டு, நிலத்தடி நீரை மாசுபடுத்துகிறோமே".

அடப்பாவமே! அப்படின்னா, நாம எதைத்தான் சாப்பிடுவது?

Tamil 4th-std_Term2.indd 10 8/7/2019 6:03:21 PM

பழைய முறைப்படி நாம இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, வேளாண்மை செய்யணும்பா. அப்போதுதான் நாம் மட்டுமல்ல, எல்லாருமே நலமா இருப்பாங்க!

"தாத்தா, நீங்க சொன்னதை நான் நல்லாப் புரிஞ்சிக்கிட்டேன். உழவுதான் நமக்கு உயிர். அதில விளையற பயிர்கள்தாம் நம்ம எல்லாருக்கும் உணவா இருக்கு. அதனால, நம்ம உயிர் காக்கும் உணவுப்பொருளை விளைவிக்கிற இந்த நிலத்துக்கு நாம எந்தக் கெடுதலும் செய்யக்கூடாது. முடிஞ்சவரைக்கும் செயற்கை உரத்தைவிட்டுட்டு, இயற்கை உரத்தைத்தான் பயன்படுத்தணும். சரியா, தாத்தா. அப்பாக்கிட்டே மட்டுமின்றி, என் நண்பர்களுக்கும் நீங்க சொன்னதைக் கட்டாயம் எடுத்துச் சொல்வேன்".

"நல்லது, கண்ணு. அப்படியே செய். எல்லாருக்கும் நன்மையைத் தர்ற ஒரு செய்தியைச் சொன்னா, யாரும் ஏத்துக்கொள்ளாமலா போவாங்க? மெதுவாப் புரிஞ்சுக்குவாங்க. சரி, கண்ணு, உச்சி வெயிலு வர்றதுக்குள்ளே நீ வீடுபோய்ச் சேருப்பா".

தாத்தாவிடம் விடை பெற்று ஆழ்ந்த சிந்தனையோடு வீடு திரும்பினான் இளமாறன். வீட்டிற்குள் நுழைந்ததும் யாரிடமும் பேசாமல் அமைதியாகத் தன் அறைக்குச் சென்றான். அப்போது அங்கு வந்த அவனுடைய அப்பா, "இளமாறா, என்னாச்சு? ஏன் ஒரு மாதிரியா இருக்கே? ஓ, வயலுக்குப் போயிட்டு வந்தியா? இந்த வெயிலு உனக்கு ஒத்துக்கலையோ? உங்க தாத்தாகூட நான் சொல்றதை எங்க கேட்கிறாரு? இந்தத் தள்ளாத வயசில எதுக்கு வயல்ல போய் வேலை செய்யணும்? வீட்ல இருக்கலாம்ல" என்று கூறிய அப்பாவை முறைத்த இளமாறன், "அதுசரிப்பா, நீங்க நினைக்கிறமாதிரி யாருமே வயல்வேலைக்குப் போகலன்னா என்னாகும்? எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்...! நாம என்ன பணத்தையா சாப்பிடமுடியும்?" என்றான்.

இளமாறனின் பேச்சில் வெளிப்பட்ட உண்மை, தம்மைச் சுடுவதுபோல் உணர்ந்த அப்பா, ஒன்றும் பேசாமல் வயலை நோக்கி நடந்தார்.

வாங்க பேசலாம்

- "பணத்தையா சாப்பிடமுடியும்?" என்ற இளமாறனுக்கு நீங்களாக இருந்தால் என்ன விடை சொல்வீர்கள்?



நம் நாட்டில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. உழவுத்தொழில் செய்ய யாரும் விரும்பவில்லையெனில், உலகம் என்னவாகும்?

Tamil 4th-std_Term2.indd 11 8/7/2019 6:03:21 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'பாய்ந்தோடும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பாய் + தோடும் ஆ) பாய்ந்து + ஓடும்

இ) பயந்து + ஓடும் ஈ) பாய் + ஓடும்

02 காலை + பொழுது – இச்சொற்களைச் சேர்த்து எழுதினால் கிடைப்பது ....

அ) காலைப்பொழுது ஆ) காலைபொழுது

இ) காலபொழுது ஈ) காலப்பொழுது

03 பின்வருவனவற்றுள் எது இயற்கை இல்லை?..........................

அ) மலை ஆ) காடு

இ) நெகிழி ஈ) நிலம்

04 குனிந்து– இச்சொல் குறிக்கும் பொருள் ....

அ) வியந்து ஆ) விரைந்து

இ) துணிந்து ஈ) வளைந்து

PGGZLW

05 தன்+ உடைய இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....

அ) தன்னுடைய ஆ) தன்உடைய

இ) தன்னூடைய ஈ) தன்உடையை

வினாக்களுக்கு விடையளிக்க

01 செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?

02 நிலத்தைத் தெய்வமாக வணங்கவேண்டும் எனத் தாத்தா கூறக் காரணம் என்ன?

03 'எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்' என இளமாறன் ஏன் கூறினான்?

சொந்த நடையில் கூறுக

உமக்குப் பிடித்த காய்கள், பழங்கள் எவை? ஏன்?

Tamil 4th-std_Term2.indd 12 8/7/2019 6:03:21 PM

அகரமுதலி பார்த்துப் பொருளறிக.

மாசு ---------- வேளாண்மை ----------

சொற்களை இணைத்துத் தொடரை நீட்டித்து எழுதுக.

எடுத்துக்காட்டு :

படித்தேன்	வரைந்தாள்
நான் படித்தேன்	____________
நான் நேற்று படித்தேன்	__________________
நான் நேற்று பாடம் படித்தேன்	______________________
நான் நேற்று தமிழ்ப்பாடம் படித்தேன்	________________________

நிறுத்தக் குறியிடுக

01 நெல் கம்பு கேழ்வரகு போன்றவை தானியங்கள்

02 வெண்டைக்காய் உடலுக்கு நல்லது

03 ஆகா பயிர் அழகாக உள்ளதே

04 அடப்பாவமே அப்படின்னா நாம எதைத்தான் சாப்பிடுவது

புதிய சொற்களை உருவாக்கலாமா?

ல்	ப	ஓ	பல், ஊர்,
பா	நா	க	
று	ஊ	டு	
ர்	ற்	ள்	
வா	ய்	ம்	
கா	த	ண்	
ஏ	லை	ம	

Tamil 4th-std_Term2.indd 13 8/7/2019 6:03:21 PM

படத்தைப் பார்த்து விடுகதைகள் உருவாக்குக.

1 

2

அகர வரிசைப்படுத்துக

தேன், தாளம், தௌவை, துடுப்பு, தென்னை, தையல், தோழமை, தீ, தூய்மை, தொகை, திட்டம், தளிர்

Tamil 4th-std_Term2.indd 14 8/7/2019 6:03:23 PM

சொல்லக்கேட்டு எழுதுக

1. இயற்கை வேளாண்மை
2. உயிர்ச்சத்துகள்
3. செயற்கை உரங்கள்
4. நெல் மணிகள்
5. நண்டுகள்

கலையும் கைவண்ணமும்

வண்ணம் தீட்டுவோமா!



செயல்திட்டம்

உங்கள் வீட்டில் உருவாகும் காய்கறிக்கழிவுகளையும் மட்கும் குப்பைகளையும் பயன்படுத்தி, இயற்கை உரம் தயார் செய்க. அந்த உரத்தை வீட்டிலோ பள்ளியிலோ உள்ள தாவரங்களுக்குப் பயன்படுத்துக.

Tamil 4th-std_Term2.indd 15 8/7/2019 6:03:23 PM

குழுவாக விளையாடலாமா?

- படத்தில் உள்ளதுபோல் அட்டைகளைத் தயார் செய்து கொள்க.

- முதல் அட்டையை அசையாமல் இருக்குமாறு வைத்துக்கொள்க.

- இரண்டாவது அட்டை மட்டும் சுழலுவதற்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். மேல் பக்கமாகக் கடிகார முள் போன்று செய்துவைத்துக் கொள்க.

- மாணவர் ஒருவரை அழைத்து, முதல் அட்டையிலிருந்து ஏதாவது ஒரு படத்தின் பெயரைக் கூறச் சொல்லவேண்டும். அந்த மாணவரையே இரண்டாவது அட்டையையும் சுழற்றச் சொல்ல வேண்டும். கடிகார முள்ளிற்கு நேராக முதல் அட்டையில் கூறிய படத்திற்குப் பொருத்தமான படம் வந்தால் அவர் வெற்றி பெற்றதாகவும், இல்லையெனில் அடுத்தடுத்த சுற்றுக்கு வாய்ப்பு வழங்கியும் விளையாட்டைத் தொடரலாம்.



அறிந்து கொள்வோம்



திருக்குறள்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

– உழவு, குறள் 1033

Tamil 4th-std_Term2.indd 16 8/7/2019 6:03:24 PM

12 யானைக்கும் பானைக்கும் சரி

மரியாதை இராமன் விசித்திரமான வழக்கொன்றை ஒருமுறை எதிர்கொள்ள நேர்ந்தது. உழவர் ஒருவரின் மீது, அரபு வணிகர் ஒருவர் தொடுத்த வழக்கு தான் அது.

அரபு வணிகர், மரியாதை இராமனிடம் "ஐயா, இந்த உழவர் தம் மகன் திருமண விழாவில் ஊர்வலம் விடுவதற்காக என் யானையை இரவல் கேட்டார். நானும் கொடுத்தேன். ஊர்வலத்தின்போது, யானை இறந்துவிட்டது. அந்த யானையைத் திருப்பித் தரச் சொல்லுங்கள்" என்று கூறினார்.

உழவரோ, "ஐயா, அந்த யானை ஊர்வலத்தில் தற்செயலாக இறந்துபோய்விட்டது. அதற்குரிய விலையையாவது, மாற்றாக வேறு யானையையாவது வாங்கித் தருகிறேன் என்று எத்தனையோ முறை கூறிவிட்டேன். ஆனால், இந்த வணிகர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இறந்துபோன அதே யானைதான் வேண்டுமென அடம்பிடித்தால் நான் என்ன செய்வேன்?" என்று வருத்தத்துடன் கூறினார்.

Tamil 4th-std_Term2.indd 17 8/7/2019 6:03:25 PM

உழவர் கூறியதிலிருந்த உண்மையை உணர்ந்துகொண்ட மரியாதை இராமன், இருவரையும் பார்த்து, "நீங்கள் இருவரும் நாளை நீதிமன்றத்துக்கு வாருங்கள்" என்று கூறி அனுப்பினார். பின்னர், உழவரை மட்டும் தனியே அழைத்து, நாளை நீங்களாகவே நீதிமன்றத்திற்கு வரவேண்டா. உங்களை அழைத்து வருவதற்கு அந்த வணிகரை உங்கள் வீட்டிற்கு அனுப்புகிறேன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். அவர் வரும்போது, உங்கள் வீட்டுக் கதவிற்குப் பின் பழைய பானைகளை அடுக்கி வைத்து, கதவைத் தாழ்ப்பாள் போடாமல் வைத்திருங்கள். பின்னர், நடப்பதை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம்"என்று சொல்லி அனுப்பினார்.

உழவரும் மரியாதை இராமன் கூறியதைப்போலவே வீட்டின் கதவுக்குப் பின் பழைய பானைகளை அடுக்கி வைத்தார். அவரை அழைத்து வருவதற்காக வந்த வணிகர், ஆத்திரத்துடன் அவர் வீட்டுக் கதவைத் தட்ட, கதவு வேகமாகத் திறந்துகொள்ள, கதவின் பின்னால் அடுக்கி வைத்திருந்த பானைகள் ஒவ்வொன்றாகக் கீழே விழுந்து உடைந்து நொறுங்கின. அப்போது, வீட்டுக்குள்ளிருந்து வந்த உழவர், "வணிகரே, என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? எங்கள் வீட்டில் காலங்காலமாகப் போற்றி வைத்திருந்த பழம்பானைகள் இவை. இவற்றையெல்லாம் உடைத்துவிட்டீரே, உம்மைச் சும்மா விடப்போவதில்லை. எனக்கு இதே பானைகளைத் திருப்பித் தாருங்கள்" என்று கூக்குரலிட்டார். செய்வதறியாது திகைத்தார் வணிகர். இருவரும் நீதிமன்றத்திற்குச் சென்றனர்.



உழவரின் வீட்டில் நடந்ததைக் கூறினார் வணிகர். அதனைக் கேட்ட மரியாதை இராமன், "ஐயா, வணிகரே! நீரோ இறந்துபோன உம்முடைய அருமையான யானையை உயிருடன் திருப்பித் தரவேண்டும் என்கிறீர். உழவரோ, உடைந்துபோன தம் பழைய பானைகளைத் திருப்பித் தரவேண்டும் என்கிறார். ஆதலால், நீங்கள் உடைத்த பானைகளைத் திருப்பித் தந்துவிட்டால், உழவரும் இறந்துபோன உம்முடைய யானையைத் திருப்பித் தந்துவிடுவார்" எனத் தீர்ப்பு அளித்தார். அவர் கூறியதைக் கேட்ட வணிகர், "ஐயா, என்னை மன்னித்து விடுங்கள். என்னால் பழைய பானைகளைத் தரமுடியாது" என்றார். உடனே, மரியாதைராமன், "ஐயா, வணிகரே, உம்மாலேயே திருப்பித் தரமுடியாது என்றால் உழவரால் மட்டும் எப்படித் திருப்பித் தரமுடியும்? ஆதலால், யானைக்கும் பானைக்கும் சரியாகப் போய்விட்டது" என்று தீர்ப்பளித்தார்.

நீதி: ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு

Tamil 4th-std_Term2.indd 18 8/7/2019 6:03:25 PM

வாங்க பேசலாம்

- யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதையை உம் சொந்தநடையில் கூறுக.

உன் நண்பன் உன்னைத் தவறாகப் புரிந்துகொண்டு உன்மீது சினம் கொண்டால் நீ என்ன செய்வாய்?

வினாக்களுக்கு விடையளிக்க.

4H7CF4

01 உழவர் யானையை எதற்காக இரவல் கேட்டார்?

02 ஊர்வலம் சென்ற யானைக்கு என்ன நேர்ந்தது?

03 மரியாதை இராமன் உழவரைத் தனியே அழைத்து என்ன கூறினார்?

04 யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதை உணர்த்தும் நீதி என்ன?

பூக்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வணிகர் ________________ நாட்டைச் சேர்ந்தவர்
2. உழவர், வணிகர் இருவரின் வழக்கை எதிர்கொண்டவர் ______________
3. திருமண ஊர்வலத்தில் ________________ இறந்து விட்டது.
4. பழைய ________________ கீழே விழுந்து நொறுங்கின.



சொல்லிப் பழகுவோம்

1. பட்டம் விட்ட பட்டாபி, பெட்டிக் கடையில் பொட்டலம் போட்டான்
2. கன்று மென்று தின்றது
3. வாழைப்பழத் தோலால் வழுக்கி விழுந்தான்

Tamil 4th-std_Term2.indd 19 8/7/2019 6:03:26 PM

சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரமைத்து எழுதுக.

தற்செயலாக இறந்துவிட்டது யானை ஊர்வலத்தில்	கீழே பானைகள் உடைந்து விட்டன விழுந்து	விசித்திரமான எதிர்கொண்டார் வழக்கை மரியாதை இராமன்	வைக்கப்பட்டன பானைகள் கதவின் பின்னால் அடுக்கி

1. ____________________________ 2. ____________________________

3. ____________________________ 4. ____________________________

குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை உருவாக்குக. பொருத்தமான தலைப்பிடுக.

நான்கு எருதுகள் – ஒற்றுமையாக வாழ்தல் – சிங்கம் – பிரிக்க நினைத்தல் – எருதுகள் எதிர்த்தல் – சிங்கத்தின் சூழ்ச்சி – எருதுகள் பிரிதல் – சிங்கம் வேட்டையாடுதல்.

குறிப்புகளைக் கொண்டு கட்டத்திலிருந்து விடை காண்போமா?

■	1		
4	■	3	
	2		
		■	■
	■	■	■

இடமிருந்து வலம்

1. பழைமை என்பது இதன் பொருள்
2. வீட்டின் முகப்பில் உள்ளது.
3. தும்பிக்கை உள்ள விலங்கு

மேலிருந்து கீழ்

2 உடலின் ஓர் உறுப்பு

4 வேளாண் தொழில் செய்பவர்

செயல் திட்டம்

வார இதழ்கள், செய்தித்தாள்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் கிடைக்கும் யானை பற்றிய செய்திகளைத் தொகுத்து, செய்தித் தொகுப்பு உருவாக்குக.

Tamil 4th-std_Term2.indd 20 8/7/2019 6:03:27 PM

13 நன்னெறி

ENYN1C



இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே – பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்

– சிவப்பிரகாச சுவாமிகள்

சொல் பொருள்

இன்சொல் – இனிமையான சொல், இருநீர் வியனுலகம் – கடலால் சூழப்பட்ட பரந்த உலகம், வன்சொல் – கடுமையான சொல், அதிர்வளை – ஒலிக்கின்ற வளையல், அழல் கதிர் – கதிரவனின் வெப்பக் கதிர்கள், தண்ணென் கதிர் – குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி

பாடல் பொருள்

பொன்னாலான ஒலிக்கும் வளையல்களை அணிந்த பெண்ணே, கடலானது கதிரவனின் வெப்பத்தைக் கண்டு பொங்காது. குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி கண்டுதான் பொங்கும். அதுபோலக் கடலால் சூழப்பட்ட இப்பெரிய உலகில் வாழும் மக்கள் இன்சொற்களைக் கேட்டு மகிழ்வார்களே அன்றி, வன்சொற்களைக் கேட்டு மகிழ மாட்டார்கள் என்பதைப் புரிந்து செயல்படுக.

நூல் குறிப்பு

நீதிநூல்களுள் ஒன்று நன்னெறி. இந்நூலைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றினார். நாற்பது நேரிசை வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வோர் உவமைமூலம், ஒவ்வொரு நீதிக்கருத்தை விளக்குவது, இந்நூலின் சிறப்பாகும்.

Tamil 4th-std_Term2.indd 21 8/7/2019 6:03:28 PM

வாங்க பேசலாம்

- பாடலை உரிய ஒலிப்புடன் படித்து மகிழ்க.
- உன்னிடம் பிறர் எப்படிப் பேச வேண்டும் என எண்ணுகிறாய்? ஏன்?

சிந்திக்கலாமா?

இன்சொற்களைப் பேசுவதால் நன்மையே விளையும் என்பதைப் பிறருக்கு எப்படி உணர்த்தலாம்?

TAF1TV

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'இன்சொல்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) இன்+ சொல் ஆ) இனிமை + சொல்

இ) இன்மை + சொல் ஈ) இனிய+ சொல்

02 "அதிர்கின்ற வளை" – இச்சொற்களில் அதிர்கின்ற என்னும் சொல்லின் பொருள் ....

அ) உடைகின்ற ஆ) ஒலிக்கின்ற

இ) ஒளிர்கின்ற ஈ) வளைகின்ற

03 வியனுலகம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) வியன் + உலகம் ஆ) வியல் + உலகம்

இ) விய + உலகம் ஈ) வியன் + னுலகம்

வினாக்களுக்கு விடையளிக்க

01 உலகம் எப்போது மகிழும்? – நன்னெறிப் பாடல்மூலம் உணர்த்துக.

02 கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும்?

பொருத்துக

1. இன்சொல்	–	கதிரவனின் ஒளி
2. வன்சொல்	–	நிலவின் ஒளி
3. அழல்கதிர்	–	கடுஞ்சொல்
4. தண்ணென் கதிர்	–	இனிய சொல்

Tamil 4th-std_Term2.indd 22 8/7/2019 6:03:28 PM

குறிப்புகளைக் கொண்டு கட்டத்தை நிரப்புக

1	நமது தாய்நாட்டின் திருப்பெயர்	●			
2	அரசனின் வேறு பெயர்		●		
3	உடைமையை இப்படியும் சொல்லலாம்.	●			
4	மணத்திற்குப் பெயர் பெற்ற பூ இது		●		

வட்டத்தில் எழுதிய எழுத்துகளைக் கீழே உள்ள கட்டத்தில் எழுதுக

இப்படிப் பேசினால் எல்லாருக்கும் பிடிக்கும்

●	●	●	●

சிறு வட்டத்தில் உள்ள எழுத்தை முதலாகக் கொண்டு சொல் உருவாக்குக



1. குடை
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10

அறிந்து கொள்வோம்



திருக்குறள்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

–இனியவை கூறல், குறள் 100

செயல்திட்டம்

இனியவை கூறல் என்னும் திருக்குறள் அதிகாரத்திலுள்ள குறட்பாக்களை எழுதி வருக.

Tamil 4th-std_Term2.indd 23 8/7/2019 6:03:29 PM

14 பனிமலைப் பயணம்

அனைவரும் ஒரு படகில் புறப்பட்டனர்

திடீரென்று ஆற்றில் நீரின் வேகம் அதிகரித்தது படகு ஒரு பக்கமாய்ச் சாய்கிறது.

அவர்களை ஒரு முதலை பார்த்தது



Tamil 4th-std_Term2.indd 24 8/7/2019 6:03:31 PM



Tamil 4th-std_Term2.indd 25 8/7/2019 6:03:32 PM

வாங்க பேசலாம்

- உமது நண்பரிடம் உமக்குப் பிடித்த, பிடிக்காத பண்புகளைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

சிந்திக்கலாமா?

பக்கத்து ஊருக்குச் செல்ல படகிலும் செல்லலாம்., பேருந்திலும் செல்லலாம்....எதில் பயணம் செய்ய நீ விரும்புவாய், காரணம் என்ன?

Tamil 4th-std_Term2.indd 26 8/7/2019 6:03:34 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 பனிமலைக்காட்டிற்கு <u>விரைவாகச்</u> சென்றுவிட முடியாது. அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் எது?

அ) மெதுவாக ஆ) எளிதாக

இ) கடினமாக ஈ) வேகமாக

I3MQ8M

02 <u>என்ன+ என்று</u> இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) என்னஎன்று ஆ) என்னென்று

இ) என்னவென்று ஈ) என்னவ்வென்று

03 " அக்காட்டில்" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ) அந்த + காட்டில் ஆ) அ + காட்டில்

இ) அக் + காட்டில் ஈ) அந்தக் + காட்டில்

04 " என்னவாயிற்று " இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ) என்ன + ஆயிற்று ஆ) என்னவா + ஆயிற்று

இ) என்ன + வாயிற்று ஈ) என்னவோ + ஆயிற்று

வினாக்களுக்கு விடையளிக்க.

01 படகில் செல்லும்போது, விலங்குகள் ஏன் திடீரென அலறின?

02 நரி, முதலையிடம் என்ன கூறியது?

03 இக்கதையில் உனக்குப் பிடித்த விலங்கு எது? ஏன்?

உரிய பெட்டியுடன் பாராசூட்டை இணைப்போமா?

Tamil 4th-std_Term2.indd 27 8/7/2019 6:03:35 PM

விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை நிரப்பிப் புதிய சொற்றொடர்கள் உருவாக்குக.

01 _______________ நண்பன் = நல்ல நண்பன்

02 _______________ தூரம் = _______________________

03 _______________ மான் = _______________________

04 _______________ பயணம் = _______________________

05 _______________ காடு = _______________________

06 _______________ குதிரை = _______________________

மொழியோடு விளையாடு

கட்டத்திலுள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக. உருவாக்கிய ஒவ்வொரு சொல்லையும் கீழே எழுதி, விண்மீனுக்கு வண்ணம் தீட்டுக.

ரை	தி	கு	க்	ரி	வ
அ	த்	தை	ப	இ	லை
ப	ட	கு	த்	து	த
ய்	நா	ஓ	ம	று	மு
வா	ச	பா	ம்	பு	சி

★ குதிரை ☆ __________ ☆ __________

☆ __________ ☆ __________ ☆ __________

☆ __________ ☆ __________ ☆ __________

☆ __________ ☆ __________ ☆ __________

நான் பெற்ற மொத்த விண்மீன்கள் ______________________

சொல்லக் கேட்டு எழுதுக

1. அடர்ந்த காடு
2. பயணம்
3. பனிமலைக்காடு
4. விலங்குகள்
5. திருவிழா

Tamil 4th-std_Term2.indd 28 8/7/2019 6:03:35 PM

அகரவரிசைப் படுத்துக.

மகிழ்ச்சியாய்த் தாவத் தொடங்கு, மௌவல் என்னும் அழகிய மலரைச் சென்றடைவாய்

மைதானம், முறுக்கு, மோப்பம், மகிழ்ச்சி, மௌவல், மாதம், மொழி, மீன், மேகம், மெத்தை, மிளகு, மூட்டை



கலையும் கைவண்ணமும்

காகிதப் பூ செய்வோமா!



செயல் திட்டம்

"அறிவே துணை" என்னும் நீதியை அறிவுறுத்தக்கூடிய கதைகளுள் இரண்டு எழுதி வருக.

Tamil 4th-std_Term2.indd 29 8/7/2019 6:03:35 PM

15 ஆராய்ந்திட வேண்டும்

'அடடே! வா, மாணிக்கம். என்ன, இன்றைக்குக் காலையிலேயே வந்து விட்டாயே... !!"

"ஆமாம், தாத்தா! நேற்று நீங்கள் சொன்ன கதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால்தான் வேறு கதை கேட்கும் ஆவலில் காலையிலேயே வந்துவிட்டேன்."

" சரி, மாணிக்கம் இன்று அருமையான கதையொன்று சொல்கிறேன் கேள்.

மன்னர் ஒருவர் தம் குதிரையில் ஏறி அமர்ந்தபடி, ஒரு கிராமத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். கிராமங்களின் முன்னேற்றத்தையும், மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டி, மன்னர் தமது குதிரையில் பயணம் மேற்கொண்டிருந்தார்.

மன்னரைப் போலவே அவரது குதிரையும் இரக்கக் குணம் கொண்டதாகக் காணப்பட்டது.

அக்குதிரையானது சுற்றும் முற்றும் பார்த்தபடியே மன்னரைச் சுமந்துகொண்டு சென்றது.

Tamil 4th-std_Term2.indd 30 8/7/2019 6:03:35 PM

அப்போது, நாய் ஒன்று காலில் அடிபட்ட காரணத்தால் நடக்க முடியாமல் நொண்டி, நொண்டி சென்று கொண்டிருப்பதைக் குதிரை பார்த்தது. உடனே அந்த நாய்க்கு உதவி செய்திட வேண்டுமென்று மனத்தில் நினைத்தது.

அதனால், தன் கனைப்பொலியின் மூலம் மன்னரை அழைத்தது குதிரை. "அரசே, அதோ ஒரு நாயானது நடக்க முடியாமல் தத்தித் தத்திச் சென்று கொண்டிருக்கின்றது. அந்த நாயை என் முதுகில் ஏற்றிக்கொண்டு, அது எந்த இடத்திற்குச் செல்லவேண்டுமோ அந்த இடத்தில் விட்டுவிடலாமா?" என்று கேட்டது.

"குதிரையே! என்னைப் போலவே நீயும் இரக்கத்துடன் செயல்படுகிறாய்! அந்த நாய்க்கு உதவுவதில் உனக்கு இருக்கின்ற மகிழ்ச்சியைப் போன்றே எனக்கும் இருக்கின்றது" என்றார் மன்னர். உடனே தம் பின்னால் வந்துகொண்டிருந்த காவலர்களிடம் அந்த நாயைத் தூக்கித் தாம் அமர்ந்திருக்கும் இடத்தின் முன்னே வைத்திடுமாறு கூறினார்.

காவலர்களும் அந்த நாயைக் குதிரையின்மீது ஏற்றி மன்னர் முன்னே அமர வைத்தனர்.

மன்னர் முன்னே அமர்ந்து குதிரைச்சவாரி செய்து கொண்டிருந்த அந்த நாயானது, மிகவும் மகிழ்ச்சியடைந்தது.



Tamil 4th-std_Term2.indd 31 8/7/2019 6:03:36 PM

குதிரையின் மீது மன்னர் வருவதைக் கண்ட கிராமத்து மக்களெல்லாம் அவரைப் பார்த்து வணக்கம் தெரிவித்தார்கள். அதனைக் கவனித்த நாயோ இந்த மக்களெல்லாம் என்னைப் பார்த்துத்தான் வணங்குகின்றார்கள். என் அருகில் இருக்கும் மன்னர், என்னைச் சுமந்துகொண்டிருக்கும் குதிரை இவர்களைவிடவும் நானே சிறந்தவனாகவும், உயர்ந்தவனாகவும் இருக்கின்றேன். இந்த மக்கள் எல்லாம் என்னை வணங்குகின்ற காட்சியைப் பார்க்கின்றபோது எனக்கு அளவுக்கு மீறிய உற்சாகம் வருகின்றதே! என்ற மகிழ்ச்சியில் தன்னையே மறந்தது அந்த நாய். மறு நிமிடம் அது தன் தலையைத் தூக்கியபடி 'லொள்', 'லொள்' என்று குரைத்தது.

நாயின் செயலைக் குதிரை கவனித்தது. "நாயே! அமைதியாக இருந்துகொள்! நீ குரைத்துக் கொண்டே வந்தால், எல்லாரும் உன்மீது வெறுப்படைவார்கள். அதன் பின்னர், நீ என்மீது சவாரி செய்யமுடியாது" என்றது குதிரை.

"குதிரையே! இந்தக் கிராமத்து மக்கள் என்னை வணங்குகின்ற காட்சியைப் பார்த்ததும் உனக்கு என்மீது பொறாமை ஏற்பட்டுவிட்டது. அதனால்தான், நீ என்னை மட்டம் தட்டுகிறாய்" என்றது நாய்.

"நாயே ! குடிமக்கள் எல்லாம் உன்னைப் பார்த்து வணங்கவில்லை. அவர்கள் மன்னரைப் பார்த்து வணங்குகிறார்கள். மன்னர் முன்னே இருக்கின்ற நீ, அதையெல்லாம்பார்த்துவிட்டு உனக்குக்கிடைத்தமரியாதையாக நினைத்துக்கொண்டு உற்சாகமடைந்துவிட்டாய். இனிமேலாவது உண்மை நிலையை உணர்ந்து அமைதியாக இரு" என்றது குதிரை.

"குதிரையே! உனக்கு என்மீது கொண்டுள்ள பொறாமையானது நன்றாக முற்றிவிட்டது. அதனால்தான் எனக்கொரு போலியான விளக்கத்தைக் கொடுக்கின்றாய்! இந்த விளக்கத்தைக் கேட்க நான் தயாராக இல்லை! " என்றபடி மேலும் சத்தமாகக் குரைத்தது அந்த நாய்.

மன்னரின் அருகில் வந்துகொண்டிருந்த காவலர்கள் அந்த நாயைக் கீழே இறக்கிவிட்டு அடித்து விரட்டினார்கள். அங்கிருந்து நொண்டியபடியே ஓடிய நாய், சற்றுத் தொலைவில்போய் நின்றுகொண்டு திரும்பிப் பார்த்தது.

தான் இல்லாதபோதும், குடிமக்கள் எல்லாரும் மன்னரை வணங்க, மன்னரும் அவர்களுக்குப் பதில் வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தார். இந்தக் காட்சியைப் பார்த்த நாய்க்கு அப்போதுதான் உண்மை புரிந்தது. தன்னுடைய தவற்றினை நினைத்து வருந்தியது. நாம் ஆராயாமல் முடிவெடுத்தோம். அதனால்தான் நமக்கு இந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது என எண்ணியது.

"ஆராய்ந்திடாமல் முடிவெடுத்தால் என்ன நடக்கும் என்பதை இக்கதைமூலம் புரிந்துகொண்டாயா, மாணிக்கம்?" என்றார் தாத்தா. "ஓ! நன்றாகப் புரிந்துகொண்டேன்" என்றான் மாணிக்கம்.

என்ன, குழந்தைகளே! இனி, நாம் எந்த ஒரு செயலைச் செய்தாலும் ஆராய்ந்துதான் முடிவெடுக்க வேண்டும். சரிதானே!

வாங்க பேசலாம்

- கதையை உம் சொந்த நடையில் கூறுக.
- ஆராய்ந்து செயல்படுவதால் கிடைக்கும் நன்மைகளைக் கூறுக.

சிந்திக்கலாமா?

நீ செய்யாத செயலுக்கு உனக்கு ஒருவர் நன்றி கூறினால் அல்லது பரிசு அளித்தால் அவ்வேளையில் நீ என்ன செய்வாய்?

LHBSFX

வினாக்களுக்கு விடையளிக்க

01 குதிரை ஏன் நாய்க்கு உதவி செய்ய நினைத்தது?

02 காவலர்கள், குதிரைமீது இருந்த நாயை ஏன் கீழே இறக்கிவிட்டனர்?

சொல்லக் கேட்டு எழுதுக.

குதிரை, இரக்கம், நிலைமை, பேராசை, குடிமக்கள்

நிறுத்தக் குறியிடுக

அரசே அதோ ஒரு நாயானது நடக்க முடியாமல் தத்தித்தத்திச் சென்று கொண்டிருக்கிறது. அந்த நாயை என் முதுகில் ஏற்றிக்கொண்டு அது எந்த இடத்திற்குச் செல்ல வேண்டுமோ அந்த இடத்தில் விட்டுவிடலாமா என்று கேட்டது

ஒரே சொல் இரண்டுமுறை அடுத்தடுத்து வருமாறு சொற்றொடர் அமைத்து எழுதுக

(எ.கா.) நாய் ஒன்று நொண்டி, நொண்டி நடந்தது

தத்தித் தத்தி ______________

எழுதி எழுதி ______________

திரும்பித் திரும்பி ______________

குனிந்து குனிந்து ______________

Tamil 4th-std_Term2.indd 33 8/7/2019 6:03:36 PM

குறிப்பைப் படி! விடையைக் கொடு!

பேச உதவுவது வாய்
படுக்க விரிப்பது பாய்
கனிக்கு முந்தையது காய்
காவல் காப்பது………….?

வரியில் ஒன்று சுங்கம்
கனிமத்தில் ஒன்று தங்கம்
நாடுகளுள் ஒன்று வங்கம்
தமிழுக்கு மூன்று………?

உழவுக்கு உதவுவது ஏர்
ஊர்கூடி இழுப்பது தேர்
மரத்திற்கு தேவை வேர்
நல்லதை உன்னிடம்……?

அகரமுதலி பார்த்துப் பொருள் அறிக

போலி, பொறாமை, சவாரி, வருந்தியது, மரியாதை

சொற்களிலுள்ள பிழைகளை நீக்குக.

மண்னர், குதிறைச் சவாரி, உர்சாகம், சிறந்தவண், மக்கலெள்ளாம், கனைப்பொளி, இறக்கக் குணம், கிராமங்கல்.

கலையும் கைவண்ணமும்

பயன்படுத்திய காகிதத்தில், உறை தயாரிக்கலாமா?

தேவையான பொருள்கள்

பயன்படுத்திய தாள்கள், பசை



விலங்குகளுக்குரிய ஒலிப்புகளை வட்டமிடுக.



ல	க	க	னை	க்	கு	ம்	ன	ர
வ	ழ	மு	ழ	ங்	கு	ம்	அ	ம்
ந	டை	னை	வி	மு	ம்	தி	ப	று
கு	ரை	க்	கு	ம்	சை	றா	மு	ளி
ம	று	கு	ரு	வி	லு	கே	ள்	பி
டு	ன	ம்	மு	று	உ	உ	டை	ழ

அறிந்துகொள்வோம்.

தமிழில் மூவினம்

த– வல்லினம்

மி– மெல்லினம்

ழ்– இடையினம்

தமிழும் மூன்றும்

முத்தமிழ் – இயல், இசை, நாடகம்

முச்சங்கம் – முதல், இடை, கடை

முக்காலம் – இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்

முப்பொருள் – அறம், பொருள், இன்பம்

மூவிடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை

செயல்திட்டம்

பிறர் பாராட்டுவதற்குரிய நல்ல செயல்கள் எவையெவை என உன் வீட்டில் உள்ளவர்களிடம் கேட்டு எழுதி வருக.

Tamil 4th-std_Term2.indd 35 8/7/2019 6:03:37 PM

முக்காலம் அறிவோமா?



நடந்து கொண்டிருக்கும் செயல்	நடந்துமுடிந்த செயல்	நடக்கப்போகும் செயல்
நிகழ்காலம்	இறந்தகாலம்	எதிர்காலம்

கீழ்க்காணும் எடுத்துக்காட்டைப் போல் எழுதுக.

எடுத்துக்காட்டு

நான் உணவு -------------(உண்) – நான் உணவு உண்டேன் (இறந்தகாலம்)

நான் உணவு உண்கிறேன் (நிகழ்காலம்)

நான் உணவு உண்பேன் (எதிர்காலம்)

வ.எண்	தொடர்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
1	இளவரசி பூ -------- (தொடு)			
2	ஆடு புல் ----------- (மேய்)			
3	நாங்கள் படம்------- (வரை)			
4	கதிர் போட்டியில்---- (வெல்)			
5	மயில்கள் நடனம் ---- (ஆடு)			

Tamil 4th-std_Term2.indd 36 8/7/2019 6:03:37 PM

அட்டவணையில் விடுபட்ட இடங்களை நிரப்புக.

வ.எண்	வினைச்சொல்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
1	செய்		செய்கின்றான்	
2		பறந்தது		
3				படிப்பான்
4	கேள்	கேட்டது		
5				சொல்வார்கள்

படங்களுக்குப் பொருத்தமான காலங்களைப் பயன்படுத்தித் தொடர் எழுதுக.

கண்ணன் ஏணியில் ஏறுகிறான்





Tamil 4th-std_Term2.indd 37 8/7/2019 6:03:37 PM

16 திருக்குறள் கதைகள்

பொறுமையும் பொறுப்பும்

தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர், புகழ்பெற்ற அறிவியலறிஞர். இவர், பல முறை தோல்வி கண்டு, பெரும் முயற்சிக்குப் பின்னரே மின் விளக்கைக் கண்டுபிடித்தார்.

BAJGUP

நண்பர்களுக்கும், பிற அறிவியல் அறிஞர்களுக்கும் தம் கண்டுபிடிப்பைச் செய்துகாட்ட எடிசன் விரும்பினார். அதற்காக, நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்து, அனைவரையும் வரவழைத்தார். அவரது ஆய்வகத்தின் மேல்தளத்தில் இதற்கான கூட்டம் நடைபெற்றது.

எடிசன் தம் உதவியாளரை அழைத்து மின் விளக்கை மேல் தளத்திற்குக் கொண்டு வரச்சொன்னார். உதவியாளர், அதனைக் கொண்டு வரும்போது, திடீரெனக் கைதவறி விழுந்தது. ஆயினும், சற்றும் மனம் கலங்காத எடிசன், உடனே மற்றொரு மின் விளக்கை உருவாக்கினார். அதனை மீண்டும் அதே உதவியாளரிடமே கொடுத்து மேலே எடுத்து வரச் செய்தார்.

"மின் விளக்கைக் கீழே போட்டு உடைத்தவரிடம் மீண்டும் அந்த வேலையைக் கொடுக்கிறீர்களே?" என்று சிலர் எடிசனிடம் கேட்டனர். அதற்கு எடிசன், "உடைந்த பொருளை மீண்டும் உருவாக்க என்னால் முடிந்தது. ஆனால், உதவியாளரின் மனத்தைக் காயப்படுத்திவிட்டால் அதை என்னால் சரிசெய்து கொடுத்துவிட முடியுமா? அதுமட்டுமன்று, மீண்டும் அதே பணியை அவரிடமே கொடுக்கும்போது, தமது பொறுப்பை உணர்ந்து கவனமுடன் பணிபுரிவார். அதனால்தான் அப்படிச் செய்தேன்" என்றார்.



எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத்தந்த பொறுமைக் குணத்தை, அப்போதுதான் மற்றவர்கள் முழுமையாக உணர்ந்து கொண்டனர்.

குறள்

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

பொறையுடைமை, குறள்.154

விளக்கம்

நிறை உடையவராக இருக்கும் தன்மை தம்மைவிட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும்.

Tamil 4th-std_Term2.indd 38 8/7/2019 6:03:37 PM

மெய்ப்பொருள் காண்போம்

மாட்டுவண்டி ஒன்றில், தேங்காய்களை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தார் ஒருவர். வழியில், குறுக்குப்பாதை ஒன்று வந்தது. அங்கே சிறுவன் ஒருவன் நின்றிருந்தான்.

"தம்பி, இந்தச் சாலையில் போனால் ஊர் வருமா?" என்று கேட்டார் வண்டிக்காரர். "ஓ, வருமே" என்றான் சிறுவன்.

"போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?"

"மெதுவாகச் சென்றால் பத்து நிமிடத்தில் போய்விடலாம்".

"வேகமாகச் சென்றால்.. . .."

"அரை மணி நேரம் ஆகும்".

சிறுவன் சொன்ன பதிலைக் கேட்டு மாட்டு வண்டிக்காரருக்குக் கோபம். "என்ன கிண்டலா? வேகமாகச் சென்றால் எப்படி நேரம் அதிகமாகும்?" என்று கேட்டார்.

"போய்த்தான் பாருங்களேன்" என்று சிறுவன் சொன்னதும், அவர் வண்டியை வேகமாக விரட்டிச் சென்றார்.

சிறிது தூரம் போனதுமே சாலையில் அங்கங்கே கற்கள் நிறைந்து இருந்தன. அதனால், வண்டி தடுமாறிக் கவிழ்ந்தது. தேங்காய்கள் சிதறின. வண்டியைத் தூக்கி நிறுத்திக் கீழே சிதறிய தேங்காய்களை ஒவ்வொன்றாக எடுத்துப் போடுவதற்கு அரை மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது. வண்டிக்காரருக்குச் சிறுவன் சொன்னதன் பொருள் புரிந்தது.

குறள்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு.

அறிவுடைமை, குறள். 423

விளக்கம்

எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும், கேட்டவாறே எடுத்துக்கொள்ளாமல் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

Tamil 4th-std_Term2.indd 39 8/7/2019 6:03:38 PM

குற்றமும் குறையும்

கதிரவனிடம் வேண்டாத குணமொன்று இருந்தது. அதாவது, எப்போது பார்த்தாலும் யாரைப் பற்றியாவது எதைப்பற்றியாவது குறை சொல்லிக் கொண்டேயிருப்பான். அதனால், அவனைப் பார்த்தாலே போதும். எல்லா நண்பர்களும் ஓடத் தொடங்கிவிடுவர்.

தமிழ் அழகன் ஒருவன்தான் இப்போது அவனுடன் பேசுகிறான். வேறு எவரும் பேசுவதில்லை. அன்று, தமிழ் அழகன் நான்கு நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டான் கதிரவன். ஆர்வத்துடன் அவர்கள் அருகில் வந்தான்.

கதிரவனைப் பார்த்ததும் எல்லாரும் ஒதுங்கிச் செல்ல, தமிழ் அழகன் மட்டுமே தனியாக நின்றான். கதிரவனின் முகம் வாடியது.

"என்ன கதிர்? ஏன், என்னவோ போல் இருக்கிறாய்?" என்று கேட்டான் தமிழ் அழகன்.

"ஆமாம் தமிழ் . என்னைப் பார்த்தாலே எல்லாரும் ஓடிப்போறாங்களே ....." என்றான் கதிரவன்.

"எல்லாம் யாரால? உன்னாலதானே!" என்றான் தமிழ் அழகன் .

"நான் என்ன தப்பு பண்ணினேன்? பிறர்கிட்ட உள்ள குற்றம் குறையைத்தானே பேசினேன்" என்றான் கதிரவன்.

"கதிர், குற்றம்குறை யார்கிட்டேதான் இல்லை. உன்னோட குறை என்னன்னு உனக்குத் தெரியுமா? நீ பிறரைப் புறம் பேசறதுதான் உன்னோட குறை. உன்னோட நாக்கை அடக்கு. எல்லாரும் உன்கிட்ட பேசுவாங்க"என்றான் தமிழ் அழகன் .

கதிரவன் தன்னைத் திருத்திக் கொண்டான். எல்லாரும் அவனுடன் மெள்ள மெள்ளப் பேசத் தொடங்கினர்.

குறள்

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

அடக்கமுடைமை, குறள்.127

விளக்கம்

காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும். காக்கத் தவறினால், சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

Tamil 4th-std_Term2.indd 40 8/7/2019 6:03:38 PM

அழகு

கந்தனின் உருவமே, "கோபம் கோபம் கோபம்" என்றாகிப் போனது. கந்தனை யாராவது விசாரித்தால், "எப்பவும் கோபத்தோடே 'உர்' ருன்னு அலைவானே அவனைத்தானே கேட்கிறீங்க" என்று மாணவர்கள் எளிதாகச் சொல்லிவிடுவர். அதனால், அவனிடம் நெருங்கிப் பழகவும் மாணவர்கள் பயந்தனர்.

கந்தன் ஒருநாள் அவன் நண்பனான நன்மாறனிடம் பேசிக் கொண்டிருந்தான். "நீயெல்லாம் சும்மா ஜம்முனு அழகா இருக்கியே! நான் மட்டும் ஏன் முகமெல்லாம் கறுத்துப்போய் இப்படி இருக்கேன்" என்றான்.

நன்மாறன் சிரித்தான். "நீ தினமும் உன்னோட முகத்தைக் கண்ணாடியில் பார்க்கிறியா?" என்று கேட்டான்.

"தினமும் பார்க்கிறேன்"

"இன்னும் உனக்குக் காரணம் புரியலையா?"

"புரியலை"

"கந்தா, நெருப்பில் வாடிய பூக்கள் தம்மோட அழகை எல்லாம் இழக்கும், அதுபோலத்தான் உன்கிட்ட மாறாம இருக்கிற கோபத்தால உன் முகம் அழகையெல்லாம் இழந்திருக்கு. பொடி வைத்தாற்போல் சொன்னான் நன்மாறன்.

நன்மாறன் சொன்னதில் உண்மை இருக்கவே, தன் கோபத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தத் தொடங்கினான் கந்தன். ஒரு மாத காலம் கடுமையான விரதம்போல் காத்தான். அன்று கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான். அஃது எத்துணை அழகாக இருந்தது தெரியுமா?

குறள்

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்

தன்னையே கொல்லுஞ் சினம்.

வெகுளாமை, குறள். 305

விளக்கம்

ஒருவன் தன்னைத் தானே காக்க விரும்பினால் சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு காத்துக்கொள்ளாவிட்டால், சினம் தன்னையே அழித்துவிடும்.

Tamil 4th-std_Term2.indd 41 8/7/2019 6:03:39 PM

வாங்க பேசலாம்

- நாவைக் காக்காவிட்டால் ஏற்படும் துன்பம் குறித்துப் பேசுக.
- கதையில் ஒன்றைத் தெரிவு செய்து நண்பர்களுடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

சிந்திக்கலாமா?

அனுவும், பானுவும் சாலையைக் கடக்க, நின்று கொண்டு இருந்தனர். அப்போது மஞ்சள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அனு சாலையைக் கடக்கத் தொடங்கினாள். பானு, பச்சை விளக்கு ஒளிர்ந்தால் மட்டுமே கடக்க வேண்டும். பொறுமையாக இரு என்றாள். எது சரியான செயல்?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

BPTFUD

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'பொறை' என்பதன் பொருள் ....

அ) முழுமை ஆ) வளமை

இ) பொறுமை ஈ) பெருமை

02 நிறையுடைமை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) நிறை + யுடைமை ஆ) நிறை + உடைமை

இ) நிறைய + உடைமை ஈ) நிறையும் + உடைமை

03 'மெய் + பொருள்' – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....

அ) மெய்பொருள் ஆ) மெய்யானபொருள்

இ) மெய்ப்பொருள் ஈ) மெய்யாய்ப்பொருள்

04 வெகுளாமை – இச்சொல்லின் பொருள் ....

அ) அன்பு இல்லாமை ஆ) பொறாமை கொள்ளாமை

இ) சினம் கொள்ளாமை ஈ) பொறுமை இல்லாமை

05 போற்றி ஒழுகப்படும் பண்பு ....

அ) சினம் ஆ) பொறையுடைமை

இ) அடக்கமில்லாமை ஈ) அறிவில்லாமை

Tamil 4th-std_Term2.indd 42 8/7/2019 6:03:39 PM

வினாவிற்கு விடையளிக்க

01 பொறையுடைமை எப்போது போற்றப்படும்?

02 மெய்ப்பொருள் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?

03 நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?

04 சினம் எப்போது ஒருவரை அழிக்கும்?

05 நீங்கள் படித்த திருக்குறள் கதைகளுள் உங்களுக்குப் பிடித்த கதை எது? ஏன்?

பொருத்துக

1. பொறை	–	சொல்குற்றம்
2. மெய்ப்பொருள்	–	துன்பப்படுவர்
3. காவாக்கால்	–	பொறுமை
4. சோகாப்பர்	–	காக்காவிட்டால்
5. சொல்லிழுக்கு	–	உண்மைப்பொருள்

பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக.

01 ஆய்வகம் _______________ இருந்தது. (மேல் தளத்தில் / மேல் தலத்தில்)

02 வழியில் _______________ ஒன்று வந்தது. (குருக்குப்பாதை / குறுக்குப்பாதை)

03 உனக்குக் காரணம் _______________ (புறியவில்லையா / புரியவில்லையா)

04 எடிசன் மின் _______________ உருவாக்கினார். (விளக்கு / விலக்கு)

05 குற்றம் _____ யாரிடம்தான் இல்லை. (குரை / குறை)

Tamil 4th-std_Term2.indd 43 8/7/2019 6:03:39 PM

சொல்லக் கேட்டு எழுதுக.

01 மெய்ப்பொருள்

02 பொறையுடைமை

03 சோகாப்பர்

04 நிறையுடைமை

மொழியோடு விளையாடு

பொருத்தமான வினாச் சொல்லை எடுத்து வினாத் தொடரை முழுமையாக்குக.

01 உன்னுடைய ஊரின் பெயர் _______________?

02 உனக்குப் பிடித்த வண்ணம் _______________?

03 நீ பள்ளிக்கு _______________ வருகிறாய்?

04 உன்னுடைய நண்பன் _______________?

05 கோடை விடுமுறைக்கு _______________ சென்றாய்?

06 மெய்ப்பொருள் என்பதன் பொருள் _______________?

07 குறில் எழுத்துகள் _______________?

08 சாருமதி _______________ வீட்டிற்குச் சென்றாள்?

யாது
யாவை
எங்கு
எது
எப்படி
என்ன
யார்
யாருடைய

நமக்குத் தேவையான பண்புகளைத் தேர்ந்தெடுப்போமா?

அ	ன்	பு	ம்	வ	க
ட	பொ	வு	ன	சை	ல்
க்	ஈ	றி	சி	பொ	லா
க	கை	அ	வா	ய்	மை
ம்	க	க்	ழு	ஒ	ரு
செ	ய்	ந்	ந	ன்	றி

1. அன்பு 2. ______ 3. _____ 4. ______ 5. ______ 6. ______ 7. _____

கலையும் கைவண்ணமும்

சூரியகாந்திக்கு வண்ணமிடுவோமா?

இதழ்களுக்கு மஞ்சள் தூள், விதைகளுக்கு உலர்ந்த தேயிலைத்தூள்… பயன்படுத்தி அழகாக்குக.



அறிந்து கொள்வோம்



1. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
2. திருக்குறள் அகர எழுத்தில் தொடங்கி னகர எழுத்தில் முடிகிறது.
3. திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் அனிச்சம், குவளை.

செயல்திட்டம்

நீங்கள் நன்கு அறிந்த திருக்குறளுக்கு உம் சொந்த நடையில் கதை எழுதி வருக.

Tamil 4th-std_Term2.indd 45 8/7/2019 6:03:39 PM

17 பசுவுக்குக் கிடைத்த நீதி

(நாடகம்)

QB9TMW

முன்கதைச் சுருக்கம்

சோழ மன்னர்களுள் ஒருவர் மனுநீதி. முறைமை தவறாது ஆட்சி புரிவதையே தம் நோக்கமாகக் கொண்டவர். ஆயினும், அவரது ஆட்சிக்காலத்தில் வாயில்லாப் பசுவுக்கு ஏற்பட்டது ஒரு பேரிழப்பு. அதற்குக் காரணமானவன் வேறுயாருமல்லன், அரசரின் மகனே. இப்போது, அரசர் என்ன செய்வார்? தம் மகன் என்று அவனைக் காப்பாற்றுவாரா? அல்லது தன் கன்றை இழந்து வாடும் அந்தப் பசுவுக்கு உரிய நீதியை வழங்குவாரா?

வாருங்கள் தெரிந்துகொள்ள அரங்கத்துக்குள் நுழைவோம்.

காட்சி – 1



இடம் : அரசவை மண்டபம்

காலம் : நண்பகல்

உறுப்பினர்கள் : அரசர் மனுநீதிச் சோழர், அமைச்சர் பெருமக்கள்

(அவையில் மன்னரும் அமைச்சர் பெருமக்களும் வீற்றிருக்கின்றனர். அப்போது அங்கு வந்த தச்சர் ஒருவர், மன்னரை வணங்கிப் பணிகிறார். இனி....)

அரசர் : வாருங்கள், தச்சரே. நேற்று உம்மிடம் ஒரு வேலையைக் கொடுத்தேனே, முடித்துவிட்டீரா?

தச்சர் : ஆம். முடித்துவிட்டேன் மன்னா. நீங்கள் நேரிலேயே வந்து பார்வையிடலாம் மன்னா.

அரசர் : அப்படியா? மிக்க மகிழ்ச்சி. அமைச்சர் பெருமக்களே, 'சோழ நாடு சோறுடைத்து' என்பது உலகோர் அறிந்த செய்தி. அதுமட்டுமா? நம் சோழர் குலத்துக்குப் பெருமை சேர்க்கும் மற்றொரு செய்தி, நீதி தவறாத ஆட்சிமுறை அல்லவா? அதனால்தான், என் ஆட்சியில் குடிமக்கள் யாரும் துன்பப்படக் கூடாது என்று நினைத்தேன். அதற்காக நான் ஏற்படுத்திய

Tamil 4th-std_Term2.indd 46 8/7/2019 6:03:40 PM

ஓர் அமைப்பே ஆராய்ச்சிமணி. அதைத்தான் இந்தத் தச்சர் சிறப்பாகச் செய்து முடித்துள்ளார்.

அமைச்சர் : ஆராய்ச்சி மணியா? அது எதற்கு மன்னா? அதைக்கொண்டு நீங்கள் எப்படி நீதி வழங்குவீர்கள்?

அரசர் : சொல்கிறேன், அமைச்சரே. நம் அரண்மனை வாயிலிலே கோவில் மணிபோல் பெரியதொரு மணியைக் கட்டச் செய்துள்ளேன். குடிமக்கள், தங்களுக்கு ஏற்படும் குறைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள இந்த ஆராய்ச்சிமணியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அமைச்சர் : அரசே, இதிலென்ன புதுமை? நீங்கள்தாம் எந்தக் குறையும் மக்களுக்கு வைப்பதில்லையே.

அரசர் : நீங்கள் சொல்வது உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால், தங்கள் குறைகளை வெளிப்படையாகச் சொல்வதற்குச் சிலர் தயங்கலாம் அல்லவா? மேலும், இந்த ஆராய்ச்சிமணியின் நோக்கமே, உடனுக்குடன் நீதி வழங்குவதில்தான் உள்ளது. அதுமட்டுமா? குடிமக்கள் எப்போது ஆராய்ச்சிமணியை ஒலித்தாலும், அவர்கள் முன் நானே ஓடோடிச் சென்று நிற்பேன். அவர்களின் மனக்குறையையும் உடனடியாகத் தீர்த்துவைப்பேன்.



Tamil 4th-std_Term2.indd 47 8/7/2019 6:03:40 PM

அமைச்சர்கள் : ஆஹா, நீங்கள்தாம் சிறந்த மன்னர். இவ்வுலகம் உள்ளவரை உங்கள் புகழ் ஓங்கும்.

(அரசவை கலைகிறது. சில மாதங்களாக ஆராய்ச்சிமணியின் ஓசையை அரசர் கேட்கவேயில்லை. இந்நிலையில் ஒருநாள் வழக்கம்போல் அமைச்சர்கள் சூழ மன்னர் அமர்ந்திருக்கிறார். அப்போது, ஆராய்ச்சிமணி ஒலிக்கத் தொடங்குகிறது. இனி....)

காட்சி – 2

இடம் : அரசவை

காலம் : மாலை

உறுப்பினர்கள் : அரசர், அமைச்சர் பெருமக்கள், அரண்மனைக் காவலாளி

காவலாளி : மன்னா.....மன்னா.....

(என்றழைத்தவாறே பதற்றத்துடன் ஓடி வருகிறான், அரண்மனைக் காவலாளி.)

அரசர் : என்ன ஆயிற்று? ஏன் இப்படி மூச்சிரைக்க ஓடிவருகிறாய்? பதறாமல் சொல்.

காவலாளி : மன்னா, இதுவரை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. அதனால்தான் எப்படிச் சொல்வது என்று தயங்குகிறேன்.

அரசர் : என்ன ஆனாலும் பரவாயில்லை. சொல்ல வந்த செய்தியைத் தயங்காமல் உடனே சொல்.

காவலாளி : மன்னா, அதுவந்து....அதுவந்து.... நம் அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சிமணி....

அரசர் : என்ன? ஆராய்ச்சிமணியை யாராவது அடிக்கிறார்களா? இவ்வளவு மாதங்களாக யாருக்கும் எந்தக் குறையும் இல்லையென்று நினைத்தேனே. பரவாயில்லை. இதோ நானே வருகிறேன்.

(அரசர் அரண்மனை வாயிலுக்கு விரைய, அமைச்சர்களும் பின்தொடர்ந்து செல்கின்றனர்.)

அரசர் : ஐயகோ, என்ன ஆயிற்று? பசுவொன்று ஆராய்ச்சிமணியை அடித்துக் கொண்டிருக்கிறதே? என் ஆட்சியில் வாயில்லாத பசுவுக்குக் குறை நேர்ந்ததா? இதை நான் எங்ஙனம் பொறுத்துக்கொள்வேன்? அதன் கண்களில் வழியும் கண்ணீரைப் பாருங்கள். தாங்கமுடியாத துயரத்தில் அது துன்பப்படுவதுபோல் இருக்கிறதே? ஐந்தறிவு விலங்குகளின் துயர் நீக்க மறுத்தான் என்று இந்த வியனுலகம் என்னைப்பழிக்குமோ? இனி என் வாழ்நாளெல்லாம் பழிச்சொல்லைச் சுமந்து திரிவேனோ? எனக்கொன்றும் விளங்கவில்லையே, கதறும் அந்தப் பசுவின் கண்ணீரைத் துடைக்க இதோ புறப்பட்டான் இந்த

மன்னன் என்று பிறர் அறியட்டும். யாரங்கே? உடனே சென்று அந்தப் பசுவுக்கு ஏற்பட்ட இன்னலை அறிந்து வாருங்கள்.

காவலாளிகள் : உத்தரவு மன்னா. இதோ சென்று விரைவில் செய்தியுடன் மீள்கிறோம்.

(அரசனின் மகன், தேரைத் தெருவில் ஓட்டிச் செல்லும்போது, அங்குத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த பசுவின் கன்று, எதிர்பாராத வகையில் தேர்க்காலில் மாட்டி இறக்கிறது. தன் கன்றைக் காணாது தேடியலைந்த பசு, அதன் இறந்த உடலைக் கண்டு கண்ணீர் விடுகிறது. அதன் ஆற்றொணாத் துயரே ஆராய்ச்சிமணி வடிவில் ஒலிக்கத் தொடங்கியது. இனி…)

காட்சி – 3

இடம் : **அரசவை**

காலம் : காலை

உறுப்பினர்கள் : அரசர், அமைச்சர் பெருமக்கள்

அமைச்சர் : மன்னா, தங்கள் முடிவை அருள்கூர்ந்து மாற்றிக்கொள்ளுங்கள்.

அரசர் : என்ன சொல்கிறீர் அமைச்சரே? மண்ணுயிர் காக்கும் மன்னன், நீதி வழங்கும் நெறிமுறையாளன் என்று மக்கள் என்னைப் போற்றுகிறார்களே, அதற்கு இழுக்கு நேரிட ஒருபோதும் நான் அனுமதிக்க மாட்டேன். பசுவின் கதறலுக்குச் செவிசாய்க்காக் கொடியோன் என்னும் அவச்சொல்லுக்கு நான் ஆளாக விரும்பவில்லை. கண்ணுக்குக் கண். பல்லுக்குப் பல் என்பதுதான் நான் எடுத்த முடிவு. இதில் எந்த மாற்றமும் இல்லை.

அமைச்சர் : மன்னா, சற்றுப் பொறுங்கள். உங்களுக்கு இருப்பதோ ஒரே ஒரு மகன். பசுவின் கன்றை அவன் வேண்டுமென்றே கொல்லவில்லையே, அவன் அறியாமல் செய்த தவறுதானே அது? அதற்காக நீங்கள் இப்படி ஒரு முடிவை எடுக்க வேண்டுமா?

அரசர் : ஆம். அதுதான் சரி. கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற அந்த பசுவின் முகம் உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா? அதன் கண்ணில் வழியும் கண்ணீர், "நீயும் ஒரு மன்னனா? உனக்கு உன் மகன் எப்படியோ அப்படியே எனக்கும் என் கன்று அல்லவா? அந்தச் சின்னஞ்சிறு கன்று என்ன பாவம் செய்தது? அதன் உயிரைப் போக்க உங்களுக்கு எப்படி மனம் வந்தது? கன்றை இழந்து தவிக்கும் எனக்கு யார் ஆறுதல் தருவார்? இனி என் வாழ்நாளெல்லாம் வீண்தானோ" என்று என்னைக் கேட்பதுபோல் இருக்கிறதே, ஆகவே, நான் எடுத்த முடிவிலிருந்து சற்றும் பின்வாங்கமாட்டேன்.

Tamil 4th-std_Term2.indd 49 8/7/2019 6:03:40 PM

அமைச்சர்	:	அரசே, மீண்டும் தங்களைப் பணிந்து வலியுறுத்துகிறேன். உங்கள் மகனைக் கொல்லும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்.
அரசர்	:	போதும், அமைச்சரே. நிறுத்துங்கள். இனி, யார் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். பசுவின் கன்றைத் துடிக்க, துடிக்கத் தேர்க்காலிலிட்டுக் கொன்ற என் மகனை அதே தேர்க்காலிலிட்டுக் கொல்லத்தான் போகிறேன். அந்தப் பசு அடைந்த துயரத்தை நானும் அடையவேண்டும். இதுதான் அந்தப்பசுவுக்கு நான் அளிக்கும் தீர்ப்பு. இந்தச் சோழப் பரம்பரை என்னால் தலைகுனியக் கூடாது. பல காலங்கள் தோன்றி மறைந்தாலும், நீதி தவறா மனுநீதிச் சோழன் என்று என்னைப் பலரும் நினைவுகூர்தல் வேண்டும். யாரங்கே? தேரைப் பூட்டி, வாயிலில் கொண்டு வந்து நிறுத்து. இழுத்து வா, என் மகனை. இப்போதே அவனைத் தேர்க்காலிலிட்டு நீதியை நிலைநாட்டுகிறேன்.

(தவறிழைத்தவன் தன் மகனேயானாலும், குற்றம் குற்றமே என்று எண்ணியதோடு அல்லாமல், அந்தத் தவற்றுக்குச் சரியான தண்டனையும் வழங்கிப் பசுவின் துயர் துடைத்து, வரலாற்றில் அழியா இடம்பெற்றான் மனுநீதிச் சோழன்.)

(திரை விழுகிறது.)

வாங்க பேசலாம்

- நீங்கள் மனுநீதிச் சோழனாக இருந்தால், பசுவின் துயரத்தை எப்படிப் போக்குவீர்கள்?

சிந்திக்கலாமா!

வீட்டிற்குப் போகும் வழியில் ஓணான் ஒன்றைச் சிறுவர்கள் சிலர் துன்புறுத்துகின்றனர். அவர்கள் செய்தது சரியா அந்தச் செயலை நீங்கள் எப்படித் தடுப்பீர்கள்?

Tamil 4th-std_Term2.indd 50 8/7/2019 6:03:40 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 இன்னல் – இச்சொல்லிற்குரிய பொருள்

அ) மகிழ்ச்சி ஆ) நேர்மை

இ) துன்பம் ஈ) இரக்கம்

02 அரசவை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------------------

அ) அரச + அவை ஆ) அர+அவை

இ) அரசு+அவை ஈ) அரச+வை

03 மண்ணுயிர் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------------------

அ) மண்+ணுயிர் ஆ) மண்+உயிர்

இ) மண்ண+உயிர் ஈ) மண்ணு+உயிர்

வினாவிற்கு விடையளிக்க

01 மனுநீதிச் சோழன் ஆராய்ச்சி மணியை அமைத்ததற்கான காரணம் என்ன?

02 பசு, ஆராய்ச்சி மணியை ஏன் அடித்தது?

03 பசுவின் துயரை மன்னன் எவ்வாறு போக்கினான்?

அகரமுதலி பார்த்துப் பொருள் அறிக

ஆற்றொணா, வியனுலகம், செவி சாய்த்தல், கொடியோன், பரம்பரை

சொல்லக் கேட்டு எழுதுக

1. அரங்கம்
2. ஆராய்ச்சி மணி
3. மனக்குறை
4. விலங்குகள்
5. வாழ்நாள்

Tamil 4th-std_Term2.indd 51 8/7/2019 6:03:40 PM

சொல் உருவாக்குக

ச	ழ	பு	உ	து	ர
தே	நே	ப்	ண்	லி	ர்
ரு	சோ	வெ	மை	னி	அ
ச்	வ	ச	வை	இ	தீ
ம	க	ன்	மா	லை	ணை

இனிமை

கலையும் கைவண்ணமும்

வண்ணம் தீட்டி மகிழ்வோம்



அறிந்து கொள்வோம்!

மாநகரம், மாமலை, மாமதுரை, மாமுனி, மாதவம் என்று ஒன்றை சிறப்பித்து கூறுவதற்கு மா என்ற சொல் வழக்கத்தில் உள்ளது.

செயல்திட்டம்

நீ வாழும் சூழலில் காணும் பறவைகள் விலங்குகள் பற்றிய செய்திகளைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.

Tamil 4th-std_Term2.indd 52 8/7/2019 6:03:41 PM

18 வேலைக்கேற்ற கூலி

அழகாபுரி மன்னர், சிறந்த முறையில் ஆட்சி செய்துவந்தார். அவரது நாட்டில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். மன்னரின் புகழ், அண்டை நாடுகளுக்கும் பரவியது. அண்டை நாடுகளுள் ஒன்றான இரத்தினபுரி மன்னரும் இதனைக் கேள்விப்பட்டார். தம் நாட்டு அமைச்சர்களிடம் இதைப்பற்றி ஆலோசனை நடத்தினார்.

"நானும் சிறந்த முறையில்தானே ஆட்சி நடத்துகிறேன். ஆனால், என்னை மட்டும் ஏன் யாரும் புகழவில்லை? என்று அமைச்சர்களிடம் வினவினார். அமைச்சர்கள் விடை கூறத் தெரியாமல் விழித்தனர். அவர்களுள் ஒருவர் மட்டும் எழுந்தார். "மன்னா, உங்கள் ஆட்சியில் நம் நாட்டு மக்களுக்கும் எந்தக் குறையும் இல்லை. ஆனால்...." என்று மெல்லிய குரலில் கூறி, நிறுத்தினார் அந்த அமைச்சர்.

"என்ன ஆனால். . . . சொல்லுங்கள் அமைச்சரே, நான் மக்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கவில்லையா? நான் வேறென்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டான் மன்னன்.

"நான் சொல்வதைத் தவறாக நினைக்காதீர்கள். அழகாபுரி நாட்டுக்குச் சென்று, ஒருநாள் முழுவதும் அந்த நாட்டு மன்னருடன் நீங்கள் உடனிருக்கவேண்டும். அவர், தம் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமக்களிடமும் எப்படி நடந்து கொள்கின்றார் என்று அறிந்துகொண்டால், நாமும் அவற்றுள் சிலவற்றையாவது பின்பற்றலாம் மன்னா" என்று ஒரே மூச்சில் கூறி முடித்தார் அந்த அமைச்சர்.

மற்ற அமைச்சர்களும், ஆமாம் மன்னா, இவர் சொல்வதும் நல்ல யோசனைதான். அதுமட்டுமின்றி, அழகாபுரி மன்னர், உங்களிடம் மிகுந்த நட்பு பாராட்டுபவர். ஆகையால், நட்பின் நிமித்தமாக நீங்கள் ஒருநாள் அங்குச் செல்லவேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து" என்று கூறினர்.

"அப்படியா? சரி, சரி. நான் நாளைக்கே புறப்படுகிறேன். எனக்கும் அழகாபுரி மன்னரின் ஆட்சிமுறையை நேரடியாகக் காண்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமல்லவா?" என்று கூறிய இரத்தினபுரி மன்னர், தம் பயணத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய கட்டளையிட்டார்.

நட்பின் நிமித்தமாகத் தம் நாட்டிற்கு வருகை புரிந்த இரத்தினபுரி மன்னரை ஆரத்தழுவி வரவேற்றார் அழகாபுரி மன்னர். இருவரும் தத்தமது நாட்டைப் பற்றிச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். பின்னர், "நீங்கள் நன்றாக ஓய்வெடுங்கள். நான் அரசவைக்குச் சென்று வருகிறேன்" என்று கூறியவாறே எழுந்தார் அழகாபுரி மன்னர். "இருங்கள், மன்னா. நானும் உங்களுடனே அரசவைக்கு வர விரும்புகிறேன்" என்று துள்ளிக் குதித்து எழுந்தார் இரத்தினபுரி மன்னர். "அப்படியா, மிக்க மகிழ்ச்சி. வாருங்கள், இருவரும் சேர்ந்தே போகலாம்" என்று கூறிய அழகாபுரி மன்னர், அவரையும் உடன் அழைத்துக்கொண்டு அரசவைக்குச் சென்றார்.

அரசவையில் இரத்தினபுரி மன்னரை அனைவருக்கும் அறிமுகம் செய்து, அவரைத் தமக்குச் சமமான இருக்கையில் அமர்த்தினார் அழகாபுரி மன்னர். அப்போது, ஒருவன், தன் கைகளைக் கட்டிக்கொண்டு அவர்முன்பு பணிவாக வந்துநின்றான். அவனைப் பார்த்ததும் அழகாபுரி மன்னர், "யாரப்பா நீ? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த ஆள், "மன்னா, நான் ஒரு விறகுவெட்டி. என் மனத்தில் சிறியதாக ஒரு குறை. உங்களிடம் கூறினால், எப்படி எடுத்துக் கொள்வீர்களோ என்று பயமாக இருந்தது. இருந்தாலும் உங்களிடம் கேட்டுவிடலாம் என்றுதான் இங்கு வந்திருக்கிறேன்" என்றான் அந்த விறகுவெட்டி.

"அடடா, நாம் இதை . .. . இதைத்தானே எதிர்பார்த்தோம். இந்த அழகாபுரி மன்னர் இந்த விறகுவெட்டியின் குறையை எப்படித் தீர்த்து வைக்கிறார் என்று பார்ப்போம்" என்று ஆவலுடன் உற்றுநோக்கத் தொடங்கினார் இரத்தினபுரி மன்னர்.

Tamil 4th-std_Term2.indd 54 8/7/2019 6:03:42 PM

"ஐயா, விறகு வெட்டுபவரே, உங்கள் மனக்குறையைச் சொல்லுங்கள். என்னால் முடிந்தஅளவு தீர்த்து வைக்கிறேன்" என்ற அழகாபுரி மன்னர்.

"மன்னா, எங்களைப் போன்றோர்க்கு நாள்தோறும் இரண்டு ரூபாய் கூலி கொடுக்கிறீர்கள். ஆனால், உங்களிடம் பணிபுரியும் அமைச்சர்களுக்கு மட்டும் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்களே, இது எந்த வகையில் நியாயமாகும்? இதுதான் உங்களின் சிறந்த ஆட்சிமுறையா? எங்களைச் சமமாக நடத்தாதது மிகப்பெரிய குறையாக உங்களுக்குத் தோன்றவில்லையா? என்று அடுக்கடுக்காகக் கேள்வி கேட்டான் அந்த விறகுவெட்டி.

அழகாபுரி மன்னர் புன்முறுவலுடன், "என் ஆட்சியில் யாருக்கும் எந்தக் குறையும் இருக்கக்கூடாது என்பதில் நான் மிகவும் கவனமாகத்தான் இருக்கிறேன். ஆனால், உங்கள் மனக்குறையின்படி உங்களையும் அமைச்சர்களையும் நான் சமமாக நடத்தவில்லை என்று எண்ணுகிறீர்கள். கொஞ்சம் பொறுங்கள். உங்கள் ஐயத்தை இப்போதே தீர்த்து வைக்கிறேன்" என்று கூறிய மன்னர், அமைச்சர்களுள் ஒருவரை அழைத்தார். பின்னர், அவர்களிருவரையும் பார்த்து, "அரண்மனைக்கு வெளியே ஏதாவது வண்டி செல்கிறதா? என்று பார்த்துவிட்டு வாருங்கள்" என்று கூறினார்.

இரத்தினபுரி மன்னர் அரசவையில் நடப்பதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். வெளியில் சென்ற விறகுவெட்டி, உடனே திரும்பி வந்து, "ஆம். மன்னா, அரண்மனைக்கு வெளியே ஒரு வண்டி செல்கிறது" என்றான்.

Tamil 4th-std_Term2.indd 55 8/7/2019 6:03:43 PM

"அந்த வண்டியில் என்ன இருக்கிறது?" என்று கேட்டார், மன்னர். "இருங்கள், மன்னா. இதோ பார்த்துவிட்டு வருகிறேன்" என்று வெளியில் ஓடினான் அந்த விறகுவெட்டி. "மன்னா, அந்த வண்டியில் நெல்மூட்டைகள் இருக்கின்றன" என்றான் அவன்.

"அப்படியா? அந்த வண்டி எந்த ஊரிலிருந்து வருகிறது?" என்று கேட்ட மன்னரிடம்,"அடடா, அதைக் கேட்காமல் வந்துவிட்டேனே, சற்றுப் பொறுங்கள். இதோ வருகிறேன்" என்று கூறியவாறே ஓடத் தொடங்கினான் அந்த விறகுவெட்டி. வெளியில் சென்றிருந்த அமைச்சர் அப்போது அரசவையினுள் நுழைந்தார். அவரைப் பார்த்த மன்னர்,"ஐயா, விறகுவெட்டி. சற்று நில்லுங்கள். இதோ அமைச்சர் வந்துவிட்டார். உங்களிடம் கேட்ட அதே கேள்வியை அவரிடமும் கேட்கிறேன். என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்" என்று கூறிய மன்னர், "அமைச்சரே, நீங்கள் என்ன பார்த்தீர்கள்? சொல்லுங்கள்" என்றார்.

அமைச்சரும் மன்னரைப் பார்த்து, "மன்னா, அரண்மனைக்கு வெளியே முப்பது நெல்மூட்டைகள் ஏற்றிய வண்டியொன்று, வளவனூரிலிருந்து அண்டை நாட்டுக்குச் சென்று கொண்டிருக்கிறது. நம் நாட்டில் தயாரான தரமான நெல்வகைகள் அந்த மூட்டைகளில் உள்ளன. வண்டியில் வண்டியோட்டியும் அவரின் பத்து வயது மகனும் உள்ளனர். மழை வருவதற்குள் நெல்மூட்டைகளைப் பாதுகாப்பாக இறக்கிவிட்டு, இன்று இரவுக்குள் மீண்டும் வளவனூர் திரும்பிவிட வேண்டுமென விரைந்து செல்கின்றனர்" என்று கூறி முடித்தார் அமைச்சர்.

அமைச்சர் கூறியதைக் கேட்டு, வாய் பிளந்து நின்றான் அந்த விறகுவெட்டி. அழகாபுரி மன்னர், விறகுவெட்டியைப் பார்த்து, "ஐயா, விறகுவெட்டி, உங்கள் மனத்திலிருந்த சந்தேகம் இப்போது நீங்கியிருக்கும் என்று எண்ணுகிறேன். அமைச்சருக்கு நான் கொடுக்கும் கூலி சரியானதுதானே? இப்போது சொல்லுங்கள்" என்று கூறினார்.

"மன்னா என் மனக்குறை நீங்கிவிட்டது. உங்களைப்பற்றித் தவறாக எண்ணிவிட்டேன். அமைச்சரின் அறிவுக்கூர்மையையும் அவருடைய திறமையையும் கண்டுவியக்கிறேன்.அவருடன் ஒப்பிடும்போது,என் அறியாமையையும் நான் உணர்ந்து கொண்டேன். நான், நான்தான். அமைச்சர், அமைச்சர்தாம். அவரவர் திறமைக்கேற்ற, வேலைக்கேற்ற கூலி கொடுப்பதுதான் நியாயம் என்பதைப் புரிந்துகொண்டேன்" என்றான் அந்த விறகுவெட்டி.

இவ்வளவு நேரமாக அரசவையில் நடந்த நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருந்த இரத்தினபுரி மன்னர் தம் மனத்துக்குள், "அடடா நாம்கூட இந்த மன்னருக்குக் கிடைத்த பேரும்புகழும் எண்ணிப் பொறாமை கொண்டோமே, இப்போது உண்மையை உணர்ந்துகொள்ள நமக்கும் நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது" என்று அழகாபுரி மன்னர் தம் குடிமக்களிடம் நடந்துகொண்ட அணுகுமுறையை எண்ணி வியப்பெய்தினார். தாமும் தம் குடிமக்களை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதையும் அறிந்துகொண்டார்.

Tamil 4th-std_Term2.indd 56 8/7/2019 6:03:43 PM

வாங்க பேசலாம்

- கதையை உம் சொந்த நடையில் கூறுக



அமைச்சர் வண்டிக்காரரிடம் எல்லாத் தகவல்களையும் பெறுவதற்கு என்னென்ன கேள்விகளைக் கேட்டிருப்பார்? எழுதுங்கள்

____

____

____

வினாக்களுக்கு விடையளிக்க

4WQ7GF

01 அழகாபுரி மன்னர் தம் குடிமக்களை எவ்வாறு நடத்தினார்?

02 விறகுவெட்டி, மன்னரிடம் தம் மனக்குறையாக என்ன கூறினார்?

03 மன்னர் அமைச்சரிடமும் விறகுவெட்டியிடமும் என்ன வேலை அளித்தார்?

படத்தைப்பார்ப்போம் வினாக்கள் உருவாக்குவோம்

எ.கா: படத்தில் எத்தனை விலங்குகள் உள்ளன?

01 ____________________ 02 ____________________

03 ____________________ 04 ____________________

05 ____________________ 06 ____________________

Tamil 4th-std_Term2.indd 57 8/7/2019 6:03:43 PM

மொழியோடு விளையாடு

சொல் உருவாக்கப்புதிர்

வடிவங்களைக்கொண்டு அவற்றிற்குரிய எழுத்துகளை எழுதிச் சொல் உருவாக்குக.
ஒவ்வொரு வடிவமும் ஓர் எழுத்தைக் குறிக்கும்



01  வரி

02  ______

03  ______

04  ______

05  ______

06  ______

07  ______

Tamil 4th-std_Term2.indd 58 8/7/2019 6:03:44 PM

சொல் எழுதுக சொற்றொடர் அமைக்க

ம	ண	ம்	மணம்	பூக்கள் மணம் வீசும்
	ன		மனம்	மனிதருக்கு நல்ல மனம் வேண்டும்

க	லை	________	________________________________
	ளை	________	________________________________
	ழை	________	________________________________

க	ரை	________	________________________________
	றை	________	________________________________

இ	லை	________	________________________________
	ளை	________	________________________________
	ழை	________	________________________________

விடுபட்ட எழுத்துகளை நிரப்பி விடுகதைக்கு விடையைக் கண்டுபிடிக்க.

01 கரைந்து அழைப்பேன் நான் யார்?

02 கடலில் கிடைப்பேன் நான் யார்?

03 சமையலுக்கு உதவுவேன் நான் யார்?

04 இனிப்பாய் இருப்பேன் நான் யார்?

	கா		ம்	
	ச		கு	
வெ	ங்		ய	ம்
	க		ம்	பு

நீண்ட தூரம் தாவிடுவேன் தவளையும் இல்லை

குதித்துக் குதித்து ஓடிடுவேன் குதிரையும் இல்லை

பையைத் தான் கொண்டிருப்பேன் சட்டையும் இல்லை

கண்டுபிடித்த எழுத்துகளை ஒன்று சேர்த்தால் வருவேன் நான் யார்?

செயல் திட்டம்

பல்வேறு தொழில் செய்பவர்களின் படங்களை ஒட்டித் தொகுப்பு ஏடு தயாரித்து வருக.

19 உலா வரும் செயற்கைக்கோள்

II6K9Y

பட்டுக் குழந்தைகள் வாருங்கள்
பறவைக் கப்பல் பாருங்கள்
விட்டுச் சிறகை விரித்தபடி
விண்ணில் பறக்குது பாருங்கள்
உலகைச் சுற்றி வந்திடுமே
உயர உயரப் பறந்திடுமே
எல்லை இல்லா நற்பயனை
எவர்க்கும் தந்து விளங்கிடுமே
விண்வெளி ஆய்வு செய்திடவே
விண்ணில் சீறிப் பாய்ந்திடுமே
மண்ணிலுள்ள வளத்தை யெல்லாம்
உண்மை யாகச் சொல்லிடுமே
தகவல் தொடர்பில் உதவிடுமே
தன்னிச்சை யாக இயங்கிடுமே
தட்பவெப்ப நிலை யாவும்
தக்க நேரத்தில் சொல்லிடுமே
அருகில் சுற்றும் கோள்களையும்
அளவாய் நிழற்படம் எடுத்திடுமே
உருவில் சிறிய இடங்களையும்
ஒவ்வொன் றாகக் காட்டிடுமே
கனிமவளமும் கடல் வளமும்
கணக்காய்க் குறித்துக் காட்டிடுமே
மனித உயிரைக் காப்பதற்கே
புயல் மழை வருவதை உணர்த்திடுமே
இதுவரை சொன்னது எதையென்று
இன்னுங் கூடத் தெரியலையா?
அதுதான் உலாவரும் செயற்கைக்கோள்
அறிந்தே மகிழ்ச்சி கொள்வோமே!

பொருள் அறிவோம்

வானில் உலா வரும் செயற்கைக்கோளைப் பற்றி இப்பாடல் கூறுகிறது. உலகைச் சுற்றிவரும் இச்செயற்கைக்கோள், நமக்கு அளவில்லாத பயன்களை வழங்குகிறது. மண்ணிலுள்ள வளங்களை நுட்பமாகக் காட்டுகிறது. தகவல் தொடர்புக்கு உதவுகிறது. வானிலை குறித்த தகவல்களையும் உடனுக்குடன் அறிந்துகொள்ள முடிகிறது. வானில் சுழலும் கோள்களை நிழற்படம் எடுத்து, நமக்கு அனுப்புகிறது. கனிம வளத்தையும் கடல்வளத்தையும் குறிப்பிடுவதோடு ஆழிப்பேரலை (சுனாமி) போன்ற பேரழிவுகள் வருவதற்கு முன்பே அறிவித்து, மனித உயிர்களையும் காக்கிறது.

ஓசை நயமும் கருத்தும் மிக்க பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.

Tamil 4th-std_Term3.indd 1 7/20/2019 6:14:02 PM

வாங்க பேசலாம்

- பாடலை ஓசைநயத்துடன் பாடுக.
- செயற்கைக்கோள்களின் வகைகளை அறிந்துகொண்டு வந்து பேசுக.

செயற்கைக்கோள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் இந்த உலகம் எப்படி இருந்திருக்கும்?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா!

01 மண்ணிலுள்ள – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ)	மண்ணி + லுள்ள	ஆ)	மண்ணில் + உள்ள
இ)	மண் + உள்ள	ஈ)	மண்ணில் + உள்ளே

02 நிழற்படம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ)	நிழள் + படம்	ஆ)	நிழை + படம்
இ)	நிழல் + படம்	ஈ)	நிலை + படம்

03 உண்மை என்ற சொல்லின் பொருள் ....

அ)	பொய்	ஆ)	தவறு
இ)	சரி	ஈ)	மெய்

8BE9NQ

04 நற்பயன் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ)	நல்ல + பயன்	ஆ)	நன்மை + பயன்
இ)	நல் + பயன்	ஈ)	நற் + பயன்

05 அருகில் என்ற சொல்லின் எதிர்ச்சொல் ....

அ)	பக்கத்தில்	ஆ)	எதிரில்
இ)	அண்மையில்	ஈ)	தொலைவில்

வினாக்களுக்கு விடையளிக்க

01 'பறவைக் கப்பல்' எனக் குறிப்பிடப்படுவது எது?

02 செயற்கைக்கோளினால் விளையும் பயன்களுள் இரண்டைக் குறிப்பிடுக.

Tamil 4th-std_Term3.indd 2 7/20/2019 6:14:03 PM

இணைந்து செய்வோம்

இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் அமைந்துள்ள சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.
பட்டு – விட்டு

ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.
வந்திடுமே – பறந்திடுமே

பாடலை நிறைவு செய்வோம்

பஞ்சு	போன்ற	மேகமே
பார்க்க	நெஞ்சு	மகிழுமே
காற்று	வீசும்	--------
கலைந்தே	--------	--------
மக்கள்	உள்ளம்	--------
மழையாய்	--------	மேகமே!

வண்ணம் தீட்டி மகிழ்வோம்



Tamil 4th-std_Term3.indd 3 7/20/2019 6:14:03 PM

சொல் உருவாக்கலாமா!

கொடுக்கப்பட்ட சொற்களின் முதலெழுத்தை மாற்றினால், செயற்கைக்கோளுடன் தொடர்புபடுத்தலாம்.

அகவல்

தாள்கள்

தழை

அப்பம்

தனிமம்



அறிந்து கொள்வோம்





இந்தியா, வானில் செலுத்திய செயற்கைக்கோள்களுக்கு ஆரியபட்டர், பாஸ்கரர் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் வானவியலிலும் கணிதவியலிலும் சிறந்து விளங்கியவர்கள்.



செயல் திட்டம்

நம் நாட்டில் இதுவரை விண்ணுக்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்களின் பெயர்களை எழுதி வருக.

Tamil 4th-std_Term3.indd 4 7/20/2019 6:14:04 PM

20 மாசில்லாத உலகம் படைப்போம்

ஆசிரியர் வகுப்பினுள் நுழைந்தார். அவரது கைகளில் ஓர் அழைப்பிதழ் இருந்தது. அது என்னவாக இருக்கும் என்ற ஆவல் மாணவர்களின் முகத்தில் பளிச்சிட்டது.

X4LY3H

மெல்ல எழுந்த முகிலன், "அது என்ன அழைப்பிதழ் ஐயா?" என்று கேட்டான்.

'மாணவர்களே! நமது மாவட்டக் கல்வித்துறை சார்பில் அறிவியல் திருவிழா நடைபெறவுள்ளது. உங்களுடைய புதுமையான படைப்புகளை அவ்விழாவில் காட்சிப்படுத்தலாம். சிறந்த படைப்புகளுக்குப் பரிசுகள் உண்டு. நம் பள்ளி மாணவர்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு இது!" என்றபடி கையிலுள்ள அழைப்பிதழை முகிலனிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார் ஆசிரியர். முகிலன் படிப்பதை ஆர்வமுடன் கேட்ட மாணவர்கள், 'நாம் என்னென்ன மாதிரியெல்லாம் உருவாக்கலாம்' என்று சிந்திக்கத் தொடங்கினர்.

அரியலூர் மாவட்டக் கல்வித் துறை நடத்தும் மாபெரும்
அறிவியல் திருவிழா – 2020

நாள் : 28.02.2020

மாணவச் செல்வங்களின் திறமையை வெளிப்படுத்த ஓர் அரிய வாய்ப்பு!

உங்கள் அறிவியல் ஆர்வத்தினை, ஆய்வுச் சிந்தனையைப் படைப்புகளாக மாற்றிடுங்கள்! பரிசுகளை வென்றிடுங்கள்!!

தலைப்பு

மாசில்லாத உலகம்

மகிழ்வான உலகம்!

குறிப்பு

ஆய்வுகள் மாணவர்தம் சொந்த முயற்சியாகவும் இதுவரை வெளிவராத புதிய முன்னெடுப்பாகவும் அமைதல் வேண்டும்.

எதிர்கால அறிவியல் அறிஞர்களுக்கு

வாழ்த்துகள் !

இவண்,

அரியலூர் கல்வி மாவட்டம்

Tamil 4th-std_Term3.indd 5 7/20/2019 6:14:04 PM

அவர்களின் முகக்குறிப்பை உணர்ந்த ஆசிரியர்,"வழக்கமான ஆய்வுகள் போல் அல்லாமல், புதுமையாக முயற்சி செய்யுங்கள். பரிசு பெறுவதனைவிட, உங்களுடைய மாறுபட்ட சிந்தனைக்கு முன்னுரிமை தாருங்கள். அதனையே செயல்படுத்துங்கள்" என்று மாணவர்களுக்கு ஊக்கமூட்டினார்.

நாள்கள் நகர்ந்தன. அறிவியல் விழா நாளன்று....

விழா அரங்கின் வாசலில் நெடிதுயர்ந்து நின்றது ஓர் உருவம். முழுவதும் பயன்படுத்தித் தூக்கி எறியப்பட்ட மின்னணுக் கழிவுகளால் அவ்வுருவம் செய்யப்பட்டிருந்தது. பழுதான கணினிகளின் பகுதிப் பொருள்கள் ஓர் அரக்கனின் வடிவில் உருவாக்கப்பட்டிருந்தன. அதன் மார்புப் பகுதியில் ஒரு மடிக்கணினி பொருத்தப்பட்டிருந்தது. தோள்பட்டையில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. அரக்கன் பேசுவதுபோல அவ்வுருவம் பேசத் தொடங்கியது.



"அன்புக்குரியவர்களே!

நான் யாரென்று தெரிகிறதா? நீங்கள் பயன்படுத்தித் தூக்கி எறிந்த மின்னணுப் பொருள்களின் கழிவுகளால் உருவாக்கப்பட்டவன்தான் நான். இப்போது உங்கள்முன்

பேசுகிறேன். நீர், நிலம், காற்று, ஒலி போன்றவற்றில் ஏற்படும் பல்வேறு மாசுகளைப் பற்றி, நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவையெல்லாம் மனிதர்களுக்கு மிகுந்த துன்பத்தைத் தருகின்றன. அவைபோலவே, சற்றும் குறையாத பாதிப்புகள் என்னாலும் ஏற்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? ஒவ்வொரு நாளும் உங்களால் தூக்கி எறியப்படும் மின்னணுக் கழிவுகள் நிலத்தையும், சுற்றுச் சூழலையும் பெரிதும் சீர்கேட்டிற்கு உள்ளாக்குகின்றன. இவற்றை எவ்வாறு மேலாண்மை செய்வது என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. எங்களை முறையாக வகைப்படுத்தி, மறுசுழற்சி செய்வதொன்றே இச்சிக்கலுக்குத் தீர்வாகும். அதனை வலியுறுத்தவே ஓர் அரக்கனின் வடிவில் நான் வந்துள்ளேன்.

எனவே, மின்னணுப் பொருள்களைத் தேவைக்குப் பயன்படுத்துங்கள். கண்ட இடங்களில் எங்களைத் தூக்கி எறியாமல், முறையாக மறு சுழற்சிக்கு உட்படுத்துங்கள். அப்போதுதான் நாம் எந்தத் துன்பமும் இன்றி மகிழ்ச்சியாக வாழ்ந்திடமுடியும்.

"மாசில்லாத உலகம் படைப்போம்! மகிழ்வான வாழ்வு பெறுவோம்!"

என்று தங்குதடையின்றிப் பேசிக்கொண்டிருந்தது அவ்வுருவம்.

அரங்கினுள் நுழைந்த அனைவரும், மிகப்பெரிய அந்த அரக்க உருவத்தைப் பார்த்து வியந்தபடியும், அது கூறிய கருத்துகளைக் கேட்டுச் சிந்தித்தபடியும் சென்றனர். அந்த ஆண்டிற்கான சிறந்த அறிவியல் படைப்புக்குரிய விருது, முகிலனது பள்ளிக்கே கிடைத்தது.

மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமையாசிரியரும் முகிலனின் புதுமையான படைப்பைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

கணினியில் உரைகள், வசனங்கள், முழக்கத் தொடர்கள் கேட்டல்

வாங்க பேசலாம்

நீர் எதனால் மாசடைகிறது? நீர் மாசு ஏற்படுவதை எப்படித் தவிர்க்கலாம்? குழுவில் கலந்துரையாடுக.



உன் பள்ளியில் நடைபெறப்போகும் அறிவியல் கண்காட்சிக்காக நீ புதுமையாகச் செய்ய விரும்புவது என்ன?

Tamil 4th-std_Term3.indd 7 7/20/2019 6:14:04 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'மாசு' – என்னும் பொருள் தராத சொல் ....

அ) தூய்மை ஆ) தூய்மையின்மை

இ) அழுக்கு ஈ) கசடு

02 'மாசு + இல்லாத' – இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....

அ) மாசிலாத ஆ) மாசில்லாத

இ) மாசிஇல்லாத ஈ) மாசுஇல்லாத

03 'அவ்வுருவம்' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ....

அ) அவ் + வுருவம் ஆ) அந்த + உருவம்

இ) அ + உருவம் ஈ) அவ் + உருவம்

04 'நெடிதுயர்ந்து' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ....

அ) நெடிது + உயர்ந்து ஆ) நெடி + துயர்ந்து

இ) நெடிது + துயர்ந்து ஈ) நெடிது + யர்ந்து

05 'குறையாத' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ....

அ) நிறையாத ஆ) குறைபாடுடைய

இ) குற்றமுடைய ஈ) முடிக்கப்படாத

8QN8NE

வினாக்களுக்கு விடையளிக்க

01 ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் என்ன செய்தி இருந்தது?

02 அறிவியல் விழாவில் கலந்துகொள்வதற்காக மாணவர்களை ஆசிரியர் எவ்வாறு ஊக்கப்படுத்தினார்?

03 அறிவியல் விழாவில் காணப்பட்ட நெடிதுயர்ந்த உருவத்தை எப்படி உருவாக்கினர்?

04 சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு எவையெல்லாம் காரணமாக அமைகின்றன?

05 நாம் பயன்படுத்திய மின்பொருள்களை என்ன செய்யவேண்டும்?

Tamil 4th-std_Term3.indd 8 7/20/2019 6:14:05 PM

பாடுவோம் விடை கூறுவோம்

எது சரி? எது தவறு?

சொல்லு,சொல்லு!
நீயும் சொல்லு!
எதுசரி?
எது தவறு?
மேலே பார்!
கீழே பார்!
அங்கே பார்!
இங்கே பார்!
சொல்லு, சொல்லு!
நீயும் சொல்லு!
எது சரி?
எது தவறு?

கண்ட இடத்தில் குப்பையைக் கொட்டுவது	தவறு
குப்பையைக் குப்பைத்தொட்டியில் போடுவது	சரி
பயன்படுத்தாதபோதும் மின்விளக்கை எரிய விடுவது	
நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது	
சாலையின் ஓரமாக நடந்து செல்வது	
பறவைகளையும் விலங்குகளையும் துன்புறுத்துவது	

தொடர் இரண்டு; விடை ஒன்று கண்டுபிடிப்போமா?

1. காலைக்குப் பின்னால் வரும்; கழுத்தில் வந்து விழும் ------
2. ஆடையுமாகும்; அறிவையும் தரும் ------

மொழியோடு விளையாடு

ஒரு சொல்லுக்கு இருபொருள் எழுதுக.

01 அணி < வரிசை / அணிந்துகொள்

02 ஆடு <

03 நாடு <

04 படி <

05 ஓடு <

06 மெய் <

கலையும் கை வண்ணமும்

காகிதக் குவளை செய்வோமா!

செய்முறை

தேவையான பொருள்: பயன்படுத்திய தாள் ஒன்று.



இயற்கையைக் காப்போம்

வாடி வதங்கிய மரங்கள்; வண்ணம் இழந்த இலைகள்; காய்ந்து கருகிய பூக்கள்; வறண்ட பூமி; வற்றிக் கிடக்கும் ஆறு; வெண்பஞ்சு மேகம்; பசுமை இழந்து பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கும் வயல்வெளிகள்; என்னவாயிற்று? அவற்றின் அழகெல்லாம் எங்கே போயிற்று? அதோ, ஒரு வீட்டின் அருகே தண்ணீர்க் குழாய். அதில் சொட்டுச் சொட்டாக நீர். அதனை நிரப்பிக்கொள்ள எத்தனை குடங்கள் வரிசை வரிசையாக. அப்பப்பா! இந்தச் சொட்டு நீர் நாளையும் வருமா? வினாக்குறியுடன் சிறுமி.

இந்த உரைப்பகுதிக்குப் பொருத்தமான முழக்கத்தொடர்கள் எழுதுக.

நீரைச் சேமிப்போம்; நீடுழி வாழ்வோம்

---------------------------- ----------------------------

செயல் திட்டம்

உங்கள் பள்ளியில் நடைபெற உள்ள ஆண்டுவிழா, இலக்கிய மன்ற விழா போன்றவற்றுள் ஏதேனும் ஒரு விழாவுக்கு அழைப்பிதழ் உருவாக்குக.

Tamil 4th-std_Term3.indd 10 7/20/2019 6:14:05 PM

21 காட்டுக்குள்ளே பாட்டுப்போட்டி

காடே அமைதியாய் இருந்தது. வீசிய காற்றில் மரக்கிளைகள் அசைந்தன. இலைகள் உரசும் சத்தம் தவிர மற்றபடி எங்கும் ஒரேஅமைதி. சேவல் ஒன்று தயங்கியபடி வந்தது. சுற்றும் முற்றும் பார்த்தது. மெதுவாய் நடந்து செடிகொடிகளின் மறைவிற்கு வந்தது. 'யாராவது பார்க்கிறார்களா..?' என நோட்டமிட்டது. யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்பதை உறுதி செய்த சேவல்,"கொக்... கொக்... கொக்... கொக்கரக்கோ..!"

மெலிதாய் குரல் எழுப்பியது. வானத்தைப் பார்த்து, தலையை உயர்த்திக் "கொக்கரக்கோ... கோ... கோ..!" என இராகம் போட்டுப் பாடியது. அப்போது, திடீரென சிரிப்பொலியொன்று கேட்டது. சட்டெனப் பாட்டை நிறுத்தியது சேவல். சுற்றிலும் யாருமே இல்லை. 'யார் சிரித்தது..?' லேசாய் தைரியத்தை வரவழைத்துக் கொண்ட சேவல், "யாரது..?" என்று கேட்டது. "நாந்தான்; மேலே இருக்கேன்...பாரு!" என்று மேலேயிருந்து குரல் வந்தது.

Tamil 4th-std_Term3.indd 11 7/20/2019 6:14:06 PM

நிமிர்ந்து பார்த்தது சேவல். மரக்கிளையில் குரங்கு ஒன்று உட்கார்ந்திருந்தது. "என்ன… பாட்டு பலமா இருக்கு. என்ன விசேஷம்..?" என்று குரங்கு கேட்டது. சேவலுக்கு வெட்கம் வந்துவிட்டது.

"ஒண்ணுமில்லே. நாளைக்குக் காட்டில பறவைகளுக்கான பாட்டுப் போட்டி நடக்குதில்லே. அதுல கலந்துக்க எனக்கும் ஆசை. அதான், பாடிப் பயிற்சி எடுக்கிறேன்..!" என்றது சேவல். "ஆகா… கதை அப்படிப் போகுதா! நல்லாத்தான் பாடுறே. நாளைக்குப் போட்டியில நீயும் பாடு; என் மனமார்ந்த வாழ்த்துகள்..!" என்றபடி, அடுத்த கிளைக்குத் தாவியது குரங்கு. "ரொம்ப நன்றி..!" என்று சேவலும் தலையாட்டியது. மறுநாள்….

மொத்தக் காடுமே ஒன்றுகூடி விட்டது. போட்டியில் கலந்துகொள்ள வந்த பறவைகள் மேடையருகே வரிசையில் நின்றன. ஒவ்வொருவரின் பெயரையும் ஆந்தை மாமா எழுதிக்கொண்டே வந்தது.

குருவி மேடைக்குப் பறந்து வந்தது. ஒலிபெருக்கி முன்னே நின்றது. "அன்பு நண்பர்களே! இன்று நம் காட்டில் அனைத்துப் பறவைகளுக்கான பாட்டுப் போட்டி நடைபெறுகிறது. இதில் நன்றாகவும் அதிக நேரமெடுத்தும் பாடவும் வேண்டும்; அனைவரும் இரசிக்கும்படியான பாட்டாகவும் இருக்க வேண்டும். அப்படியான பாடலை யார் பாடுகிறார்களோ, அவர்களுக்கே பரிசு வழங்கப்படும். என்ன போட்டியாளர்களே, தயார்தானே..?" என்று கேட்டது குருவி. "நாங்க தயார்..!" என்று பறவைகள் குரல் கொடுத்தன.

"இந்தப் போட்டிக்கு நடுவராக இருந்து, நல்ல தீர்ப்பினை வழங்கிட, உங்கள் அனைவரின் சார்பாக நம்ம மயில் மேடைக்கு வருமாறு அன்போடு அழைக்கிறேன்..!" என்று குருவி சொன்னது. ஒய்யாரமாகத் தோகை விரித்தபடி மேடையேறி அமர்ந்தது நடுவர் மயில்.

"முதலில் பாட மைனாவை அழைக்கிறேன் !" என்று சொன்னதும், மேடைக்கு வந்த மைனா. "பிக்பி…பிக்பி…பிபிக்பி…பிக்பி…" என்று ஐந்து நிமிடம் பாடியது மைனா. அதற்குள் தொண்டை கட்டிவிட்டது. "நல்லாப் பாடினீங்க. போதும்..!" என்று நடுவர் மயில் சொன்னதும், மைனா தன் இடத்துக்குப் பறந்துபோனது. "அடுத்த போட்டியாளராக உங்களுக்குப் பிடித்தமான பாடலைப் பாட வருகிறார் கிளியரசன்…" என்று நடுவர் சொன்னதும்,

"கீ… கீ… கீ… கிக்கீ… கிக்கீ…" எனத் தலையை நீட்டிநீட்டிப் பாடியது கிளியரசன்.

பாடலைக் கேட்ட சில விலங்குகள் எழுந்து ஆட்டம் போட ஆரம்பித்தன. விசில் சத்தம் விண்ணைத் தொட்டது. பத்து நிமிடங்கள் தொடர்ந்து பாடிய கிளிக்கு, மூச்சு முட்டியது. பாட்டை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி வந்தது.

Tamil 4th-std_Term3.indd 12 7/20/2019 6:14:06 PM

"நம்ம அடுத்த போட்டியாளர் சேவல். வாங்க… மேடைக்கு!"

அறிவிப்பு வந்ததும், பக்கத்தில் இருந்த குரங்கைப் பார்த்தபடியே, மேடைக்கு வந்தது சேவல்.

"கொக்… கொக்… கொக்கரக்கோ… கோ…"

தூங்கிக் கொண்டிருந்த ஒன்றிரண்டு கரடிகளும் விழித்துக் கொண்டன. சேவலைப் பார்த்து, "தூங்கிறவங்களை எழுப்புறதே உன் பாட்டா இருக்கு. அருமையான பாட்டு. போதும்ப்பா, நிப்பாட்டு..!" என்று மற்ற பறவைகள் கத்தின.சேவல் வெட்கத்தோடு கீழே இறங்கியது. அடுத்து படபடவென இறக்கைகளை அடித்தபடி மேடையேறியது கழுகு. தலையை முன்னும் பின்னுமாய் ஆட்டிக்கொண்டே பாடியது கழுகு.

"கொவ்வ்… கொவ்வ்… கொவ்வ்வ்வ்வ்…"

காடெங்கும் எதிரொலித்தது பாட்டு. மான்குட்டிகள் பயந்து போய்விட்டன. சில பயத்தில் அழுதன. சில எழுந்து ஓடத் தொடங்கின. இதைப் பார்த்துச் சிரித்த யானைக்குக் கண்ணில் நீரே வந்துவிட்டது.

"இப்பப் பாடப்போறது, நம்ம கொக்கு..!" மயில் சொன்னதும் கை தட்டல் ஓசை பலமாய் எழுந்தது. மேடைக்கு வந்த கொக்கு,

"கர்… க்கர்… க்கர்..." என்று இரண்டுமுறை இராகம் போட்டு இழுத்தது.

"என்னாச்சு..? பாடு, பாடு..!" கூட்டத்தில் ஒரே கூச்சல். "இம்புட்டுத்தான் என் பாட்டு..!"என்று சிரித்தபடியே பறந்து போனது கொக்கு. அடுத்து, குயில் மேடைக்கு வந்தது. உற்சாகமாய் எல்லாமும் எழுந்து நின்று கைகளைத் தட்டின. குயிலுக்கு நிறைய விலங்குகள் இரசிகர்களாய் இருந்தன. ஒவ்வொன்றாக எழுந்து நின்று குயில் குமாரிக்குப் பூங்கொத்துகளைக் கொடுத்தன. வாழ்த்துகளைச் சொல்லி அனுப்பி வைத்தன. குயிலுக்கு ரொம்பவும் பெருமை தாங்கவில்லை. குதித்துக் குதித்து மேடையேறியது.

"க்கூ… குக்கூ… குக்கூ… கூ… குக்கூ… கூகூ…"

குயிலின் பாட்டிற்கு மொத்தக் கூட்டமும் எழுந்து ஆடியது.

"கூக்கூ… குக்கூ… கூக்கூகூகூ…ஐந்து, பத்து, பதினைந்து நிமிடம்வரை குயில் பாடியது. அதற்குமேல் மூச்சுத் திணறவே, பாடலை நிறுத்திவிட்டு இறங்கி வந்தது குயில். "இன்னும் கொஞ்ச நேரம் பாடு… குயிலு..!" கூட்டத்திலிருந்து இரசிகர்கள் குரல் எழுப்பினார்கள்.

Tamil 4th-std_Term3.indd 13 7/20/2019 6:14:07 PM

"நமது போட்டியின் கடைசிப் போட்டியாளராக காக்கா வருகிறார்..!" மொத்தக் கூட்டமும் அமைதியானது. "பெரிசாப் பாட வந்திடுச்சு..!" என்றது மரங்கொத்தி. "நீயெல்லாம் பாடலேன்னு யாரு கேட்டா..?" வம்புக்கு இழுத்தது நாரை.

காக்கா எதையும் கேட்டுத் தயங்கி நிற்காமல், மேடைக்குத் துணிச்சலாய் வந்தது. ஒரே கூச்சல். "நீ ரொம்ப நல்லா பாடுவே. போதும்டா… சாமி..!" என்று சில விலங்குகள் கத்தின. நடுவர் மயில் அனைவரையும் சத்தம் போடாமல் அமைதியாய் உட்கார வைத்தது. காக்கா மெல்ல தன் குரலைச் செருமியது. "கா… கா… கா…"

மெல்லிய குரலில் முதலில் பாட ஆரம்பித்தது. கூச்சல்போட்டுப் பாட விடாமல் தடுத்த விலங்குகள், சற்றே ஆச்சரியத்தோடு கவனித்தன. "கா… கா… கா கா கா கா..!" ஓர் எழுத்திலேயே புதுப்புது இராக ஆலாபனைகள். சுருதி கூட்டிப் பாடிக்கொண்டே இருந்தது காக்கா. "ஏம்ப்பா, நல்லாத்தான் பாடுது..!" என்றன பாட்டைக் கேட்ட விலங்குகள். "ககா… கக கா… கக ககா கா கா…" என்று பாடலில் சுருதியைக் கூட்டிக்கொண்டே பாடியது காக்கா. கேலி செய்த பறவைகளுக்கு என்னவோ போலாகிவிட்டது. அவை அனைத்தும் எழுந்து, பாட்டிற்கேற்ப ஆட்டம் போடத் தொடங்கின. புலி புவனா, "பிரமாதம்..!" என்றது. "ஆகா… என்ன சுருதி சுத்தம். அற்புதம்..!" என்று தலையாட்டி இரசித்தது சிங்க ராஜா.

"கா… கா க கா… கா ககா ககா ககா..!" தன் பாட்டை எந்தத் தடுமாற்றமுமின்றித் தொடர்ந்தது காக்கா. மொத்தக் கூட்டமும் கை தட்டிப் பாராட்டின. சரியாய் அரைமணி நேரத்திற்கு, காக்காவின் பாட்டுமழை நன்றாக வெளுத்து வாங்கியது. இப்படி ஒரு பாட்டை இதுவரை காட்டில் எந்த விலங்குமே கேட்டதில்லை. புலி எழுந்துவந்து, காக்காவைக் கட்டிப் பிடித்துக் கொண்டது.

பாட்டுப்போட்டிக்கான தீர்ப்பைச் சொல்ல மேடையிலிருந்த ஒலிபெருக்கி முன் நடுவர் மயில் வந்தது.

"பாருங்க. காக்கா பாட வர்றபோது கேலி செஞ்சீங்க. ஆனா, தயங்கி நிற்காம, விடாமுயற்சியோட பாடுச்சு. அது மட்டுமில்ல, நிறைய பயிற்சி எடுத்துப் புதுப்புது இராகத்தில பாடியிருக்கு. அதுவும் நீங்க எல்லாருமே கை தட்டி பாராட்டுற அளவுக்கு அரைமணி நேரம் பாடியிருக்கு. எல்லாரோட குரலுக்கும் ஈர்ப்பு ஒன்னு இருக்கு. அதுபோல ஒவ்வொரு குரலுக்குள்ளும் அழகுமிருக்கு. நமக்கு இன்னிக்குத்தான் காக்கா குரலோட சிறப்பு தெரிஞ்சிருக்கு. முயற்சியும் பயிற்சியும் இருந்தா எல்லாராலும் பாடமுடியும்னு இந்தப் போட்டி மூலமா காக்கா நிரூபிச்சுக் காட்டியிருக்கு. தான் பாடியதோடு மற்றவர்களுக்கும் ஒரு தன்னம்பிக்கையை ஊட்டிய காக்காவிற்கே

Tamil 4th-std_Term3.indd 14 7/20/2019 6:14:07 PM

இந்தப் பாட்டுப் போட்டியில் முதல்பரிசு வழங்கிப் பாராட்டுகின்றேன்..!" என்று நடுவர் மயில் தன் தீர்ப்பை அறிவித்தது.

காட்டின் எல்லா விலங்குகளும் இதை ஆமோதித்தன. "ஆகா… நல்ல தீர்ப்பு..!" என்று ஒற்றுமையாய் குரல் எழுப்பின நடுவர் மயில் 'பாட்டு ராணி' பட்டத்தை காக்கா தலையில் கிரீடமாய்ச் சூட்டியது.

அனைவருக்கும் நன்றி கூறி, மேடையிலிருந்து பறந்து சென்றது காக்கா.

வாங்க பேசலாம்

- கதையில் நடுவர் மயில் கூறும் தீர்ப்பு சரியானதா? உம் கருத்தைச் சொந்தநடையில் கூறுக.
- உங்கள் பள்ளியில் நடைபெற்ற பாட்டுப்போட்டி நிகழ்வுகள் குறித்துப் பேசுக.

சிந்திக்கலாமா?

போட்டியில் வெற்றி பெறுவதைக்காட்டிலும் பங்கேற்பதுதான் இன்றியமையாதது என்று உன் தந்தை கூறுகிறார். ஏன் தெரியுமா?

MC4LGX

வினாக்களுக்கு விடையளிக்க

01 காட்டில் நடந்த போட்டியின் பெயர் என்ன?

02 காக்காவின் பாட்டைக் கேட்ட சிங்கராஜா என்ன கூறினார்?

03 'பாட்டு ராணி' பட்டம் பெற்ற பறவை எது?

Tamil 4th-std_Term3.indd 15 7/20/2019 6:14:08 PM

புதிர்களைப் படிப்போம்! விடை காண்போம்! படத்துடன் பொருத்துவோம்!

இரவில் உணவு தேடிடுவேன்,
தலைகீழாகத் தொங்கிடுவேன்.
நான் யார்?

கரைந்து கரைந்து அழைத்திடுவேன்,
கூட்டமாக வாழ்ந்திடுவேன்.
நான் யார்?

பச்சைநிறத்தில் இருந்திடுவேன்,
பழங்களைக் கொத்தித் தின்றிடுவேன்.
நான் யார்?

மழை வருமுன்னே உணர்த்திடுவேன்,
தோகை விரித்து ஆடிடுவேன்.
நான் யார்?

வெண்மை நிறத்தில் நானிருப்பேன்,
ஒற்றைக் காலில் நின்றிடுவேன்,
நான் யார்?

மீண்டும் மீண்டும் சொல்வோம்

- ஒரு குடம் எடுத்து அரைக்குடம் இறைத்துக் குறைகுடம் நிரப்பி நிறைகுடம் ஆக்கினான்.
- துள்ளி எழுந்து பள்ளி சென்றாள் வள்ளி. அவளுடன் மெள்ள மெள்ள வந்து சேர்ந்து கொண்டாள் அல்லி.

Tamil 4th-std_Term3.indd 16 7/20/2019 6:14:09 PM

கலையும் கைவண்ணமும்

காகிதத்தில் கரடி செய்வோம்



அறிந்து கொள்வோம்



- ஆண்மயிலுக்குத்தான் தோகை உண்டு.
- ஆண் சிங்கத்துக்குத்தான் பிடரிமயிர் உண்டு.
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 முறை கொத்தும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் வரை பறக்கும் திறன் கொண்டது.

செயல் திட்டம்

எவையேனும் ஐந்து பறவைகளின் படங்களை ஒட்டி, அவற்றைப்பற்றி ஐந்து வரிகள் எழுதி வருக.

Tamil 4th-std_Term3.indd 17 7/20/2019 6:14:09 PM

22 ஆனந்தம் விளையும் பூமியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி – சுகம்

கோடி விளைந்திடக் கும்மியடி

நமது இன்னல் போனதடி – என்று

நெஞ்சம் நெகிழ்ந்தே கும்மியடி

பாவலர் புகழும் பூமியடி– நம்

பாரதம் என்னும் தேசமடி

ஆனந்தம் விளையும் பூமியடி– புகழ்

ஆரம் கொண்ட தேசமடி

அறிவில் சிறந்த தேசமடி–நல்

அறிஞர்கள் வாழும் பூமியடி

மலையாய் உயர்ந்த தேசமடி– பெரும்

வளமும் கொண்ட பூமியடி

இந்தியா நமது தேசமடி– நீ

இணைந்து ஒன்றாய் வாழ்ந்திடவே

மண்ணைத் தாயாய் போற்றிடடி.–உன்

கண்ணைப் போலக் காத்திடடி

வாங்க பேசலாம்

- நமது இந்திய நாட்டின் பெருமைகள் குறித்து உமது கருத்துகளைப் பகிர்ந்து கொள்க.
- உங்கள் ஊரிலுள்ள சிறப்புவாய்ந்த இடங்களைப் பற்றி, உமது கருத்துகளை எடுத்துக் கூறுக.

கண்ணைப்போல காக்கவேண்டும் எவ்வாறு?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'இன்னல்' – இச்சொல்லின் பொருள் ....

அ) மகிழ்ச்சி ஆ) கன்னல்

இ) துன்பம் ஈ) இன்பம்

02 கும்மியடி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) கும்மி + யடி ஆ) கும் + மியடி

இ) கும் + மடி ஈ) கும்மி + அடி

03 ஆனந்தம் – இச்சொல்லின் எதிர்ச்சொல் ....

அ) மகிழ்ச்சி ஆ) வருத்தம்

இ) அன்பு ஈ) கோபம்

QQSNP8

Tamil 4th-std_Term3.indd 19 7/20/2019 6:14:10 PM

04 ஒரே ஓசையில் முடியாத சொற்கள் ....

அ) தேசமடி – பூமியடி ஆ) போற்றிடடி – காத்திடடி

இ) கும்மியடி – கோடி ஈ) போனதடி – போற்றிடவே

05 கும்மியாட்டத்தைக் குறிக்கும் படம் ....

அ)

ஆ)

இ)

ஈ)

மொழியோடு விளையாடு

படங்களின் பெயரை எழுதுக. பெயரின் முதல் எழுத்துகளில் உருவாகும் சொல்லுக்குரிய படத்துடன் இணைக்க.

கடல்

விறகு

தையல் இயந்திரம்







கவிதை

Tamil 4th-std_Term3.indd 20 7/20/2019 6:14:11 PM

பாடலில் இடம்பெற்றுள்ள ஒத்த ஓசைச் சொற்களை எழுதுக.



பொருத்துக

1. பாரதம், தேசம்	–	இன்னல்
2. ஆனந்தம், சந்தோஷம்	–	அன்னை
3. நெஞ்சம், உள்ளம்	–	மகிழ்ச்சி
4. துன்பம், துயர்	–	நாடு
5. தாய், அம்மா	–	மனம்

அறிந்து கொள்வோம்



நாட்டுப்புறக் கலைகள் என்பவை நாட்டுப்புற மக்களின் உணர்ச்சி வெளிப்பாடாகும். இந்த உணர்ச்சிகள் பாடலாகவும், ஆடலாகவும் மக்களிடையே வெளிப்படுகின்றன.

செயல் திட்டம்

உமது ஊரில் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டு, எழுதி வருக.

FJ1D3Z

23 கணினி உலகம்

மதி, பூவிழி இருவரும் நல்ல தோழிகள். இருவரும் கோடை விடுமுறையில் வெளியூருக்குச் சென்றிருந்தனர். விடுமுறை முடிந்து பள்ளி தொடங்கும்முன் இருவரும் சந்திக்கின்றனர். அப்போது....

பூவிழி தோழி! நலமாக இருக்கிறாயா?

மதி ஓ! நலமாக இருக்கிறேனே. விடுமுறையை எப்படிக் கழித்தாய்? எங்கேயாவது வெளியூருக்குச் சென்றாயா?

பூவிழி ஆமாம், மதி. என் மாமாவின் திருமணம் சென்னையில் நடைபெற்றதால், நான் அங்குச் சென்றிருந்தேன்.

மதி அப்படியா! சென்னையில் சுற்றிப் பார்ப்பதற்கு நிறைய இடங்கள் இருக்கிறதே. அங்கு நீ கண்டுகளித்த இடங்களைப் பற்றிச் சொல்லேன்.

பூவிழி சென்னை, நம் ஊரைப்போல இல்லை. அடுக்குமாடிக் கட்டடங்கள், அகன்ற சாலைகள், மெரினா கடற்கரை, விமான நிலையம், மிகப்பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம், உயிர்க்காட்சிச் சாலை, பொழுதுபோக்கு மையங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்கா என எல்லாம் புதுமையிலும் புதுமையாக இருந்தன.

மதி அதுசரி, பூங்கா என்றால் செடி, கொடி, மரம்தானே இருக்கும். அது என்ன தகவல் தொழில் நுட்பப் பூங்கா? அதை நீ எங்குப் பார்த்தாய்?

பூவிழி சென்னையில் தரமணி ராஜுவ்காந்தி சாலையில்தான் அந்தத் தொழில் நுட்பப் பூங்காவைப் பார்த்தேன். பதின்மூன்று அடுக்கு மாடிகளுடன் அது செயல்பட்டு வருகிறதாம்.

மதி தொழில் நுட்பப் பூங்காவில் என்னென்ன பணிகள் நடக்கின்றன?

பூவிழி அங்கே கணினி தகவல் தொழில் நுட்பச் செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மதி கணினி தகவல் தொழில்நுட்பமா? இப்போது எங்கு பார்த்தாலும் கணினியைப் பற்றித்தான் பேசுகிறார்கள். உனக்கு ஒரு செய்தி தெரியுமா? நம் பள்ளியில்கூட கையடக்கக் கணினியைப் பயன்படுத்தப் போகிறார்களாம். நாமும் அதன் செயல்பாட்டை எளிதாகக் கற்றுக்கொண்டு, கற்றல் திறனை வளர்த்துக் கொள்ளலாமாம். அதனால், கணினி பற்றி நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

பூவிழி எனக்கும்கூட தெரிந்துகொள்ள ஆவல்தான். யாரிடம் கேட்கலாம்? அடடே, நான் மறந்துபோய்விட்டேனே, என் அத்தை அந்தத் தொழில்நுட்பப் பூங்காவில்தான் பணியாற்றுகிறார். அவர், நேற்றுத்தான் சென்னையிலிருந்து வந்தார்.வா, மதி! நாம் அவரிடமே சென்று கேட்கலாம்.

(பூவிழியும் மதியும் அத்தையைக் கண்டு தங்கள் எண்ணத்தைத் தெரியப்படுத்துகின்றனர். அத்தையும் அவர்களுக்குக் கணினி பற்றி விளக்கமாகக் கூறத் தொடங்குகிறார்.)

அத்தை கணினி என்பது, நாம் தரும் உள்ளீடுகளைப் பெற்று அதனைச் செயல்படுத்தி அதற்கேற்ற வெளியீடுகளைத் தரும் ஒரு மின்னணு சாதனம். இதனைச் சார்லஸ் பாப்பேஜ் கண்டுபிடித்தார். முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கணினி அளவில் மிகப் பெரியது. அதனை எளிதாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்ல இயலாது. ஆனால், இப்போதோ கையடக்க வடிவிலேகூடக் கணினிகள் உருவாக்கப்படுகின்றன.

மதி ஆமாம், ஆமாம். நாங்கள்கூடக் கேள்விப்பட்டுள்ளோம். எங்களுக்குக் கணினியின் முதன்மையான பகுதிகள் எவை என்று சொல்லுங்களேன்.

அத்தை மையச் செயல்பாட்டுப் பகுதி (CPU), கட்டுப்பாட்டகம் (Control unit), நினைவகம் (Memory) உள்ளீடு மற்றும் வெளியீடு (Input and output) இவைதாம் ஒரு கணினியின் முதன்மையான பகுதிகள்.

பூவிழி அத்தை, இவற்றைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்க.

அத்தை சொல்கிறேன். மையச் செயல்பாட்டுப்பகுதி என்பது, செய்நிரல் அடிப்படையில் கணிதச் செயல்பாடுகளை அமைக்கும். கட்டுப்பாட்டகம் என்பது, செய்திகளைத் திரளாகச் சேமித்து வைத்திருக்கும். செய்திகள்/ தகவல்களை நிலையாகச் சேமித்து வைக்கும் இடம்தான் நினைவகம். மையச் செயலகம் ஒருங்கிணைந்த உள்ளீடு, வெளியீடு கருவிகளைத் தன்னுள் பெற்றிருக்கும்.

மதி கணினியின் அமைப்பைத் தெளிவாகக் கூறினீர்கள். அதன் செயல்பாடுகள் பற்றியும் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளோம்.

அத்தை நீங்கள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் கணினியை இயக்க உதவும். அதைப்பற்றி நான் விளக்குவதைவிடக் கணினியை உங்கள்முன் இயக்கிக்காட்டும்போது இன்னும் எளிதாகப் புரியும். ஆனால், இங்குக் கணினி இல்லாததால், அதில் பயன்படும் கருவிகள், செயலிகள் பற்றி அறிந்து கொள்வோம்.

பூவிழி புரிகிறது அத்தை. கணினியில் உள்ளீடு, வெளியீடு கருவிகள் உள்ளன என்று கூறினீர்களே, அவைபற்றிச் சொல்லுங்களேன்.

அத்தை சொல்கிறேன் பூவிழி. விசைப்பலகை (Keyboard), சுட்டி (Mouse) போன்றவை உள்ளீட்டுக் கருவிகள். காட்சித்திரை (Monitor), கணினிஅச்சுப்பொறி (Printer) போன்றவை வெளியீட்டுக் கருவிகள்.

Tamil 4th-std_Term3.indd 23 7/20/2019 6:14:12 PM



மதி தரவு (Data), பதிவேற்றம் (Upload), பதிவிறக்கம் (Download) என்று கூறுகிறார்களே, அப்படி என்றால் என்ன?

அத்தை கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள். நாம் கணினிக்குக் கொடுக்கும் தகவல்கள்தாம் தரவுகள் (Data). தரவுகள் பதிவு செய்வதைப் பதிவேற்றம் (upload) எனவும், தகவல் பெறுவதைப் பதிவிறக்கம் (Download) எனவும் அழைக்கிறோம்.

மதி நன்றாக விளக்கினீர்கள். வலைத்தளம் (Website) பற்றியும் சொல்லுங்களேன்.

அத்தை கணினிகளின் தொடர்ச்சியான வலை அமைப்புகள் சேர்ந்திருக்கும் இணைப்பே வலைத்தளம் அல்லது இணையம் ஆகும். இதன்மூலம் எந்தவொரு நாட்டு நிகழ்வுகளையும் நாம் நேரடியாகக் காண முடியும்.

பூவிழி வியப்பாக உள்ளது அத்தை. இணையம் மூலமாகக் கடிதமும் எழுதலாம் என்று கூறுகிறார்களே, அது எப்படி?

அத்தை ஓ! மின்னஞ்சல் (Email ID) பற்றிக் கேட்கிறாயா? கணினிகளுக்கு இடையே இணையத்தின் வாயிலாகச் செய்யப்படும் தகவல் பரிமாற்றமே மின்னஞ்சல். இதன்மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம்.

Tamil 4th-std_Term3.indd 24 7/20/2019 6:14:12 PM

மதி இப்போதெல்லாம் புலனம் (Whatsapp) முகநூல் (Facebook) சுட்டுரை (Twitter) என்றெல்லாம் அடிக்கடி கேள்விப்படுகிறோமே, அவையெல்லாம் என்ன என்று கூறுங்கள்.

அத்தை நீங்கள் கூறியவற்றை வலைத்தளச் செயலிகள் (Webapps) என்று அழைப்பர். இவற்றைச் செயலி உருவாக்கம் (Play store) சென்று, நம் மின்னஞ்சல் முகவரி கொடுத்து உருவாக்கி, நம் கருத்துகளைப் பதிவிடலாம் அல்லது பெறலாம்.

பூவிழி மிக்க நன்றி, அத்தை. எங்களுக்குக் கணினிபற்றி நன்கு அறிமுகப்படுத்தினீர்கள். நாங்கள் அறிந்துகொண்டதை எல்லாருக்கும் எடுத்துச் சொல்வோம்.

அத்தை உங்கள் இருவருக்கும் தேடல் பண்பு உள்ளது. புதிய செய்திகளை அறிந்துகொள்ள மிகவும் ஆர்வம் காட்டுகிறீர்கள். ஆகையால், உங்கள் அறிவை நாள்தோறும் வளப்படுத்திக் கொள்ள மறந்துவிடாதீர்கள். உங்களோடு உரையாடியதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எங்களுக்கும் மகிழ்ச்சி. போய் வருகிறோம், நன்றி! என்று சொல்லிவிட்டு மதியும் பூவிழியும் வீட்டுக்குச் சென்றனர்.

திறன்: சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும்

வாங்க பேசலாம்

கணினியின் திரைபோன்று செய்து கணினியைப் பற்றிப்பேசுக.

சிந்திக்கலாமா?

அழகன், புத்தகத்தில் மட்டுமே படிக்கமுடியும் என்கிறான்.

அவன் நண்பனோ கணினியிலும் படிக்கலாம் என்கிறான்.

இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

5C92HR

01 சார்லஸ் பாப்பேஜ் கண்டறிந்த அறிவியல் கருவி ....

அ) தொலைக்காட்சி ஆ) கணினி

இ) கைப்பேசி ஈ) மடிக்கணினி

02 இப்போதெல்லாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) இப்போது + எல்லாம் ஆ) இப்போ + எல்லாம்

இ) இப்போதே + எல்லாம் ஈ) இப்போ + வெல்லாம்

03 நினைவகம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) நினை + வகம் ஆ) நினை + அகம்

இ) நினைவு + வகம் ஈ) நினைவு + அகம்

04 மின் + அஞ்சல் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) மின்அஞ்சல் ஆ) மின்னஞ்சல்

இ) மினஅஞ்சல் ஈ) மினஞ்சல்

05 பதிவேற்றம் – இச்சொல்லின் பொருள் ....

அ) தகவல் ஆராய்தல் ஆ) தகவல் வரிசைப்படுத்துதல்

இ) தகவல் பதிவுசெய்தல் ஈ) தகவல் பெறுதல்

வினாக்களுக்கு விடையளிக்க.

01 சென்னையில் பூவிழி கண்டுகளித்த இடங்கள் யாவை?

02 கணினியின் முதன்மைப் பகுதிகளை எழுதுக.

03 இணையம் என்றால் என்ன?

04 மின்னஞ்சல் எதற்குப் பயன்படுகிறது?

குறிப்புகளைப் படித்துச் சொற்களைத் தேர்ந்தெடுப்போமா?

காட்சிகளைக் காண்பது

செய்தியைக் குறிக்கும் வேறு பெயர்

படங்களுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வது

கணினியின் தொடர்ச்சியான வலை அமைப்பு

தகவல்களைப் பதிவு செய்தல்

மொழி விளையாட்டு

கை என்னும் சொல்லை முதலெழுத்தாகக் கொண்டு பல சொற்களை உருவாக்கலாமா?

கைக்குட்டை

____

____

செயல் திட்டம்

- கணினியில் படம் வரைந்து வண்ணம் தீட்டுக.
- நாளிதழ், வார இதழ்களில் வெளியாகும் கணினி பற்றிய செய்திகளைப் படங்களுடன் உன் குறிப்பேட்டில் ஒட்டி மகிழ்க.

விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை நிரப்பிக் கடிதத்தை முழுமையாக்குவோம்

____

____

அன்புள்ள அத்தை,

நாங்கள் அனைவரும் ________. அதுபோல ________ அனைவரின் ________ அறிய ஆவல்.

அடுத்த வாரம் ________ ஊரில் ________ கண்காட்சி நடைபெற ________. அதில் பல்வேறு ________ காட்சிக்கு வைக்கப்படும். ________ வளர்ச்சிக்கு ________ பல்வேறு நூல்களை ஒரே ________ கண்டு மகிழலாம். ________யில் கலந்து கொள்ள கதிரையும் கோமதியையும் அனுப்பினால் நாங்கள் ________ சேர்ந்து ________ பார்த்து மகிழ்வோம். பல ________ வாங்கிப் ________ பயன் பெறுவோம்.

எனவே ________யும் அனுப்பி வைக்குமாறு ________ வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள

____

உள்நாட்டு அஞ்சல் அட்டை

பெறுநர் முகவரி

____

____

____

அஞ்சல் குறியீட்டு எண் □□□□□□

இரண்டாவது மடிப்பு

அனுப்புநர் முகவரி

____

____

அஞ்சல் குறியீட்டு எண் □□□□□□

Tamil 4th-std_Term3.indd 28 7/20/2019 6:14:15 PM

24 மலையும் எதிரொலியும்

தந்தையும் மகனும் மலைப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரென்று மகன் கீழே விழுந்து அடிபட்டு, "ஆஆஆஆஆஆஆ!!!" என்று கத்தினான்.

என்ன ஆச்சரியம்! அவனுடைய சத்தம் அவனுக்கே திருப்பிக் கேட்டது, "ஆஆஆஆஆ ஆ ஆ!!!"

அவன் ஆவலுடன் "யார் நீ" என்று கேட்டான். திரும்ப அவனுக்கு "யார் நீ" என்ற ஒலி கேட்டது.

"உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது" என்று மலையைப் பார்த்து அவன் கத்தினான்.

உடனே மலையும் "உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது" என்று பதிலளித்தது.

இதைக் கேட்டதும் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "உன்னால் நேரில் வர முடியாதா?" என்று திட்டினான்.

அவனுக்கு மறுபடியும் அதே பதிலே வந்தது. "உன்னால் நேரில் வர முடியாதா?"

அவன் தன்னுடைய தந்தையைப் பார்த்து "அப்பா இங்கு என்ன நடக்கிறது?" என்று கேட்டான்.

அவனுடைய அப்பா சிரித்துக் கொண்டே, "மகனே! கவனமாகக் கேள்!" என்றார்.

Tamil 4th-std_Term3.indd 29 7/20/2019 6:14:15 PM

இப்பொழுது அவர் மலையைப் பார்த்து "நீ ஒரு வெற்றி வீரன்" என்றார். அந்த மலையும் "நீ ஒரு வெற்றி வீரன்" என்று திரும்பிச் சொன்னது.

அந்தச் சிறுவனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது. ஆனால், அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுடைய அப்பா, இதை எல்லாரும் எதிரொலி என்று கூறுவர். ஆனால், வாழ்க்கைக்கான தத்துவம் இது. நாம் தருவதை எல்லாம் அது நமக்குத் திருப்பித் தரும். நம்முடைய வாழ்க்கை நம்முடைய செயல்பாட்டின் எதிரொலிதான். அடுத்தவர் உன்மீது அன்பு செலுத்த வேண்டும் என விரும்பினால் அடுத்தவர் மீது நீ அன்பு செலுத்த வேண்டும்.

நீ மற்றவர்களிடம் அதிகமான திறமையை எதிர்பார்த்தால், முதலில் உன்னுடைய திறமையை அதிகரித்துக் கொள்.

நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையே வாழ்க்கையும் நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது.

உன்னுடைய வாழ்க்கை எதிர்பாராமல் நடக்கும் ஒன்றன்று; அது உன்னுடைய எதிரொலிதான் என்று கூறி முடித்தார் தந்தை.

நீதி: நாம் செய்கின்ற செயல்களே நன்மையையும் தீமையையும் விளைவிக்கின்றன.

9673PQ

வாங்க பேசலாம்

- மலைப்பகுதிக்குச் சென்றிருக்கிறீர்களா? உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பேசுக.

மேலே உள்ள இரண்டு படங்களிலும் நீங்கள் காண்பது என்ன? இருவரில் யாருடைய செயல் சிறந்தது?

Tamil 4th-std_Term3.indd 30 7/20/2019 6:14:16 PM

வினாக்களுக்கு விடையளிக்க

01 தந்தையும் மகனும் எங்குச் சென்று கொண்டிருந்தனர்?

02 சிறுவன் பேசியபோது மலை என்ன செய்தது?

03 சிறுவன் "நான் அன்பு கொண்டவன்" என்று சொல்லியிருந்தால் மலை என்ன சொல்லி இருக்கும்?

04 இக்கதையின் மூலம் தந்தை மகனுக்குக் கூறிய அறிவுரை யாது?

கலையும் கைவண்ணமும்

வண்ணம் தீட்டி மகிழ்வோம்

விடுகதைக்குரிய சரியான படத்தைத் தேர்ந்தெடுப்போமா?

01 வட்டமாய் இருந்திடுவேன் உண்ணுவதற்கே என்னை வாங்குவர். ஆனால் என்னை யாரும் உண்ணுவதில்லை. நான் யார்?

02 உயரமாய் இருந்திடுவேன்; பச்சை ஆடை உடுத்தியிருப்பேன்; குளிர்ச்சியான தண்ணீரைக் கொட்டுவேன். நான் யார்?



03 நீல நிறமாய்த் தோன்றிடுவேன். ஓயாமல் அலைந்திடுவேன். தவழ்ந்து தவழ்ந்து வந்திடுவேன். நான் யார்?

04 நீ பார்த்தால் நானும் பார்ப்பேன். நீ சிரித்தால் நானும் சிரிப்பேன். நீ செய்தால் நானும் செய்வேன். நான் யார்?



05 தரையிலே ஊர்ந்திடுவேன். வானத்திலே பறந்திடுவேன். கடலைத் தாண்டிடுவேன். மக்களைச் சுமந்து செல்வேன். நான் யார்?

Tamil 4th-std_Term3.indd 32 7/20/2019 6:14:17 PM

மொழியோடு விளையாடு

குறிப்புகளைப் படி, விடையைக் கண்டுபிடி

01
மூன்றெழுத்துச் சொல்
நடு எழுத்து எடுத்துவிட்டால்
படுக்கச் சொல்லும்
காஞ்சிபுரம் இதனால் புகழ் பெறும்

02
நான்கெழுத்துச் சொல்
முதல் இரண்டு எழுத்து விடச்சொல்லும்
கடை இரண்டு எழுத்து பாட்டி சொல்வார்
முதலும் கடையும் வித்தாகும்.

03
ஐந்தெழுத்துச் சொல்
முதல் இரண்டும் இனிக்கும்
கடைசி மூன்றும் பறக்கும்
முதலும் கடையும் தேடும்
அது என்ன?

அறிந்துகொள்வோம்



உலகின் மிக உயரமான சிகரம்
– இமயமலையில் உள்ள எவரெஸ்ட்

தமிழ்நாட்டின் மிக உயரமான சிகரம்
– ஆனை மலையிலுள்ள ஆனைமுடி

செயல் திட்டம்

உனக்குப் பிடித்த செல்லப் பிராணி எது? அதனிடம் நீ எவ்வாறு நடந்து கொள்வாய்? எழுதி வருக.

Tamil 4th-std_Term3.indd 33 7/20/2019 6:14:17 PM

எழுவாய், பயனிலை அறிவோமா?

எழுவாய், பயனிலை அறிமுகம்

சொற்கள் தொடர்ந்து அமைவதே தொடர். ஒரு தொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் இருக்கும். இவற்றுள், செயப்படுபொருள் இல்லாமலும் வரலாம். எழுவாய் தோன்றாமலும்கூட வரலாம். ஆயினும், எழுவாயும் பயனிலையும் ஒரு தொடரில் இன்றியமையாத கூறுகளாக விளங்குகின்றன.



எழுவாய்

முல்லை படம் வரைந்தாள்.

படம் வரைந்தவர் யார் என்னும் வினாவுக்கு விடையாக வரும் முல்லை என்னும் சொல்லே எழுவாய்.

குரங்கு மரத்தில் ஏறியது.

எது மரத்தில் ஏறியது? என்னும் வினாவுக்கு விடையாக வரும் குரங்கு என்னும் சொல்லே எழுவாய்.



ஒரு தொடரில் யார், எவர், எது, எவை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவதே எழுவாய்.

பயனிலை

அவன் வந்து . . . . . .

அவன் வந்து சென்றான்

மேற்கண்ட இரு தொடர்களுள் முதல் தொடர் முழுமை பெறவில்லை. ஆனால், இரண்டாம் தொடர் முழுமை பெற்றுள்ளது. ஆகவே, 'சென்றான்' என்பது, இத்தொடரின் பயனிலை.

Tamil 4th-std_Term3.indd 34 7/20/2019 6:14:17 PM

ஒரு தொடரை முழுமை பெறச் செய்யும் சொல்லே பயனிலை.

பயனிலையின் வகைகள்



பயனிலை மூன்று வகைப்படும். அவையாவன:

பெயர்ப் பயனிலை

அவன் வளவன்

இத்தொடரில் அவன் என்பது எழுவாய், வளவன் என்பது பெயர்ப் பயனிலை.

வினைப் பயனிலை

குமரன் பாடினான்

இத்தொடரில், குமரன் என்பது, எழுவாய். பாடினான் என்பது, வினைப் பயனிலை.

வினாப் பயனிலை

நீ யார்?

இத்தொடரில், நீ என்பது, எழுவாய். யார் என்பது, வினாப் பயனிலை.



வளவன் நல்லவன்

வளவன் சென்றான்

வளவன் யார்?

Tamil 4th-std_Term3.indd 35 7/20/2019 6:14:17 PM

☞ பெயரைக் கொண்டு முடிவது, பெயர்ப் பயனிலை

☞ வினையைக் கொண்டு முடிவது, வினைப்பயனிலை

☞ வினாவைக் கொண்டு முடிவது, வினாப்பயனிலை.

- ஒரு தொடரின் பயனிலையைக் கொண்டே எழுவாயை அறியலாம்.
- எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடங்களோடு இயைந்துவரும்.

கீழ்க்காணும் தொடர்களில் எழுவாயைக் கண்டறிந்து வட்டமிடுக.

1. குழந்தை சிரித்தது.
2. கண்ணன் படம் வரைந்தான்.
3. பூங்கோதை பள்ளி சென்றாள்.
4. அண்ணன் தம்பிக்கு உதவினான்.
5. பறவைகள் வானில் பறந்தன.
6. பசு புல் மேய்ந்தது.

கீழ்க்காணும் தொடர்களைப் பயனிலைகளுக்கேற்றவாறு அட்டவணைப்படுத்துக.

1. அவர் சிறந்த மருத்துவர்.
2. என்னை அழைத்தவர் யார்?
3. அருளரசன் நல்ல மாணவன்.
4. நேற்று அழகன் ஊருக்குச் சென்றான்.
5. முக்கனிகள் யாவை?
6. புலி உறுமியது.

வ. எண்	பெயர்ப் பயனிலை	வினைப் பயனிலை	வினாப் பயனிலை
1	அவர் சிறந்த மருத்துவர்	–	–
2			
3			
4			
5			
6			

Tamil 4th-std_Term3.indd 36 7/20/2019 6:14:17 PM

25 நீதிநெறி விளக்கம்

5RI1HF

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும் – நவையஞ்சி
ஈத்துணாச் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலின் பூவாமை நன்று

– குமரகுருபரர்

பாடல் பொருள்

பலர் நிறைந்த அவையிலே, உடல் நடுங்கித் தம் கருத்தை எடுத்துக்கூற முடியாமல் தடுமாறுபவர் பெற்ற கல்வியும், அவையினர்முன் கல்வியறிவில்லாதவர் பேசும் பொருளற்ற ஆரவாரச் சொல்லும், செய்யத் தக்கவற்றைச் செய்யாமையால் ஏற்படும் குற்றத்துக்கு அஞ்சிப் பிறருக்குக் கொடுத்து எஞ்சியவற்றை உண்ணாதவரின் செல்வமும், வறுமையுற்றவரிடத்தே உள்ள இனிய அழகும் உண்டாதலைவிட உண்டாகாமல் இருப்பதே நல்லது.



Tamil 4th-std_Term3.indd 37 7/20/2019 6:14:18 PM

சொல்பொருள்

மெய் – உடல், விதிர்ப்பார் – நடுங்குவார், கல்லார் – படிக்காதவர், ஆகுலச்சொல் – பொருளற்ற ஆரவாரச் சொல், நவை – குற்றம், அஞ்சி – அச்சமுற்று, நல்கூர்ந்தார் – வறுமையுற்றார், பூத்தல் – உண்டாதல்

நூல் குறிப்பு

நீதிநெறிகளை விளக்குவதற்குக் கருவியாக இருப்பதால் இந்நூல், நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. திருக்குறளில் கூறப்பெற்றுள்ள அறவுரைகள் பலவற்றையும் தொகுத்துச் சுருக்கமாகவும் தெளிவாகவும் இந்நூல் விளக்குகிறது. இந்நூலை இயற்றியவர் குமரகுருபரர்.

வாங்க பேசலாம்

- செய்யுளின் பொருள் உணர்ந்து படித்து மகிழ்க.
- முதன்முதலில் மேடையில் பேசிய அனுபவத்தை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

சிந்திக்கலாமா?

ஜீனத் நன்றாகப் படிப்பவள். ஆனால், வகுப்பில் ஆசிரியர் ஏதாவது கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தயங்குவாள். அவள் கூச்சத்தை எவ்வாறு போக்கலாம்?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

UJQPW7

01. 'நவை' என்னும் சொல்லின் பொருள் ....

அ) அச்சம் ஆ) மகிழ்ச்சி

இ) வருத்தம் ஈ) குற்றம்

02. 'அவையஞ்சி' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) அவைய + அஞ்சி ஆ) அவை + அஞ்சி

இ) அவை + யஞ்சி ஈ) அவ் + அஞ்சி

03 'இன்னலம்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) இன் + னலம் ஆ) இன் + நலம்

இ) இனிமை + நலம் ஈ) இனிய + நலம்

04 'கல்லார்' – இச்சொல்லின் எதிர்ச்சொல் ....

அ) படிக்காதவர் ஆ) கற்றார்

இ) அருளில்லாதவர் ஈ) அன்பில்லாதவர்

வினாக்களுக்கு விடையளிக்க

01 கல்வி கற்றவரின் இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும்?

02 பொருளற்ற சொற்களை அவையினர்முன் பேசுபவர் யார்?

03 பூத்தலின் பூவாமை நன்று என்று நீதிநெறி விளக்கம் எவற்றைக் குறிப்பிடுகிறது?

முதல் எழுத்து ஒன்றிவரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

01 அவையஞ்சி – அவையஞ்சா

02 ____________ – ____________

03 ____________ – ____________

மொழியோடு விளையாடு

குறிப்புகளைப் படி. சொல்லிலிருந்தே சொல்லைக் கண்டுபிடி.

விலங்குகள் வாழுமிடம்	பாலைவனம்	வனம்
பூவின் வேறு பெயர்	பொன்மலர்	
பிறருக்குக் கொடுப்பது	கொடைக்கானல்	
விலங்குகளுக்கு மட்டும் உண்டு	வௌவால்	
பால் தரும் வீட்டுவிலங்கு	கடற்பசு	

Tamil 4th-std_Term3.indd 39 7/20/2019 6:14:19 PM

இணைந்து செய்வோம்

சங்குச் சக்கரத்தைச் சுழற்றிக் கல்வியின் பெருமைகளை உணர்த்தும் சொற்றொடர்களை முறையாக எழுதுக.

1.

2.

3.

அறிந்து கொள்வோம்



கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்

அவையல்ல நல்ல மரங்கள் – சபை நடுவே

நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பு அறிய

மாட்டா தவன்நல் மரம்

பாடற்பொருளை ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொள்க.

செயல் திட்டம்

நாளிதழ்கள் மற்றும் சிறுவர்மலர் இதழ்களில் வெளிவரும் கல்விதொடர்பான செய்திகளைத் தொகுக்க (தேவையான கால இடைவெளி தருக.)

Tamil 4th-std_Term3.indd 40 7/20/2019 6:14:19 PM

26 உறவுமுறைக் கடிதம்

XYES4H

எண். 4, தில்லை நகர்,

கடலூர்.

20.03.2020

அன்புள்ள இளவேனில்,

நான் நலம், நீ அங்கு நலமா? உன்னோடு சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள ஆசை. என்னவென்று அறிந்தால் நீயும் மகிழ்ச்சி அடைவாய். என் பள்ளியில் "பாரம்பரிய விளையாட்டு விழா" நடைபெற்றது. உள்ளரங்கு விளையாட்டுகளும் வெளியரங்கு விளையாட்டுகளுமாய்க் களைகட்டியது விழா. நாம் எத்தனை விளையாட்டில் வேண்டுமென்றாலும் பங்கு பெறலாம்.

நான் பாண்டிஆட்டம், கபடி முதலிய வெளிவிளையாட்டுகளிலும் தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி முதலிய உள்விளையாட்டுகளிலும் கலந்துகொண்டேன். உடலுக்கு மட்டுமன்று; அறிவுக்கும் ஆற்றல் தரும் விளையாட்டுகள் நம் தமிழக விளையாட்டுகள். பாண்டி ஆட்டம் ஒருமுகப்படுத்தும் திறன், கூர்மைப் பண்பு, குதிதிறன் ஆகியவற்றைத் தருகிறது.

"பலிஞ்சடுகுடு, சடுகுடு, சடுகுடு"

ஊசி ஊசி கம்மந்தட்டு, ஊட்டப் பிரிச்சிக் கட்டு, காசுக்கு ரெண்டு தட்டு,

கருணைக் கிழங்குடா, தோலை உரியடா,

தொண்டையில வையடா..வையடா..வையடா

என்று பாடியபடி நாங்கள் ஆடிய கபடி, பார்வையாளரையும் மகிழ்ச்சிப்படுத்தியது. "பாடலோடு ஆடல்" தெரியும். பாடலோடு விளையாட்டு எங்களுக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

பிற்பகலில் நான் பல்லாங்குழி ஆடினேன். என் சிந்தனையைச் சிதறாமல் வளர்க்கும் ஆற்றல்மிகு விளையாட்டு அது. இருப்பவரிடம் இருந்து இல்லாதவர்க்குக் கொடுக்கும் நற்பண்பை உணர்த்துகிறது. தாயவிளையாட்டில் என் கண்கள் தாயத்தின் மீதே இருந்தன. விழும் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஏறுவதும் இறங்குவதுமாய்.... அப்பப்பா.... என் ஆர்வத்தைத் தூண்டியது. ஏற்றத்திற்கான நல்ல வழிகளையும், இறக்கத்திற்கான தீய வழிகளையும் தெரிந்து கொண்டேன். வாழ்வின் அவசியமான ஒழுக்கத்தை அறிந்துகொள்ளும் சரியான விளையாட்டு அது.

Tamil 4th-std_Term3.indd 41 7/20/2019 6:14:19 PM

"கல்லாட்டம்", ஐந்தாங்கல் போன்ற விளையாட்டுகள் சீனா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலும் விளையாடப்படுகின்றன. தூக்கிப்போட்டு விளையாடும்போது 'கவனச் சிதறல்' வராமல் ஒருமுகப்படுத்தி வெற்றி பெறுதல் பயிற்சி ஆகிறது. அடுத்த கல்லில் விரல்படாது எடுத்து ஆடுகையில், விரலின் பங்கோடு எண்ணமும் சரியாகப் பங்காற்றுகிறது. கைகளுக்கு வலிமை சேர்க்கிறது.

'கரும்பு தின்னக் கூலியா?' என்று சொல்வார்களே அதுபோல், எனக்கு விருப்பமான விளையாட்டுகளை எல்லாம் ஆசை தீர விளையாடினேன். அந்த நாள் முழுவதும் சோலையில் சுற்றும் தேனீபோல மகிழ்வுடன் விளையாடினேன். என்னோடு நீயில்லாதது மட்டும் சிறு வருத்தம். நீயும் உன் பள்ளியில் கொண்டாடப் போகும் இதுபோன்ற விழாவில் கலந்துகொண்டு இன்புற வேண்டும். நம் பாரம்பரிய விளையாட்டுகள் பெருமையின் அடையாளம் மட்டுமன்று; நன்மையின் விளைநிலமும் ஆகும். இக்கடிதம் குறித்து உன் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

என்றும் அன்புடன்,

குறள்செல்வி

உறை மேல் முகவரி:

தி. இளவேனில்

எண். 2/10, கீழ மாசி வீதி,

மதுரை.

வாங்க பேசலாம்

• உறவுமுறைக் கடிதத்தில் உள்ள செய்திகளை சொந்த நடையில் கூறுக.

நவீன் தான் நினைப்பதையெல்லாம் தன் மாமாவிடம் சொல்ல நினைப்பான். ஆனால், அலைபேசியில் பேசும்போது அத்தனையும் மறந்துவிடுவான்.

குழலி, தான் பேச நினைப்பதையெல்லாம் ஒன்றுவிடாமல் கடிதத்தில் எழுதித் தன் அக்காவுக்கு அனுப்புவாள்

மேற்கண்ட சூழல்கள் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? எது சிறந்தது என நீ கருதுகிறாய்?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 நற்பண்பு – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) நல்ல + பண்பு ஆ) நற் + பண்பு

இ) நல் + பண்பு ஈ) நன்மை + பண்பு

02 பின்வருவனவற்றுள் எது உள்ளரங்க விளையாட்டு இல்லை? ....

அ) தாயம் ஆ) ஐந்தாங்கல்

இ) பல்லாங்குழி ஈ) கபடி

03 பாரம்பரியம் – இச்சொல்லுக்குரிய பொருளைத் தராத சொல் ....

அ) அண்மைக்காலம் ஆ) தொன்றுதொட்டு

இ) தலைமுறை ஈ) பரம்பரை

வினாக்களுக்கு விடையளி

01 தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள் எவை?

02 உள்ளரங்க விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.

03 கடிதத்தில் இடம்பெற்றுள்ள பழமொழியின் பொருள் யாது?

JCYEAY

Tamil 4th-std_Term3.indd 43 7/20/2019 6:14:20 PM

மொழியோடு விளையாடு

உங்களுக்குப் பிடித்த விளையாட்டுகளைக் கட்டத்தில் கண்டறிந்து எழுதுக.

கி	ளி	த்	த	ட்	டு	கா
ப	ம்	ப	ர	ம்	கு	யா
ல்	அ	ம்	மா	னை	டு	ப
லா	தா	ய	ம்	ம	ச	ழ
ங்	ஆ	டு	பு	லி	கோ	மா
கு	ஐ	ந்	தா	ங்	க	ல்
ழி	கி	ட்	டி	ப்	பு	ள்

______________ ______________ ______________

கலையும் கைவண்ணமும்

இராக்கெட் செய்வோம்! செடிக்கு நீர் ஊற்றுவோம்!

உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

விளையாட்டும் பொழுதுபோக்கும் ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம்பெறுவன. சங்க காலத்தில் இளையவரும் முதியவரும் பலவகையான விளையாட்டுகளிலும் பொழுதுபோக்குகளிலும் ஈடுபட்டனர். அவற்றுள் ஒன்று, ஏறு தழுவுதல். முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள், கூரிய கொம்புகளை உடைய காளைகளை அடக்குவதனை வீர விளையாட்டாகக் கருதினர்.



01 ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடப்படுவன யாவை?

02 ஏறு தழுவுதல் என்றால் என்ன?

03 உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள எதிர்ச்சொற்களை எழுதுக.

04 ஏறு தழுவுதல் எந்த நிலத்துடன் தொடர்புடையது?

05 நிரப்புக. ஏறு தழுவுதல் என்பது, ------------ விளையாட்டு. (உள்ளரங்க/ வெளியரங்க)

அறிந்து கொள்வோம்



கடிதத்தில் அனுப்புநர், பெறுநர் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். இல்லையெனில் அனுப்பியவர்க்கே திரும்பி வந்துவிடும்.

செயல் திட்டம்

எவையேனும் பத்து விளையாட்டுகளின் பெயர்களையும் அவற்றிற்குரிய படங்களையும் திரட்டிப் படத்தொகுப்பை உருவாக்குக.

Tamil 4th-std_Term3.indd 45 7/20/2019 6:14:21 PM

27 அறிவுநிலா



புதிர்க்கதை

ஓர் ஊரில் அண்ணனும் தம்பியும் வாழ்ந்து வந்தனர். அவர்களில் தம்பி வறுமையில் வாடினான். அண்ணனோ செல்வச் செழிப்பில் இருந்தான். தம்பி ஒருநாள், அண்ணனிடம் சென்று, தனக்கு ஒரு பசுவை வழங்குமாறு கேட்டான். தம்பியிடம் பசுவைக் கொடுப்பதற்குமுன் "தன் நிலத்தில் அவன் நாள்தோறும் வந்து, ஓராண்டு உழைக்க வேண்டும்" என்று அண்ணன் சொன்னான்.

தம்பியும் ஏற்றுக்கொண்டான். அண்ணனுடைய நிலத்தில் ஓராண்டு முழுவதும் உழைத்தான். ஓராண்டு முடிந்தபின் தம்பி, அண்ணனிடம் வேலைக்குச் செல்லவில்லை. மறுநாளே பசுவைத் திருப்பிக்கேட்டான் அண்ணன்.

"ஓராண்டு உன் நிலத்தில் உழைத்தேன் அல்லவா, பசு எனக்குத்தான் ! என்றான் தம்பி.

அண்ணன், "அதெப்படி முடியும்? ஓராண்டுக் காலம் நீ என் பசுவிடம் பால் கறந்து பலனை அனுபவித்தாய் அல்லவா? அதனால் இரண்டிற்கும் சரியாகிவிட்டது" என்றான். இருவருக்கும் வாய்ச்சண்டை முற்றியது. அதனால், இருவரும் தங்களுக்குச் சரியான தீர்ப்பைத் தேடி, பெரியவர் ஒருவரிடம் சென்றனர். வழக்கை விசாரித்த பெரியவர் அவர்கள் இருவருக்கும் மூன்று புதிர்களைக் கொடுத்து, இவற்றிற்குச் சரியான பதில்களை யார் சொல்கிறீர்களோ அவர்களுக்குத்தாம் பசு" என்று கூறிப் புதிரைச் சொன்னார்.

Tamil 4th-std_Term3.indd 46 7/20/2019 6:14:22 PM

"முதல் புதிர், மனிதனுடைய வயிற்றை நிரப்புவது எது? இரண்டாவது புதிர், மனிதனுக்கு மிக மகிழ்ச்சியைத் தருவது எது? மூன்றாவது புதிர், அதிவிரைவாகச் செல்வது எது? இந்த மூன்று புதிர்களுக்கும் நாளை விடை கூறுங்கள்" என்றார்.

இருவரும் வீட்டிற்குவந்து நெடுநேரம் சிந்தித்தனர் மறுநாள் காலை பெரியவரைச் சந்தித்தனர் மூத்தவனைப் பெரியவர் அழைத்து "என் புதிருக்கு விடை சொல்!" என்றார்.

அண்ணன், அவரிடம், "பெரியவரே! ஒரு மனிதனுடைய வயிற்றை நிரப்புவது எது என்று கேட்டீர்கள். அதற்குச் சரியான விடை அறுசுவை உணவு சாப்பிட்டால் வயிறு நிரம்பும். பல மணி நேரம் பசிக்காது.

இரண்டாவது மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தருவது எது என்று கேட்டீர்கள். அதற்கு விடை பணம். பணம் பெட்டி நிறைய இருக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது தெரியுமா? பணம் குறையக் குறைய மகிழ்ச்சியும் குறையும். மூன்றாவதாக அதி விரைவாகச் செல்வது எது என்று கேட்டீர்கள். அதற்குச் சரியான விடை வேட்டை நாய். வேட்டை நாய்கள் விரைவாக ஓடி. முயல்களைக்கூடப் பிடித்து விடுகின்றனவே" என்று சொல்லிவிட்டுப் பெரியவரைப்பார்த்து, "பசு எனக்குத்தானே" என்று கேட்டான்.

மூத்தவனே, நீ சொன்ன அனைத்தும் தவறான பதில்கள் என்றார் பெரியவர்.

Tamil 4th-std_Term3.indd 47 7/20/2019 6:14:23 PM

இளையவன் அழைக்கப்பட்டான். அவன் பெரியவரைப் பார்த்து, "நம் வயிற்றை நிரப்புவது பூமி. பூமித்தாயிடம்தான் நாம் உண்ணும் தானியங்களும், கிழங்குகளும் கிடைக்கின்றன. அந்த உணவால்தான் விலங்குகளும், பறவைகளும் வாழ்கின்றன. இரண்டாவதாக, ஒரு மனிதனுக்கு அதிக மகிழ்ச்சி தருவது தூக்கம், தூக்கத்திற்காக விலையுயர்ந்த செல்வத்தையும் மனிதன் விட்டுவிடுவான். மூன்றாவது அதிவிரைவாகச் செல்வது நமது சிந்தனை ஓட்டம் அது நாம் விரும்பியபோது, விரும்பிய இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும்" என்றான்.

"ஆஹா! சரியான விடைகள். இந்தப் பசு உனக்குத்தான் என்று பசுவைக் கொடுத்தபின் பெரியவர் கேட்டார்" இந்தப் புதிர்களுக்கு உனக்கு விடை கூறியது யார்? என்றார்.

" என் மகள் கவின்நிலா! "

" அவள் என்ன அவ்வளவு புத்திசாலியா?" என்றார் பெரியவர்

" ஏதோ கொஞ்சம்" என்றான் இளையவன்.

"அப்படியா? என் அளவிற்கு அவளுக்கு அறிவு இருக்கிறதா? என்பதை ஆராய்ந்து பார்த்துவிடுகிறேன்" என்ற பெரியவர் பத்து அவித்த முட்டைகளை அவனிடம் கொடுத்து, இதோ இந்தப் பத்து அவித்த முட்டைகளையும் உன் மகளிடம் கொடுத்து, ஒரு கோழியினால் அடைகாக்க வைத்து, பத்துக் குஞ்சுகளை ஓர் இரவிற்குள் பொரிக்க வைத்து, அதே குஞ்சுகளை அதே இரவில் கோழியாக்கி, முட்டை போட வைத்து, பத்து முட்டைகளில் மூன்றை எடுத்து அடையாக்கி நாளை காலை உணவிற்கு எனக்குக் கொண்டுவா என்றார்.

தன் மகள் கவின்நிலாவிடம் சென்று, பெரியவர் சொன்னதை அப்படியே சொன்னான் இளையவன்.

தன் மகள் இந்தப் புதிருக்கு விடை எப்படிச் சொல்லப் போகிறாள் என்று கவலைப்பட்டான். ஆனால் அவளோ எதிர் புதிர் போட்டாள். தன் தந்தையிடம் வேகவைத்த துவரைகள் அடங்கிய ஒரு பானையைக் கொடுத்து. "இதில் உள்ள துவரையை நிலத்தில் விதைத்து முற்றியவுடன் அறுத்து எனது கோழிக் குஞ்சுகளுக்கு உணவாகத் தயாராக வைக்கும்படி பெரியவரிடம் கூறுங்கள். "என்றாள் கவின்நிலா. அவளுடைய தந்தையும் அவ்வாறே பெரியவரிடம் சென்று சொன்னார்.

துவரையைப் பார்த்த பெரியவர் அவற்றை நாய்க்குப் போட்டுவிட்டு, சணல்கண்டு ஒன்றைக் கொடுத்து, "இதை ஊறவைத்து,காயவைத்து,நல்ல தரமான துணி தயாரிக்கச் சொல், " என்றார். ஆனால், அவளோ அதற்குப் பதிலாக மிக மெல்லிய குச்சி ஒன்றைக் கொடுத்து" இதிலிருந்து நூலை நூற்பதற்கு ஓர் இராட்டை செய்து தரும்படி கூறுங்கள்!" என்றாள். அவளது அறிவின் ஆழத்தைக் கண்ட பெரியவர், "உன் மகளை நாளை என்னை வந்து பார்க்கச் சொல். ஆனால்,அவள் நடக்கவோ சவாரி செய்யவோ கூடாது. வெறுங்காலுடனோ செருப்புடனோ வரக்கூடாது. பரிசுடனோ,பரிசின்றியோ வரக்கூடாது இது கடுமையான உத்தரவு!" என்றார்.

மறுநாள் பனிச்சறுக்கு வண்டியில் வெள்ளாடுகளைப் பூட்டி, ஒரு காலில் மட்டும் செருப்பு அணிந்து, முயல் ஒன்றைத் தெரியும்படியும் சிட்டுக்குருவி ஒன்றைத் தெரியாமலும் எடுத்துச் சென்றாள் கவின்நிலா. அவள் மிகுந்த புத்திசாலித்தனத்துடன் வருவதைக் கண்ட பெரியவர் அவள்மீது நாய்களை ஏவினார். பதிலுக்கு இவள் முயலை வெளியேவிட நாய்கள் முயலைத் துரத்தின. "இதோ உங்களுக்கு ஒரு சிறிய பரிசு" என்று சிட்டுக் குருவியைக் கொடுத்தாள். அது அவரது கையில் சிக்காமல் பறந்து விட்டது. தான் சொல்லியபடியே வந்துவிட்ட அவளை நினைத்துப் பெருமைப்பட்டார் பெரியவர். "கவின்நிலா, நீ புத்திசாலிதான்" என்று பாராட்டிய பெரியவர், அவளுக்குப் பரிசுகள் அளித்து அனுப்பி வைத்தார்.

நீதி : வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.
வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

வாங்க பேசலாம்

- நீங்கள் அறிந்திருக்கும் புதிர்க்கதைகளுள் ஒன்றை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

இக்கதையில் வரும் அண்ணனைப்போல் நீ இருந்தால், தம்பிக்கு என்ன செய்திருப்பாய்? கூறுக.

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

CJV5X1

01 'தினமும்' என்ற சொல்லின் பொருள் ....

அ) நாள்தோறும் ஆ) வேலைதோறும்
இ) மாதந்தோறும் ஈ) வாரந்தோறும்

02 'பனிச்சறுக்கு' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பனி + சறுக்கு ஆ) பனிச் + சறுக்கு
இ) பன + சறுக்கு ஈ) பன் + சறுக்கு

03 'வேட்டை + நாய்' – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....

அ) வேட்ட நாய் ஆ) வேட்நாய்
இ) வேட்டைநாய் ஈ) வேட்டநாய்

Tamil 4th-std_Term3.indd 49 7/20/2019 6:14:23 PM

வினாக்களுக்கு விடையளிக்க.

01 ஓராண்டு நிலத்தில் உழைத்தவர் யார்?

02 பெரியவர் சொன்ன புதிர்கள் எத்தனை?

03 புதிருக்குச் சரியான பதிலளித்தவர் யார்?

04 பெரியவர் பசுவை யாருக்குக் கொடுத்தார்?

05 கவின்நிலா பெரியவருக்குக் கொடுத்த பரிசு என்ன?

எதிர்ச்சொல்லுடன் இணைப்போமா?

குறைய	இளைத்த
மெல்லிய	முடியாது
முடியும்	மெதுவாக
விரைவாக	தடித்த
கொழுத்த	நிறைய

கலையும் கைவண்ணமும்

வரைந்து வண்ணமிட்டு மகிழ்வோம் !

பாதி என்னிடம் மீகி உன்னிடம் வரைந்து வண்ணம் கீட்டுக



Tamil 4th-std_Term3.indd 50 7/20/2019 6:14:24 PM

இணைந்து செய்வோம்

விளையாடலாம் வாங்க ! தூண்டில் மீன் விளையாட்டு !

மீன் வடிவத்தில் அட்டைகளை வெட்டிக் கொண்டு அட்டையில் பின்வரும் சொற்களை எழுதிக் கொள்ள வேண்டும். அட்டையில் குண்டூசியைக் குத்தி, வகுப்பறையின் நடுவில் வட்டமிட்டு அதில் அட்டைகளை பரப்பி வைக்க வேண்டும். ஒரு குச்சியின் நுனியில் நூலின் ஒரு முனையைக் கட்ட வேண்டும். மறுநுனியில் காந்தத்தை வைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும். வகுப்பறையில் பெரியதொரு வட்டமிட்டு வட்டத்தில் ஓர் அம்புக்குறி இடவேண்டும். வட்டத்தில் மாணவர்களை ஓடவிட வேண்டும். ஆசிரியர் ஊதலை ஊதியவுடன் மாணவர்கள் வட்டத்தில் நிற்க வேண்டும். அம்புக்குறி இட்ட இடத்தில் எந்த மாணவர் நிற்கிறாரோ அவர், தூண்டில் மூலம் ஓர் அட்டையை எடுத்து, அதில் உள்ள சொல்லுக்குப் பன்மைச்சொல் கூற வேண்டும்.

எடுத்துக்காட்டு : முட்டை – முட்டைகள்

புதிர்	வீடு	கோழி	நாய்	துணி
குச்சி	வண்டி	பரிசு	முயல்	குருவி

மொழியோடு விளையாடு

புகைவண்டி

1.	புகை	2.	வண்டி	3.	கை
4.	வடி	5.	வகை	6.	கைவண்டி

கவிதைப்பாட்டு

1.	______	2.	______	3.	______
4.	______	5.	______	6.	______

பருத்தி ஆடைகள்

1.	______	2.	______	3.	______
4.	______	5.	______	6.	______

அறிந்து கொள்வோம்



விடுகதைகளுக்கு ஒன்பது வடிவங்கள் உள்ளன. 1. புதிர் 2. சொல் விளையாட்டு 3. மாற்றெழுத்துப் புதிர், 4. வினோதச் சொற்கள், 5. எழுத்துக் கூட்டு, 6. விகடம், 7. ஓவியப் புதிர், 8. சொற்புதிர், 9. நொடிவினா

சொல்லுக்குள் சொல் கண்டுபிடி!

கொடுக்கப்பட்ட சொல்லின் பொருள் கட்டத்திலுள்ள எழுத்துகளுள் ஒளிந்திருக்கிறது கண்டுபிடித்து எழுதுக.

சதம் – ?

க	ண்	நூ	தை
எ	சி	ஃ	மி
அ	று	யா	பி

= நூறு

சித்திரம்

ஓ	ர	ய	யா
ரே	கே	ஏ	பி
ர்	ம்	ஃ	வ்
ப	ல	ஓ	வி

= __________

நட்சத்திரம்

ரி	ற்	மீ	ரு
இ	வி	லை	பே
ற்	ண்	மீ	ன்

= _________

செயல் திட்டம்

உங்கள் வீட்டிலுள்ள பெரியவர்களிடம் கேட்டு, 20 விடுகதைகள் எழுதி வருக.

Tamil 4th-std_Term3.indd 52 7/20/2019 6:14:24 PM

அகரமுதலி

அண்டை நாடு	-	பக்கத்து நாடு
அண்ணல்	-	இரக்கம் உடையவர்
அதிகம்	-	மிகுதி
அதிகரித்தல்	-	மிகுதல்
அதிர்கின்ற	-	ஒலிக்கின்ற
அபத்தமான பதில்கள்	-	பொய்யான விடைகள்
அவசியம்	-	தேவை
அற்புதம்	-	புதுமை
அழல்கதிர்	-	சூரியன்
ஆசி	-	வாழ்த்து
ஆச்சரியம்	-	வியப்பு
ஆட்டாந்தொழு	-	ஆடு கட்டும் இடம்
ஆமோதித்தன	-	உடன்பட்டன
ஆர்வம்	-	விருப்பம்
ஆல்	-	ஆலமரம்
ஆவி	-	உயிர்
ஆற்றொணா	-	தாங்கமுடியாத
ஆனந்தம்	-	மகிழ்ச்சி
இயைந்து	-	பொருந்தி
இரசிகர்கள்	-	சுவைஞர்கள்
இரசித்தல்		சுவைத்தல்
இராகம்	-	இன்னிசை
இலகுவான	-	எளிமையான
இன்சொல்	-	இனிமையான சொல்
இன்னல்	-	துன்பம்
உற்சாகம்	-	மகிழ்ச்சி/ ஊக்கம்
எண்ணும்	-	நினைக்கும்
எதிரொலி	-	ஒலியைக் கேட்டு மீண்டும் ஒலித்தல்
என்னில்	-	எனக்குள்

ஓலைக்கொட்டான்	-	ஓலையால் செய்யப்பட்ட சிறுகூடை
கனிந்து	-	பழுத்து
காவாக்கால்	-	காக்காவிட்டால்
கிரீடம்	-	மணிமுடி
குனிந்து	-	வளைந்து
கேலி	-	விளையாட்டுப் பேச்சு
கொடியடுப்பு	-	பக்க அடுப்பு
கொடியோன்	-	துன்புறுத்துபவன்
கோபம்	-	சினம்
சவாரி	-	பயணம்
சிந்தை	-	மனம்
சீர்கேடு	-	ஒழுக்கக் குறைவு
சுகம்	-	இன்பம்
சுத்தம்	-	தூய்மை
சுருதி	-	இன்னிசை
செருமியது	-	இருமியது
செவிசாய்த்தல்	-	கேட்க விரும்புதல்
சேதாரம்	-	வீணாதல்
சோகாப்பர்	-	துன்பப்படுவர்
தண்ணெண்கதிர்	-	குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி
தத்துவம்	-	உண்மை நிலை
தந்திரம்	-	சூழ்ச்சி
துயரம்	-	துன்பம்
துளிர்	-	இளம் இலை
தையலர்	-	பெண்கள்
தைரியம்	-	துணிவு
தொலைவு	-	தூரம்
நித்தம்	-	நாள்தோறும்
நிரூபித்தல்	-	மெய்ப்பித்தல்
பரம்பரை	-	தலைமுறை

Tamil 4th-std_Term3.indd 178 5/30/2019 12:22:09 PM

அகரமுதலி

பழுதான	பயன்படுத்த முடியாத	மெய்ப்பொருள்	உண்மைப்பொருள்
பாதிப்புகள்	விளைவுகள்	லேசாய்	மெதுவாய்
பாரம்பரியம்	தொன்றுதொட்டு	வம்பு	வீண்பேச்சு
புத்திசாலித்தனம்	அறிவுக்கூர்மை	வருந்தியது	துன்பமடைந்தது
பொதி	மூட்டை	வல்லமை	வலிமை
பொறாமை	காழ்ப்புணர்ச்சி	வன்சொல்	கடுஞ்சொல்
பொறை	அடக்கம்	விசாரித்தல்	ஆராய்தல்
போலி	ஒன்றைப்போல இருத்தல்	விசேஷம்	சிறப்பு
போற்றுதல்	வாழ்த்துதல்	வியனுலகம்	பரந்த உலகம்
மரியாதை	மதிப்பு	வெட்கம்	நாணம்
மாட்டாந்தொழு	மாடு கட்டும் இடம்	வெட்டவெளி	திறந்தவெளி
மனமார்ந்த	மனம் நிறைந்த	வேளாண்மை	உழவு
மன்னர்	அரசர்	வேளை	பொழுது
மாசு	குற்றம்/ அழுக்கு		
முளைப்பாரி	நவதானியங்கள் முளைத்துச் சிறிது வளர்ந்து நிறைந்துள்ள மட்பாண்டம்		

Tamil 4th-std_Term3.indd 179 5/30/2019 12:22:10 PM

கற்றல் விளைவுகள்

கேட்டல்	பேசுதல்	படித்தல்	எழுதுதல்
ஓசைநயமும் கருத்தும் மிக்க பாடல்கள், புதிர்க் கதைகளைக் கேட்டுப்புரிந்து கொள்வர். சூழ்நிலையில் தாம் உற்றுக்கேட்ட பல்வேறு விவரங்களைப் புரிந்து கொண்டு வெளிப்படுத்துவர். தொடர் வாய்மொழிக் கூற்றுகளையும் விடுகதைகளையும் கேட்டுப் புரிந்து கொள்வர். பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்டல் / வினாக்கள் எழுப்புதல் அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை/ எதிர் வினைகளை வெளிப்படுத்துவர்.	தங்குதடையின்றி இயல்பாகத் தொடர்ந்து பேசுவர். எளிய வருணனைச் சொற்களைக் கலந்து பேசுவர் தெளிவாகப் பொருள் விளங்க ஒப்பிப்பர். கதைகள், பாடல்களைத் தங்கள் சொந்த நடையில், தாம் விரும்பும் வகையில் தம் கருத்துகளையும் இணைத்துச் சொல்வர். விடுகதைகளுக்கு விடை கூறுவர். பல்வேறு படைப்புகளின் தலைப்புகள், சூழல், கதைமாந்தர்கள் குறித்துப் பேசுதல், தனிப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்துவர். எளிய வகுப்பறைக் கருத்தாடல், கலந்துரையாடலில் பங்கேற்பர். தேசிய மாநில அளவிலான, சமூக, உணர்வுபூர்வமான செய்திகளை இனங்கண்டு அவற்றின்மீது கருத்தாடல் செய்வர்.	சிறு சிறு உரைப்பகுதிகளை நிறுத்தக்குறிகளுக்கு ஏற்பப் படிப்பர். சிறு சிறு கதைகள், பாடல்களை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கப் படிப்பர். படிக்கும் பகுதியில் இடம்பெறும் பழமொழிகள், மரபுச் சொற்களை அறிவர். செய்தித்தாள்கள், சுவரொட்டிகள், அறிவிப்புகள், விளம்பரங்கள் ஆகியவற்றைப் படித்துப் புரிந்துகொள்வர். படித்து உணர்ந்தவற்றோடு தங்கள் அனுபவங்களையும் தொடர்புபடுத்துவர். உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர். தாங்கள் விரும்பும் நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிக்க ஆர்வம் கொள்வர். ஒரே பொருண்மையுள்ள பல்வேறு சொற்களுக்கு இடையிலான நுட்பமான வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்துவர்.	உரைப்பகுதியை உரிய நிறுத்தக்குறிகளுடன் எழுதுவர். எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு உரைப் பகுதிகளைத் தமக்கான நடையில் எழுதுவர். பொருத்தமான நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி எழுதுவர் திருக்குறள், செய்யுள் பகுதிகளை அடி பிறழாமல் எழுதுவர். பல்வேறு நோக்கங்களுக்கேற்ப / சூழல்களுக்கேற்ப எழுதுவர் உறவு முறைக் கடிதம் சிறுசிறு கட்டுரைகள் புதிய பொருண்மைகளை உணர்ந்து தம் சொற்களில் (பேச்சில் / எழுத்தில்) பயன்படுத்துவர். கற்பனையாகக் கதை எழுதுவர். எழுதியவற்றைத் தாமே மதிப்பீடு செய்வர்.

Tamil 4th-std_Term3.indd 180 5/30/2019 12:22:10 PM

நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்	விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன்	வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுவர்
ஐம்பால் வகையறிவர் – (ஆண்பால், பெண்பால்,	காலம் தவிறாமை	தன்னை அறியும் திறன்
பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்).	விதிகளைப்	சிக்கல் தீர்க்கும் திறன்
உரிய இணைப்புச் சொற்களைப் பொருத்தமான	பின்பற்றுதல்	முடிவெடுக்கும் திறன்
இடங்களில் சேர்த்து எழுதுவர். (ஆனால், எனவே…..).	தூய்மை பேணுதல்	கூர்சிந்தனைத் திறன்
காலம் அறிவர் (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்)	பொருள்களைப்	படைப்பாக்கச்
எழுவாய்,	பாதுகாத்தல்	சிந்தனைத் திறன்
பயனிலை அறிமுகம்	பிறர்க்கு உதவுதல்	சிறந்த தகவல் தொடர்புத்
பெயர்ப்பயனிலை,	பிற உயிர்களிடத்தில்	திறன்
வினைப் பயனிலை,	அன்பு காட்டுதல்	இணக்கமான
வினாப் பயனிலை.	கூட்டுணர்வு	உறவுக்கான திறன்கள்
குழந்தைகளுக்கான எளிய அகரமுதலிகளைப்	நட்புணர்வு	பிறரை அவர்
பயன்படுத்த அறிவர்.	உண்மை பேசுதல்	நிலையிலிருந்து
கணினியில் உரைகள், வசனங்கள்,	சேமிப்பு உணர்வு	புரிந்துகொள்ளும் திறன்
முழக்கத்தொடர்கள் கேட்பர்.	சிக்கனம்	உணர்வுகளைக்
தகவல்கள், சொற்பொருள் தேடி அறிவர்	நேர்மை	கையாளும் திறன்
கதை நூல்கள் படிப்பர்.	நன்றியுணர்வு	மன அழுத்தத்தைக்
கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும்	தன்னம்பிக்கை	கையாளும் திறன்
எழுத்திலும் பயன்படுத்துவர்		
தொழிலாளர், தொழில்சார் பெயர்கள்		
சிறப்பு வாய்ந்த நகரங்கள், ஊர்களின் பெயர்கள்		
இன்றியமையா இடங்களின் பெயர்கள் (இந்திய		
மாநிலங்கள், தமிழ்நாட்டின் மாவட்டங்கள்)		
பழமொழிகள்		
மரபுத் தொடர்கள்		
கணினி இணையம் சார்ந்த கலைச்சொற்கள்		
சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படித்தல்		
சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள்		
விளம்பரங்கள் உருவாக்குதல்		
அறிவிப்புகள், நிகழ்ச்சிநிரல் உருவாக்குதல்		
குறுந்தகவல்கள், நகைச்சுவைத் துணுக்குகள்		
உருவாக்குதல்		
பாடலின் வரிகளை மாற்றிப் பாடுதல்		
கற்பனைக் கடிதம் எழுதுதல்		

Tamil 4th-std_Term3.indd 181 5/30/2019 12:22:11 PM

தமிழ் – நான்காம் வகுப்பு
நூல் ஆக்கம்

கல்வி ஆலோசகர்

முனைவர். பொன். குமார்
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

மேலாய்வாளர்கள்

திருமதி ஆ.சே.பத்மாவதி,எழுத்தாளர், சென்னை.

திருமதி பா. மலர்விழி, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர், திருவள்ளூர்.

திரு சி. பன்னீர்செல்வம், கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

திரு இல. சீனிவாசன், முதுகலை ஆசிரியர், மஜ்ஹருல் உலூம் மேனிலைப்பள்ளி, ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர். கா.சா. மொழியரசி, முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழப்பழுவூர், அரியலூர்.

திரு ந. இராமலிங்கம், உதவிப் பேராசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

தே.விமலா தேவி, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

பக்க வடிவமைப்பு

சந்தோஷ்குமார் சக்திவேல்

வரைபடம்

கா. தனஸ் தீபக் ராஜன்
கா. நலன் நான்சி ராஜன்
ரா.ஷாலினி
வை.மை.பிராங்க் டஃப்
மதன் கங்காதரன்
பா. ரவிகுமார்
வேல்முருகன்
பா. பிரமோத்
செ. ரமேஷ்குமார்.

தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன், காமாட்சிபாலன் ஆறுமுகம்
கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ் ப
பிரசாந்த் பெருமாள்சாமி

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி அர. அனுசுயா தேவி, இடைநிலை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையாம்பாளையம், கோலியனூர் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

திருமதி பெ. முருகராணி, இடைநிலை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர், வேப்பூர் ஒன்றியம் பெரம்பலூர் மாவட்டம்.

திருமதி க. மல்லிகா, தலைமை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர், திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

திரு. பா.ச. குப்பன், இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல், காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திரு. ஆ. மாணிக்கம், இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, ஆலங்குடி, அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

திருமதி. ந. பரிமளா, தலைமை ஆசிரியர், அம்பத்தூர் நகராட்சித் தொடக்கப் பள்ளி ,வரதராஜபுரம் , வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

திரு. வெ. பாலமுருகன், பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.

திரு. ந. மாமலைவாசன், பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, இராயபுரம், திருவாரூர் மாவட்டம்.

திரு. வெ. ராஜா, இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. ந.நி. பள்ளி இராக்கியாம்பட்டி, கொங்கணாபுரம், சேலம்.

திருமதி. பி. கற்பகம் இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, ஐயப்பா நகர், வில்லிவாக்கம், திருவள்ளூர் மாவட்டம்

திரு. கு. மனத்துணைநாதன், இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, கீழ்வேளூர், நாகப்பட்டினம்.

திரு. பெ. கார்த்திகேயன், இடைநிலை ஆசிரியர் ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை, நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

இரா. ஜெகநாதன், இ.நி.ஆ, ஊ.ஒ.ந.நி.பள்ளி, கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை.

ஆ.தேவி ஜெஸிந்தா, ப.ஆ, அ.உ.நி.பள்ளி, என்.எம்.கோவில், வேலூர்

வ. பத்மாவதி, ப.ஆ, அ.உ.நி. பள்ளி, வெற்றியூர், திருமானூர், அரியலூர்.

அட்டை வடிவமைப்பு
கதிர் ஆறுமுகம்

வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்
ரமேஷ் முனிசாமி

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் அழகிய மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்: